

படைப்பு

ஊற்று: 2 | நதி: 11 | மார்ச் 2020 | திங்களிதழ்

ISSN : 2582-4015

www.padaippu.com

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

## "மொழிபெயர்ப்பு இல்லை என்றால் உலக இலக்கியமே இல்லை"

- மொழிபெயர்ப்பாளர் கே.வி.ஜெயஸ்ரீயுடனான ஒரு நேர்காணல்

• பா.ஜீவசுந்தரி • திலகபாமா • நவீனா • அமுதா தமிழ்நாடன் • முத்தரசி
• துப்பறிவாளர் யாஸ்மின் • ர.லாவண்யா • கோ.லீலா • அம்பிகா குமரன் • கே.வி.ஷைலஜா
• அன்பு மணிவேல் • கனகா பாலன் • கார்குழலி • பாலைவன லாந்தர் • ரத்னாவெங்கட்
• அனார் • குட்டி ரேவதி • அ.வெண்ணிலா • ஸ்ரீகா

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 2 | நதி : 11 | மார்ச் 2020

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**

தலைமை நிருபர்:
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**
**தமிழ் தாசன் இரவிக்குமார்**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக், திண்டுக்கல்**

ஓவியக் கலைஞர்கள்:
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே, படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** - பக். 04
- **“மொழிபெயர்ப்பு இல்லை என்றால் உலக இலக்கியமே இல்லை”**
  - மொழிபெயர்ப்பாளர் கே.வி.ஜெயஸ்ரீயுடனான ஒரு நேர்காணல் - பக். 05
- **கருச்சிதைவுக்குக் கூலி மற்றொரு கருச்சிதைவு**
  - பா.ஜீவசுந்தரி - பக். 22
- **உணர்வு போதையேற்றும் கவிதைகள் - நூல் விமர்சனம்**
  - ஸ்ரீகா - பக். 24
- **அரசியலும் பெண்களும்**
  - திலகபாமா - பக். 28
- **கல்விமுறை ஆய்வும் கௌரவ டாக்டர் பட்டமும்**
  - நவீனா - பக். 36
- **சிகரம் தொடும் சிங்கப் பெண்கள்!**
  - அமுதா தமிழ்நாடன் - பக். 37
- **மகளாகிய மானசி**
  - முத்தரசி - பக். 47
- **தனித்திரு.. ஜெயித்திரு..**
  - துப்பறிவாளர் யாஸ்மின் - பக். 49
- **ஒவ்வொரு கணமும் யோசிக்கிறேன்.. - மாணவர் பக்கம்**
  - ர.லாவண்யா - பக். 52
- **டாலுவும் டோலுவும்**
  - கோ.லீலா, அம்பிகா குமரன் - பக். 60

## சிறுகதைகள்


- **முண்டகம் செய்யப்பட்ட வாழ்க்கை**
  - மலையாள மூலம்: எம்.முகுந்தன்
  தமிழில்: கே.வி.ஷைலஜா – பக். 15
- **சித்தாளு சுசீ**
  - அன்பு மணிவேல் – பக். 30
- **வரட்டூர்வாசிகள்**
  - கனகா பாலன் – பக். 44
- **மஞ்சள் வண்ண சுவர்த்தாள்**
  - மூலம்: ஷார்லட் பெர்கின்ஸ் ஸ்டெட்சன் (கில்மன்)
  தமிழில்: கார்குழலி – பக். 53


## கவிதைகள்


- **பாலைவன லாந்தர்** – பக். 21
- **ரத்னாவெங்கட்** – பக். 27
- **அனார்** பக். 43
- **குட்டி ரேவதி** – பக். 43
- **அ.வெண்ணிலா** – பக். 51


**மகளிர்தின**
**வாழ்த்துக்கள்**





# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' இருபத்திமூன்றாம் மின்னிதழ் உங்கள் கண்முன் விரிந்துபரந்திருக்கிறது.

குடும்பம் சமூகம் என்ற இரு தடங்களிலும் தமக்கான முழு பங்களிப்பைச் செலுத்திப் பிரபஞ்ச இயக்கத்திற்கான பெரும்சக்திகளாக விளங்கும் பெண்களை மகளிர் தினத்தை முன்னிட்டுத் தகவு வணங்கி வாழ்த்துகிறது. மகளிரைப் பெருமைப்படுத்தும் வகையில் இந்த இதழில் பெண் படைப்பாளர்களின் படைப்புகளே இடம்பெற்றுள்ளன.

உலகத்தின் படைப்புகள் அனைத்தும் பெண்களால்தான் உருவாக்கப்படுகின்றன அல்லது செழுமைப்படுத்தப்படுகின்றன. எழுத்து சார்ந்த படைப்புகளில் பெண்கள் ஆதிகாலந்தொட்டு ஈடுபட்டு வந்தமைக்கு உலக இலக்கியங்கள் பல சான்றுகளாய்த் திகழ்கின்றன.

தமிழில் இலக்கியங்கள் கிடைக்கத் தொடங்கியிருக்கும் சங்ககாலம் முதலே பெண்படைப்பாளிகள் தென்படுகின்றனர். காலந்தோறுமான அவர்களின் வீச்சு தனித்த அடையாளத்துடன் உயர்ந்துகொண்டே வருகிறது. ஒப்பீட்டளவில் எண்ணிக்கையில் சிறிதெனினும் தரத்தளவில் மிகப்பெரிதாய் உள்ளது.

தமது தந்தையின் பிரிவை ஐந்தே அடிகளில் சொல்லி இரண்டாயிரம் ஆண்டுகளாய் அச்சோகத்தைச் சிறிதும் குறையாமல் கடத்திக்கொண்டிருக்கும் பாரிமகளிர்.. பேதுற்று அலைந்த பிரிவைச் சொன்ன வெள்ளிவீதியார்.. 'கடிது இவள் துணிவே' என வீரத் தாய்களின் உயர்வை உயர்த்துச் சொன்ன ஒக்கூர் மாசாத்தியார்.. 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' என எக்காலத்துக்குமான மகளிருக்கும் உரமூட்டிய ஔவையார்.. புறமுதுகிட்டான் மகன் எனில் 'முலை அறுத்திடுவன் யான்' என உரத்து வீரமுரைத்த நச்செள்ளையார்.. என எத்தனையோ உதாரணங்கள் சங்கப் பெண்களின் பாத்திறனையும் கவி உணர்வையும் விளக்கி அவர்களை வெளிச்சமிட்டுக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்டு காதலும் ஆன்மீகமுமாய் விடுதலை பேசிய ஆண்டாள்.. 'இடர்களையாரேனும் எமக்கு இரங்காரேனும் எம்மனார்க்கு அன்பு அறாது என் நெஞ்சு' எனப் பெண் உரு களைய வேண்டிய சூழலிலும் கவி பாடிய காரைக்கால் அம்மையார்.. 'எச்சிலுன் வாயும் உடலும் ஏகமாயிருக்கையிலே பாதம் எச்சிலென்று அலம்ப சுத்தமாச்சோ' எனத் துணிவுடன் பகுத்தறிவுணர்வுடன் சாடிப் பாடிய ஆவுடையக்காள் என ஆன்மீகத் தொடர்பிலும் பெண் படைப்பாளர்கள் புரட்சியாளர்கள்தான்.

பன்னூலாசிரியை எனத் தன் வீட்டின் முகப்பில் பலகை தொங்கவிட்ட தீரமிக்க முதல் இஸ்லாமியப் பெண் எழுத்தாளர் சித்தி ஜூனைதா பேகம்.. அரிதாகக் காணலாகும் அங்கதச் சுவையையே அடையாளமாக்கிக்கொண்ட குமுதினி.. தன் படைப்பாற்றலை உணர்ந்தபிறகே எழுதக் கற்ற வை.மு.கோதைநாயகி.. இது என்ன கொடுமை இதயத்தில் வெறுமை என முதுமை குறித்தும் பாடிய பூரணி.. எனச் சென்ற நூற்றாண்டின் தொடக்கம் முதலே பெண்களின் பெரும்பாய்ச்சல் படைப்பிலக்கியம் சார்ந்து தோன்றிவிட்டது. இந்த நூற்றாண்டின் இணைய வளர்ச்சி எளிய பெண்ணையும் வலிய படைப்புகள் படைக்க உற்சாகமூட்டுகிறது.. உத்வேகமளிக்கிறது.

இன்னுமின்னுமாய்ப் பெண் படைப்பாளர்கள் பல்கிப் பெருகித் தமிழ் இலக்கியப் பரப்பில் செங்கோல் ஏற்று ஆண்டுவர தகவு பெருங்கனவு காண்கிறது.

சாகித்ய அகாதமி விருது பெற்றுப் பெண்களுக்கு ஓர் ஊக்கமாய் முன்னிற்கும் கே.வி.ஜெயஸ்ரீயின் நேர்காணல் இவ்இதழில் இடம்பெற்றுள்ளது.

மேலும் பெண்களால் மட்டுமே படைக்கப்பட்டுள்ள சிறுகதைகள், கவிதைகள், நூல் விமர்சனம், கட்டுரைகள், அனுபவங்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– **ஆசிரியர்**

• கோ.லீலா



# “மொழிபெயர்ப்பு இல்லை என்றால் உலக இலக்கியமே இல்லை”

## - மொழிபெயர்ப்பாளர் கே.வி.ஜெயஸ்ரீயுடனான ஒரு நேர்காணல்

**‘நிலம் பூத்து மலர்ந்த நாள்’ நூலுக்காகச் சிறந்த மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்ய அகாதமி விருது பெற்றிருக்கும் சாதனைப் பெண் கே.வி.ஜெயஸ்ரீயுடன் உரையாடிய தருணங்கள்...**

**மூலக்கருத்தின் வீரியம் குறையாமலும் சொந்தக் கருத்துக்களைப் புகுத்தாமலும் புத்தகத்தை மொழிபெயர்க்க நீங்கள் எடுத்துக்கொண்ட பயிற்சி மற்றும் எதிர்கொண்ட சவால்கள்?**

மொழிபெயர்க்க நான் தனியாகப் பயிற்சி எதுவும் தொடக்கத்தில் எடுக்கவே இல்லை. கதை கவிதை fiction non-fiction என்ற எல்லாவிதமான புத்தக வாசிப்பும்தான் மொழிபெயர்ப்புக்கான பயிற்சியைக் கொடுத்தது. அதுமட்டுமல்லாமல் தொடக்க காலம் முதலே என்னுடைய முதல் புத்தகத்தில் இருந்து இதுவரை நான் எழுதியுள்ள

அனைத்துமே எனக்குப் பயிற்சிதான். இன்று நான் எழுதிய முதல் புத்தகத்தைப் படித்தால் எனக்குச் சிறு குழந்தை எழுதியது போல் தோன்றும். கல்லூரியில் ஒரு ஆண்டிதழுக்காக மொழி பெயர்ப்பு தொடங்கியது. அன்று முதல் இன்று வரை நான் எழுதிய அத்தனைப் புத்தகங்களும் எனக்குப் பயிற்சி கொடுத்துள்ளன. அந்தத் தொடர்ப் பயிற்சிக்கான அங்கீகாரமாகத்தான் விருதுகளைப் பார்க்கிறேன். ஒவ்வொரு முறை படிக்கும் போதும் ஒரு வாசிப்புப் புரிதலும் பயிற்சியும் கிடைக்கிறது. வாசிப்புதான் மொழிபெயர்ப்பு பக்கம் திருப்பியது.

**மலையாளம் மற்றும் பிற மொழிகளில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்தல் தமிழ் இலக்கியத்தின் செறிவை வளமாக்கியிருக்கிறது என்பது உண்மை. அதே நேரத்தில் தமிழில் உள்ள ஆகச்சிறந்த நூல்களை மொழிபெயர்ப்பது தமிழ் இலக்கியத்தின் தொன்மையை, மேன்மையை உலகெங்கும் பரவச் செய்யும்... தமிழ் நூல்களை மொழிபெயர்ப்பு செய்ய ஏதும் முன்னெடுப்புகள் உள்ளதா?**

என்னைப் போன்று மலையாளத்திலிருந்து வந்திருக்கின்ற, மலையாளத்தை மொழிபெயர்த்துக் கொண்டு இருக்கின்றவர்கள் செய்ய வேண்டிய வேலை அல்ல இது. மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டு தமிழ் அறிந்த சில மொழிபெயர்ப்பாளர்கள் செய்ய வேண்டிய வேலை இது. நான்கு மாத இடைவெளியில் நிலம் பூத்து மலர்ந்த நாள் வருகிறதென்றால் அம்முறையில் என்ன நடக்கிறது என்ற அவதானிப்பு இருக்கின்றது. ஆனால் அவர் களுக்குத் தமிழின்மீது அப்படியான அவதானிப்பு இல்லை. நான் குறை சொல்லவில்லை, அவர்கள் என்னுடைய சகோதரர்கள்தான் உறவினர்கள் தான்.

ஆனால் அவர்கள் அப்படி என்ன தமிழில் வந்துவிடப்போகிறது என நினைக்கிறார்களோ என்னவோ.. நாங்கள் அதை நேராக முகம் பார்த்துச் சொல்லி இருக்கிறோம்.. நாங்கள் மலையாளத்தின் சிறப்பைத் தமிழுக்குக் கொண்டு செல்லும்போது நீங்கள் ஏன் தமிழில் இருந்து எங்கள் இலக்கியத்தை மலையாளத்திற்குக் கொண்டு செல்லக்கூடாது என்று. ஒரு சில புத்தகங்கள் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. சாரு நிவேதிதா, சல்மா கவிதைகள், லீனா மணிமேகலை கவிதைகள், பாமா, சிவசங்கரி என மலையாளத்திற்கு வந்துள்ளது. ஆனால் அது மிகவும் குறைவு. ஒரு வருடத்தில் எவ்வளவு வந்திருக்கிறது என்றுதான் பார்க்கிறோம். அவர்கள் சமகாலத் தமிழ் இலக்கியம் என்ன செய்கிறது என்பதைப் பார்க்கவே இல்லை. அதை அங்கு எடுத்துச் செல்லவே இல்லை. சாகித்ய அகாதமி விருது என்பது ஒரு மொழியில் மனிதன் இலக்கிய உலகின் உயரத்திற்கு வரும்போதுதான் கிடைக்கும். சாகித்ய அகாதமி விருது வாங்கிய எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களின் ஒரு நூல் கூட மலையாளத்திற்குப் போகவில்லை. இப்போது தான் சிறு முயற்சி தொடங்கியிருக்கிறார்கள். அவர்களாகவே தொடங்கியிருக்கிறார்கள்.

இந்தப் பத்து நாட்களில் பாரதியார் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் என்று பல்வேறு பல்கலைக்கழகங்களுக்குச் சென்றேன். தஞ்சாவூர் துணைவேந்தர், ‘இந்தியா மற்றும் வெளிநாடுகளில் தமிழர்கள் சென்று வேரூன்றி வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தமிழும் தெரியும். அந்தப் பிராந்திய மொழியும் தெரியும். அவர்களை ஒன்று சேர்க்க வேண்டும். அதற்கான முயற்சியை எடுக்க வேண்டும்’ என்றார். அது மிகப்பெரிய உந்துசக்தியாக உற்சாகமான மகிழ்ச்சியான செய்தியாக இருந்தது. நீங்கள் கேட்ட மாதிரி எழுத்தின் மீது ஆர்வம் உள்ளவர்களுக்கு செமினார் பயிற்சியாகக் கொடுத்து மிகப்பெரிய இயக்கமாக மாற்றினால் தமிழிலக்கியம் உலகெங்கும் பரவும். இரு மொழி தெரிந்த தமிழிலக்கிய மாணவர்களைக் கொண்டு தமிழின் தொன்மையை, பெருமைகளை அண்டை மாநிலங்களுக்கு நாடுகளுக்குக் கொண்டு செல்லலாம். அது ஒரு தொடக்கமாக இருக்கட்டும். அதுவே என் ஆசையும்.



**மொழிபெயர்ப்பின் மூலம் தங்களின் மொழியாற்றல் வெளிப்படுகிறது. எனினும் ஒவ்வொரு படைப்பாளியும் தன் சொந்தச் சிந்தனைகளை, கற்பனைகளை நூலாக்கவே விரும்புவர்... அப்படியிருக்க மொழிபெயர்ப்பு செய்வது குறித்துச் சொல்லுங்கள்?**

இலக்கியவாதிகள் இடையே இரண்டாம் தாயாகக் கருதப்பட்டாலும் எனக்கு அந்தத் தாய்தான் முக்கியமானவராகத் தெரிகிறார். ஐரோப்பியா பிரஞ்சு ரஷ்யா என ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இலக்கியம் போகவில்லை என்றால் வங்கம் கன்னடம் மராட்டியம் போன்ற மொழிகளில் இருந்து இலக்கியம் வரவில்லை என்றால் தமிழ் இலக்கியம் போதுமானதா? எழுதத் தொடங்கும் அனைத்து எழுத்தாளர்களும் முதல் முயற்சியாக பயிற்சியாக மொழிபெயர்ப்பைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். ஐரோப்பிய இலக்கியத்தை மொழிபெயர்ப்பு செய்து நிறைய வால்யூம் வால்யூமாகப் புதுமைப்பித்தன் போட்டிருக்கிறார். அவர் சொந்தமாகவும் எழுதி இருக்கிறார், இல்லை என்று சொல்லவில்லை. இருந்தாலும் மொழிபெயர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். பாரதியாரின் முதல் நூல் கூட மொழிபெயர்ப்பாகத்தானிருந்தது.

**மொழிபெயர்ப்பு மேல் எப்பொழுது எதனால் உங்களுக்கு ஆர்வம் வந்தது?**

நான் டிகிரி படித்துக்கொண்டிருக்கும்போது படைப்பிலக்கியம் என்ற ஒரு சப்ஜெக்ட் இருந்தது. அதற்கு 20 மார்க் 50 மார்க் கேள்விகளைக் கொடுத்துப் பயிற்சி கொடுப்பார்கள். அப்படிக் கட்டுப்படுத்தி உட்காரவைத்து எழுத வைத்த போது எனக்கு எழுத வரவில்லை. ஆனால் பத்தாவது படிக்கும்போதிலிருந்தே எனக்கு மலையாளம் எழுதப் படிக்கத் தெரியும் மற்றும் பேச்சு மொழியாக எங்கள் வீட்டிலேயே இருந்தது. பத்தாவது விடுமுறையில் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டேன். கல்லூரிக்கு வந்தபோது மலையாளத்தையும் சேர்த்துப் படிக்க வேண்டும் என்ற ஒரு ஆர்வம் வந்துவிட்டது. மலையாளம் படிக்கும்போது ஒரு பத்திரிக்கையில் வந்த கதையைக் கல்லூரி ஆண்டு மலருக்காக நாடக வடிவில் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தேன். அதுதான் என்னுடைய முதல் மொழிபெயர்ப்பு. எல்லோரும் அதைப் பாராட்டினார்கள். அன்றிலிருந்து என்னுடைய இலக்கியப் பங்களிப்பாக மொழிபெயர்ப்பை எடுத்துக்கொண்டேன். கல்லூரி வருவதற்கு முன்பே வணிக இலக்கியம் எங்களின் கல்லூரி

சீனியரான நண்பர் பவா செல்லதுரையால் எங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

**சாகித்ய அகாதமி விருது பெறும் பெண் படைப்பாளிகள் மிகக் குறைவாகவே உள்ளனர். இந்நிலையில் தமிழகத்தின் பெருமையாக இருக்கும் நீங்கள் சாகித்ய அகாதமி நோக்கிய பயணத்தில் பெண்களின் எழுத்துக்கள் எப்படியிருக்க வேண்டுமென நினைக்கிறீர்கள்?**

சாகித்ய அகாதமியை நோக்கிய பயணமே அல்ல என்னுடையது. எந்த ஒரு படைப்பாளியும் விருதை நோக்கி ஒரு படைப்பை உருவாக்கினால் சிறந்த படைப்பாக அது இருக்காது. அப்படிப் படைக்கப்படும் படைப்பு ஒரு தொழிற்சாலையில் உருவாக்கப்படும் ஒரு பொருளாகத்தான் இருக்கும். கலையுணர்வு அழகுணர்வு எதுவுமே இல்லாமல் போய்விடும். ஒரு படைப்பை விருதுக்கு அனுப்பலாமே தவிர விருதுக்காகப் படைக்கப் படும் படைப்பு சிறந்ததாக இருக்காது. எழுதுவதில் பெண் ஆண் என்ற வித்தியாசம் இல்லை. சிறப்பாகப் பெண்கள் எழுதுகிறார்கள் என்பதைவிட பெண்ணின் எழுத்து என்பது துயரமானதாக வேதனையானதாக வலி மிகுந்ததாகவும் இருக்கிறது. அதனால்தான் 1989இல் சாகித்ய அகாதமியில் பெண்களின் பெயர் பட்டியல் ஐந்தைத் தாண்டவில்லை. படைப்பிலக்கியத்தில் மூன்று பேர்தான் வாங்கியிருக்கிறார்கள். ராஜம் கிருஷ்ணன், லக்ஷ்மி, திலகவதி, நான்காவதோ ஐந்தாவதோதான் நான் வாங்கி இருக்கிறேன்.

அவ்வளவு வேதனையையும் துயரத்தையும் சுமைகளையும் சுமந்துகொண்டேதான் ஒரு பெண் எழுதவேண்டும். ஒரு வீட்டில் ஆணும் எழுதுகிறான், பெண்ணும் எழுதுகிறாள் என்றால் ஒரு ஆண் டீ போட்டுக் கொடும்மான்னு சொல்லிட்டு உட்கார்ந்திருப்பார். ஆனால் ஒரு பெண், பொழுதுக்கான எல்லா வேலைகளையும் முடித்துவிட்டுத்தான் எழுத உட்கார வேண்டும்.

அதிர்ஷ்டவசமாக என் குடும்பம் உறுதுணையாக உள்ளது. ஒரு ஆண் பொது வெளியில் வேலைக்குச் செல்லும்போதும் எல்லாமே எளிதாகக் கிடைத்துவிடுகிறது. ஆனால் ஒரு பெண்ணுக்கு அப்படி இல்லை. எனினும் பெண்கள் எதை எழுதினாலும் சிறப்பாகவே இருக்கும். ஆனால் அவள் எழுத வருகிறாளா என்பதுதான் பிரச்சினை. பெண் செல்ல வேண்டிய தூரம் வெகு நீளமாக உள்ளது. என்னுடைய கணவர் மிக உதவியாக இருக்கிறார். அனைத்து வீட்டு வேலைகளையும் கணவரும் மகளும் செய்துதருகிறார்கள். தொடர்ந்து சமூகப் பொதுவெளியில் அனைத்துப் பெண்ணிற்குமாக நாம் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டி யுள்ளது.

**நீங்கள் மொழிபெயர்க்க புத்தகத்தை – எதன் அடிப்படையில் தேர்வு செய்வீர்கள்?**

மிக முக்கியமான கேள்விதான். தமிழில் இல்லாத தமிழ் வாசிப்பிற்குத் தர வேண்டிய புத்தகங்கள் கட்டுரை வடிவமாக கதை வடிவமாக கவிதை வடிவமாக எந்த வடிவத்தில் இருந்தாலும் அதைக் கொண்டு வருகிறேன். தமிழில் இல்லாத மலையாள மொழியில் உள்ளதைத்தான் கொண்டு வருகிறேன். அதேபோல் நாமும் எழுத வேண்டும் என்பதற்காக. அப்படித்தான் பால் சக்காரியா. நெருப்பு போல் அவர் கருத்துக்களைச் சொல்லும்போது தேவையானதாக இருக்கிறது. அவரைப் போல் எழுத வேண்டும் என விரும்புகிறேன். இதனடிப்படையில்தான் மொழிபெயர்ப்புக்கான நூலைத் தேர்வு செய்கிறேன்.

**வருங்காலத்தில் மொழிபெயர்ப்பைத் தாண்டி உங்களுடைய படைப்புகளை எதிர்பார்க்கலாமா?**

இன்றுவரை சொந்தக் கருத்தைப் படைப்பாக்க வேண்டும் என்ற எண்ணமே வரவில்லை. ஏன் என்று தெரியவில்லை. எனக்கு வரவே இல்லை. வரும்போது வரட்டும் எனக் காத்திருக்கிறேன். spontaneous flow என்று சொல்லும்படியாகத் தானாகப் பொங்கி வரும்வரை மொழி பெயர்ப்புதான் செய்வேன். மொழிபெயர்ப்பு என்பது அவ்வளவு முக்கியமானது. ஏனென்றால் மொழிபெயர்ப்பு இல்லை என்றால் உலக இலக்கியமே இல்லை. உலகம் முழுவதும் பெரும் இலக்கிய வறட்சிதான் இருந்திருக்கும். மொழி




பெயர்ப்பின் அவசியம் உணர்ந்ததாலோ என்னவோ அதன் பக்கமே நிற்கிறேன்.

**நவீன இலக்கியத்தில் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய தமிழ் நூல்கள் என எந்தெந்த நூல்களைப் பரிந்துரை செய்வீர்கள்?**

தமிழ் இலக்கியம் ஒன்று இரண்டு என்று சொல்லிவிடமுடியாது. தமிழ் இலக்கியம் மொத்தமும் மொழிபெயர்க்க வேண்டிய இலக்கியங்கள்தான். முக்கியமாக எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களின் பல புதுக்கதைகள் மற்றும் ஜெயமோகன் அவர் களுடைய கதைகள். ஜெயமோகன் பற்றிக் கூற வேண்டும் என்றால் அவர் இரண்டு மொழிகளை அறிந்தவர். அது ஒரு additional qualification என்று சொல்லவேண்டும். ஏனென்றால் அது போன்ற இரண்டு மொழிகள் அறிந்த எழுத்தாளர்கள் சிலரே உள்ளனர். அரிதிலும் அரிது. அதனால் அவரது நூலை அவரே மொழிபெயர்க்கிறார். இது போன்ற திறமை வெகு சிலருக்கே உள்ளது. மற்றபடி இன்று எழுதிக்கொண்டிருக்கிற நரனின் கடந்த ஆண்டு வெளிவந்த பல புதுக்கதைகளும் கூட அங்குக் கொண்டு செல்லப்பட வேண்டிய கதைகள்தான் என்று நான் நினைக்கிறேன். அதனால் தமிழில் ஒன்று இரண்டு என்று சொல்வது கடினம். அது ஒரு பெரிய பட்டியல்.

**தமிழ் இலக்கியம் மலையாள வாசகர்களிடையே என்ன மாதிரியான அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது?**

தமிழிலக்கியங்கள் அங்கு சென்றால்தானே அதிர்வுகளை ஏற்படுத்தும். பல வேளைகளில் பல கதைகளை நான் படிக்கும்போது மலையாள இலக்கியத்தை விட தமிழிலக்கியம் ஒரு படி மேலே என்றுதான் எண்ணும்படியாக இருந்திருக்கிறது. ஆனால் தமிழ் இலக்கியத்தில் இவ்வளவு சிறப்பாக இருக்கும்போது 'ஏன் என் கேரளத்து அண்ணன்களே.. உங்கள் காதில் விழவில்லையா? ஏன் எங்கள் மொழியில் இருந்து எடுத்துட்டுப் போகல?' என்பதுதான் என்னுடைய

கேள்வியாக இருந்திருக்கிறது. நான் நேரடியாகவே என்னுடைய பல எழுத்தாளர் நண்பர்களிடம் கேட்டுக்கொண்டே இருக்கும் கேள்வி இது.

**மலையாள - தமிழ் இலக்கியச் சூழல் எப்படியுள்ளது?**

இது ஒரு முக்கியமான கேள்வி. பொதுவாகவே இந்தியாவில் மலையாளிகளும் பெங்காளிகளும் அறிவுஜீவிகள், சிறந்த நுட்பமான உணர்வு உடையவர்கள் என்ற கருத்து உண்டு. இலக்கியங்களை எழுத்தாளர்களை கவிதைகளை கலைஞர்களைக் கொண்டாடும் ஓர் இனமாகவே மலையாள இனம் இருக்கிறது. தமிழில் அவ்வளவு இல்லை. சமீபகாலத்தில் கொஞ்சம் அந்தச் சூழல் மாறிக்கொண்டிருக்கிறது. ஒரு புத்தகம் - தயார் செய்யும்போது அது வெளியிடப்படும்போதும்கூட அந்தப் புத்தகம் எத்தனை தூரம் மக்களிடம் ரீச் ஆகுது என்று பார்ப்போம் இல்லையா. உதாரணமாக benyamin உடைய புத்தகம் - அவர் துபாயில் வேலை செய்யும்போது அவர் பட்ட துன்பங்களைச் சொல்லும் நூல் அது. கிட்டத்தட்ட 2008இல் வெளிவந்த நூல். நம்பவே முடியாது.. 100 பதிப்புகளைக் கண்ட புத்தகம் அது. ஆனால் தமிழில் வெளிவந்து ஒன்று இரண்டு வருடம் ஆகிவிட்டது. உயிர்மை பதிப்பக வெளியீடாக வந்தது. ஆனால் இன்றளவும் அந்த நூல் பற்றிப் பேசப்படவில்லை.

அதுபோல இப்போது எழுதியுள்ள நிலம் பூத்து மலர்ந்த நாள், இப்போதுதான் நாலாவது பதிப்பு போட்டிருக்காங்க. ஆனால் ஒவ்வொரு முறையும் 500 புத்தகங்கள் போடுகிறார்கள்.

அடுத்ததாக நான் பணி செய்ய இருக்கும் உஷ்ண ராசி.. என் மோகன் கிருஷ்ணன் எழுதிய புத்தகம். 11வது பதிப்பைக் காணப் போகிறது. ஒவ்வொரு முறையும் குறைந்தது ஆயிரம் புத்தகங்கள் போடுவார்கள்.. அடுத்தடுத்த பதிப்புகளை 2000, 2000 புத்தகங்களாகப் போடுவார்கள். அதிலிருந்து நான் என்ன சொல்றேன்னா ஒரு புத்தகம் வெளியாகும்போது அதை வாங்கிப் படிக்கும் வாசகர் பரப்பு இங்கே தமிழ்ல கொஞ்சம் குறைவாக உள்ளது. வாசிப்பு குறைந்துள்ளது. தமிழ் இலக்கியத்தில் என்ன எழுத்தாளர்கள் இல்லையா? தமிழ் இலக்கியம் செழுமை இல்லையா? இலக்கியங்கள் இல்லையா? தமிழை நாம் தினம் தினம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.. இரண்டாயிரம் வருஷமாக இருக்கிறது மூவாயிரம் வருஷமாக இருக்கிறது என்று. ஆனால் மக்களின் வாசிப்பு, வாசகர்கள் பரப்பு குறைந்துள்ளது தமிழில்.

**பெண்ணாகப் படைப்புலகில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள்?**

அதிர்ஷ்டவசமாக என்னுடைய இந்த 25 வருட இலக்கிய வாழ்க்கையில் எல்லோராலும் கொண்டாடப்படுபவளாகவே இருந்திருக்கிறேன். யாருக்குமே harmless-ஆ இருந்திருக்கிறேன்னு வெச்சுக்கலாம். நான் போய் யாரையும் குறை சொல்லாமல் நல்ல படைப்புகளை வாசித்து மற்றவர்களுடன் பகிர்ந்து சந்தோஷமாக அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். என்னையும் அப்படியேதான் பார்த்திருக்கிறார்கள். விமர்சனங்களுக்கு உள்ளாகும்போது அதைப் பற்றிக் கவலை கிடையாது. ஆனால் விமர்சனங் களில் கூறப்படும் குறைகளை, கருத்துக்களை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். என்னுடைய நண்பர்கள் எழுத்தாளர்கள் வாசித்துச் சில குறைகள் சொல்லும்போது அந்தக் குறைகளை நான் கருத்தில் கொண்டு அடுத்த படைப்பில் அது வந்துவிடக்கூடாது என்று உறுதியாக இருக்கிறேன்.

அதேபோல ஒருவர் குறை கூறினார்கள் என்னை ஒடுக்கினார்கள் விமர்சித்தார்கள் அதனால் இனி நான் எழுத மாட்டேன் எனக்கு எழுதும் எண்ணமே போய்விட்டது என்று சிலர் சொல்வது போன்ற எந்த விஷயமும் எனக்குள் என் மனதிற்குள் வந்ததே கிடையாது. என்னை demotivate பண்ற மாதிரி எந்த ஒரு சூழலும் வந்தது கிடையாது.

**மொழிபெயர்ப்பில் அந்தந்தப் பிராந்தியத்திற்கு உரிய மரபின் மய்யத்தை எப்படி கையாள்கிறீர்கள்?**



இது ஒன்றுதான் மொழிபெயர்ப்புச் சிக்கல் என்று சொல்லுவேன். வேறு எந்தச் சிக்கலும் மொழிபெயர்ப்பில் வந்ததே கிடையாது. இரண்டு விஷயம் சொல்லணும். ஒன்று வந்து கடினமான மலையாளச் சொற்கள். பாண்டித்தியம் என்று சொல்வார்கள் இல்லையா.. என்னுடைய வாசிப்பும் தமிழ்தான். நான் வளர்ந்தது படித்தது எல்லாமே தமிழ்தான். அதனால் சில மலையாள வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியாமல் போவது சாதாரணமாகவே நடக்கும் ஒன்று. பல வழிகளில் நான் அதற்கு நிகரான தமிழ் வார்த்தையைத் தேடிக் கண்டடைந்தேன். என் மலையாள நண்பர்களுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அடிக்கடி அவர்களிடம் வார்த்தை களுக்கான அர்த்தங்கள் கேட்பதுண்டு. இறுதியில் ஒரு பத்து வார்த்தைகள் எழுத்தாளர்களிடமே கேட்பேன். ஏன்னென்று கேட்டீங்கன்னா அவங்க அந்தப் பிராந்திய மொழியிலேயே எழுதியிருப்பார்கள். ஒவ்வொரு இடத்திற்கும் அதற்கான பிராந்திய மொழி இருக்கும். உதாரணத்துக்குத் தமிழ்நாட்டில் திருநெல்வேலி பக்கம் ஒரு தமிழா இருக்கும். மதுரை பக்கம், நாகர்கோயிலில் பேசுற தமிழ்.. இதுபோன்று தமிழே வேறுபடுவதுண்டு. அதுபோலவே மலையாளத்தில் திருச்சூர் மலையாளம் வேறாக இருக்கும், கோழிக்கோடு மலையாளம் வேறாக இருக்கும். அங்கு முஸ்லிம்கள் பேசும் மலையாளம் வேறாக மாறுபடும். அதனால் அந்தந்தப் பிராந்திய மொழி கூறும் கருத்துக்களை முழுமையாக மொழி பெயர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அந்தந்த எழுத்தாளர்களிடம் சில வார்த்தைகளின் அர்த்தங்களைக் கேட்பதுண்டு. கடின வார்த்தைகளின் மொழிபெயர்ப்பைவிட இது கடினம். அந்தப் பிராந்திய மொழியில் அந்தந்த இடங்களில் அந்த வார்த்தைக்கான அர்த்தமே வேறாக இருக்கும் பட்சத்தில் அந்த எழுத்தாளர்களிடம் அவர்கள் என்ன பொருள் கொண்டு எழுதினார்கள் என்று அவர்களிடம் கேட்பதுதான் சரியாக இருக்கும். அதனால் என்னால் முடிந்த வரை நேர்மையுடன் அந்தப் பிராந்திய மொழிகளின் கருத்து மாறாமல் தமிழில் மொழிபெயர்க்க முயற்சி செய்வேன்.

**மரபு என்பது கலாச்சாரம் சார்ந்து கேட்கிறேன்....**

அந்தந்த மொழியில் உள்ள அதே கலாச்சாரத்தை அப்படியே மொழிபெயர்க்கிறேன். தழுவலாக இல்லை.

**வெளிநாடு போல் தமிழகத்தில் மொழிபெயர்ப்புக்கு நிதி உதவி செய்யும் அரசு சார், அரசு சாரா நிறுவனங்கள் இருக்கிறதா? இல்லையென்றால் அதைக் குறித்துத் தாங்கள் பதிவு செய்ய விரும்பும் கருத்து என்ன?**

எனக்குத் தெரிந்து ஏதும் இல்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரை நிதி உதவி செய்யும் நிறுவனம் ஒன்று என்னைப் போன்ற independent writerகளுக்கும் இருக்க வேண்டும்.

ஆனால் இப்பொழுது சட்டசபையில் நடந்த விவாதத்தில் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானம் படித்தேன். அதாவது மாநில அளவில் அல்லது மத்திய அளவில் பரிசு அல்லது விருது பெற்ற நூல்களைத் தமிழகப் பள்ளிக் கல்வி நூலகங்களுக்கு வாங்குவதற்காகத் தனியாக நிதி ஒதுக்க முடிவு எடுக்கப்பட்டதாகப் படித்தேன். அதுவே ஒரு எழுத்தாளராக ஒரு பெரிய விஷயமாக இருக்கிறது. ஏனென்றால் தமிழ்நாட்டில் சுமார் 6000 நூலகங்களுக்கு ஒரு புத்தகம் செல்லும்போது கிராமத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு வாசிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்கும். ஒரு எழுத்தாளராக அந்தச் செய்தியைக் கேட்கும்போது சந்தோஷமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் நன்றாக வாசிக்கும் குழந்தைகளுக்குப் பரிசும் கேடயமும்.. அதுபோல நன்றாக வாசிக்க வைக்கும் ஆசிரியருக்கும் பரிசும் கேடயமும் கொடுப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். மிக மகிழ்ச்சியாக இருக்கிறது! ஏனென்றால் ஒரு எழுத்தாளர் ஒரு படைப்பை உருவாக்கும்போது அவருக்கு என்று ஒரு பொறுப்புணர்வு இருக்கும். அந்தப் படைப்பு எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்ற ஒரு எண்ணம் இருக்கும். ஒரு தனி மனிதனால் எல்லோருக்கும் அதை எடுத்துக்கொண்டு சேர்க்க முடியாது. ஆனால் அரசாங்கம் இது போன்ற முயற்சி எடுப்பது ஒரு எழுத்தாளருக்குக் கிடைத்த அங்கீகாரம். வரவேற்க வேண்டிய ஒரு விஷயம்.

**டேவிட் டங்கனின் ஆங்கில நாவல் ப்ரெஞ்சில் மொழிபெயர்க்கப்பட்டபோது டங்கன் அவர்களே மூலக்கதையை விடச் சிறப்பாக ப்ரெஞ்சில் மொழிபெயர்க்கப்பட்டதாகக் கூறியுள்ளார். அந்த மாதிரியான அனுபவம் ஏதும் உங்களுக்கு உண்டா?**

ரத்தமும் சதையுமாகப் பால் சர்க்காரியா ஆகவே நீங்கள் தெரிகிறீர்கள், ரத்தமும் சதையுமாகப் பால் சர்க்காரியா ஆகவே நீங்கள் மாறிவிட்டீர்கள், அந்த நூலையே படிப்பது போல இருக்கிறது என்று சொல்வதே ஒரு மொழிபெயர்ப்பாளருக்கு மிகப்பெரிய பெருமையாக நினைக்கிறேன். தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்றவாறு மாற்றி இருக்கிறேன் என்றும் சொல்லலாம். மூலக்கதையை விடச் சிறப்பாகவே இருப்பதாகவும் என்னிடம் பல பேர் கூறியிருக்கிறார்கள். என்னுடைய எழுத்தாகவே நான் எழுதிய புத்தகமாகவே பார்க்கப்படும் பொழுது அது மொழிபெயர்ப்பாளருக்குக் கிடைத்த அங்கீகாரமாக நினைக்கிறேன்.

**ஒரு புத்தகத்தை மொழிபெயர்க்க வேண்டும் என்று முடிவு செய்யும்போது என்னென்ன அம்சங்களைக் கவனிப்பீர்கள்?**

தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு பொறுப்புணர்வோடு மொழிபெயர்க்க வேண்டியிருக்கிறது. சமயங்கள்ல கேரளாவிற்கு செமினார் செல்லும்போது காலையிலிருந்து மாலை வரை ஒரு 40 லிருந்து 60 புத்தகங்கள் கைகளில் நிறைந்துவிடும். ஏனென்றால் அவர்களுக்கு எல்லாம் ஒரு ஆசை. அவை அனைத்தையும் தமிழில் மொழிபெயர்க்கவேண்டும் என்று. ஆனால் சில பொறுப்புணர்வோடுதான் மொழிபெயர்க்கவேண்டியிருக்கிறது.

பெண்களுக்காகப் பேசுவது என்பது என் உயிரில் கலந்த ஒன்று. சமூகத்தில் தேவைக்கேற்ப புத்தகங்களை மொழிபெயர்ப்பு செய்வேன் எனினும் பெண் சார்ந்த புத்தகங்களை மொழிபெயர்ப்பு செய்வதில் விருப்பம் உண்டு.

**தமிழில் உங்களை ஈர்த்த மொழிபெயர்ப்பாளர்களைப் பற்றிச் சொல்லுங்கள்?**

வி.எஸ்.காண்டேகர், த.ந. சேதுபதி, குமாரசாமி அவர்களுடைய புத்தகங்களை எல்லாம் சிறுவயதிலிருந்து படித்து வளர்ந்தவர்கள் நாங்கள். மொழிபெயர்ப்பு நாவல்களாக




சிறுவயதில் மராட்டிய மொழிக் கதைகளையும் வங்காளத்தின் மொழிபெயர்ப்புகளையும் படித்திருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் கல்கத்தா கிருஷ்ணமூர்த்தி, குறிஞ்சிவேலன், ஸ்ரீராம், சாந்தா, திலகவதி இப்படி பட்டியல் ரொம்பப் பெரியது. நான் இங்கு 67 பெயரைச் சொல்லுவேன். மேலும் திலகவதியின் அபராஜிதா நாவலைப் பற்றிச் சொல்லியே தீரவேண்டும். அவர் அந்த நாவலை மொழிபெயர்ப்பதற்காகவே வங்காள மொழியைக் கற்றுக்கொண்டவர். இதிலிருந்து ஒரு மொழிபெயர்ப்பாளரின் நேர்த்தியை நாம் உணர வேண்டும். எல்லோராலும் எல்லா மொழி களையும் கற்றுக்கொள்ள முடியாது. ஆனால் மற்ற மொழிகளில் உள்ள கதைகள் கலாச்சாரங் களைப் படிப்பதற்கு மொழிபெயர்ப்பாளர் களுடைய பங்கு மிகவும் பெரியது. ஒரு கற்பனையை கதையை எழுதுவது தவம் என்று சொன்னால் அதைவிட அதிக தவம், சிறிதும் குறைவில்லாத ஒரு தவம்தான் மொழிபெயர்ப்பும்.

**மொழி என்பது ஒரு பண்பாட்டின் அடையாளம். மொழிபெயர்ப்பினை ஒரு மொழியின் பண்பாடு பிற மொழியினரிடையே ஊடுருவ வைப்பதற்கான முறை என நினைக்கத் தோன்றுகிறதே.. இதைக் குறித்துத் தங்களின் பார்வை என்ன?**

நிச்சயமாக ஒப்புக்கொள்கிறேன். ஏனென்றால் ரஷ்யாவை நான் வரைபடத்தில் மட்டும்தான் பார்த்து இருக்கேன். ரஷ்யா என்ற ஒரு பெரிய நாட்டை ஆசிய கண்டத்தின் ஒரு பகுதியை நான் வரைபடத்தில் மட்டும்தான் பார்த்திருக்கிறேன். ஆனால் அங்குள்ள பைன் மரங்களை என் உடல் உணர்வு உயிரிலே நான் உணர்ந்திருக்கிறேன். படைப்புகள் மூலம் அந்த நிலப்பரப்பு முழுவதையும் மனதில் வாங்கியிருக்கிறேன் என்றால் அது அந்த மொழிபெயர்ப்பின் சிறப்பு. அங்கு மக்கள் எப்படி வாழ்கிறார்கள், அங்கே அவர்கள் என்ன மாதிரியான உடைகள் உடுத்துகிறார்கள், அவர்களுடைய நிலப்பரப்பு எப்படிப்பட்டது, பயிர் விளைச்சல் எப்படிப் பட்டது என உணரமுடிகிறது. மேலும் மங்கோலிய மொழி நாவல் அது. அந்தப் புத்தகத்தில் அந்த மக்களுடைய மொத்த வாழ்க்கையும் கூறப்பட்டிருக்கும். ஆடு மாடு மேய்ப்பவர்களின் கதை அது. அவர்கள் அதை எப்படி பாதுகாப்பார்கள், அவர்கள் என்ன உணவு உண்பார்கள், அவர்கள் இறந்துபோன உடல்களை என்ன செய்வார்கள், இறந்துபோன உடல்களை எப்படியும் மலை உச்சியிலிருந்து

தூக்கி வனவிலங்குகளுக்கு இரையாகப் போட்டுவிடுவார்கள்.. என இப்படிப்பட்ட விஷயங்களை எல்லாம் நம்மால் நேரில் பார்க்க முடியாது. இது எல்லாம் ஒரு மொழிபெயர்ப்பு நூல் மூலமாகத்தான் நம்மால் உணர முடியும்.

இதுபோன்று எத்தனை எத்தனையோ கதைகள் பல மொழிகளில் இன்றும் நம்மால் வாசிக்க முடிகிறது. ஒரு கலாச்சாரம் ஒரு நாகரீகம் ஒரு இனத்தின் வளர்ச்சி இதைப்பற்றி எல்லாம் நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது என்றால் மொழிபெயர்ப்பு நூலைத்தான் அதற்கான தளமாக நான் பார்க்கிறேன்.

**உமர்கய்யாம் பாடல்களைக் கவிமணி மற்றும் யோகியார் அவர்களின் மொழிபெயர்ப்பில் படிக்கும்போது கருத்தோட்டம் மொழி பெயர்ப்பாளருக்கு மொழிபெயர்ப்பாளர் மாறும் எனத் தோன்றுகிறது. இந்நிலையில் கவிதைகளை அதே சாரத்துடன் தருவது கடினமா?**

கவிமணியும் ச.து.யோகியாரும் ஒரே ஊர்க்காரர்களா தெரியவில்லை.. பிராந்திய வேறுபாட்டாலும் மொழி மாறும். கருத்து உள்வாங்கி எழுதுவது மொழிபெயர்ப்பு அல்ல. நான் செய்வது எப்படி என்றால் முதலில் வரிக்குவரி மொழிபெயர்ப்பு செய்துவிடுவேன். rewriting-இல் தான் செழுமை அடையும். அச்சுக்குப் போவதற்கு முன்னால் குறைந்தபட்சம் 8-10 முறை rewriting செய்வேன். இருபது பக்கமாக இருந்தாலும் அது ஒரு பக்கமாக இருந்தாலும் சரி. க.நா.சு. அவர்கள் ஒரு கதையை 40 முறை திரும்பத் திரும்ப எழுதி இருக்கிறார். க.நா.சு. செய்திருக்கிறார் என்பதை அவரது மருமகன் பாரதி மணியன் சொல்கிறார். அப்படிச் செய்யும்போது நல்ல வார்த்தைகளால் எழுத முடியும். ஒருவர் மொழிபெயர்ப்பு செய்வதற்கும் மற்றவர் செய்வதற்கும் உறுதியாக வேறுபாடு உண்டு எனினும் கவிதைகளை மொழிபெயர்ப்பு செய்வது சற்று கடினம்.

**சாகித்ய அகாதமி விருது பெற்ற பின் மகிழ்ச்சி என்பதை மீறி இந்தச் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய கடமையென எதை உணர்கிறீர்கள்?**

சின்ன வயசிலிருந்து பெண்களுக்காகத்தான் நிற்கிறேன். அதற்காக நான் பெண்ணியவாதி என்று declare செய்துகொள்ளவில்லை. எங்க வீடு முழுதும் பெண்கள் சூழ்ந்த வீடு. நாங்கள் மூன்று பெண்கள். மாமா ஒருத்தர்தான். அவருக்கும் பெண் குழந்தைகள். பிறகுதான் ஒரு ஆண் குழந்தை. ஒவ்வொரு பெண்ணும் ஆணால் துன்பப்பட்டு ஆணால் அடிமைப்பட்ட பெண்கள். இதைத்தான் சின்ன வயசிலிருந்து பார்த்துப் பார்த்து வளர்ந்ததால் பெண் பக்கம் நின்று பெண்ணுக்காகப் பேசுகிறேன். ஒரு பெண் மனம் சார்ந்துதான் இயங்குகிறார். பெண் சுதந்திரமாக வேண்டுமென்றால் பெண் கல்வி பெற வேண்டும். கல்வி என்பது பள்ளி, கல்லூரிப் படிப்பைத் தவிர புத்தக வாசிப்பும் வேண்டும். புத்தக வாசிப்பு என்பது வேறு தளத்திற்கு இட்டுச் செல்லும். புத்தக வாசிப்பு என்பது முக்கியமான ஒன்று. எல்லோருக்கும் பொதுவான ஒன்று. அத்தகைய புத்தக வாசிப்பு பரவலாக்கப்பட வேண்டும் என நினைக்கிறேன். பெண்களுக்காகப் போராடுவேன், அமைப்பு உருவாக்குவேன் என்றெல்லாம் இல்லை. எனக்கு ஆர்ப்பாட்டம் பிடிக்காது. ஒரு பெண்ணிற்குத் தோள் கொடுப்பவராகக் கூறுவதைக் கேட்கக் காது கொடுப்பவராக இருப்பேன். ஒரு பெண்ணிற்கு நான் இருக்கிறேன் என்று ஆறுதல் கூறுவது பெண்ணியம் என்றால் நான் பெண்ணியவாதி.

**மொழிபெயர்ப்பாளர் விருது மற்றும் பணபயன் பெறும்போது, மூலகதையாளருக்கு என்ன வகையான பயன் தரப்படுகிறது? அதற்கான வழிவகைகள் தமிழ் மற்றும் மலையாள இலக்கியத் தளத்தில் உள்ளதா?**

மூலக்கதையாளருக்கு இதுவரை ஏதும் கொடுத்ததில்லை. இதுவரை 5 - 6 விருதுகள் வாங்கி இருந்தாலும் சிறு தொகை பெருந்தொகை என்றாலும் ஏதாவது ஒரு தொகை என்று வரும்போது கொடுத்தது இல்லை. நான் மட்டும்தான் தரவில்லையா என்று தெரிய வில்லை. ஆனால் பதிப்பகத்திலிருந்து ராயல்டி தருகிறார்கள். ■

**மொழிபெயர்ப்புச் சிறுகதை**

• மலையாள மூலம்: எம்.முகுந்தன்
தமிழில்: கே.வி.ஷைலஜா
ஓவியம் : அன்பழகன்

# முண்டகம் செய்யப்பட்ட வாழ்க்கை

அலுவலகத்தில் வேலை அதிகமாயிருந்த நாள். கோட்டைக் கழற்றி ஸ்டாண்டில் தொங்கவிட்டு, சட்டையின் கைகளை முட்டிக்கு மேல் உயர்த்தி பேனாவை எடுத்து அன்றைய வேலையைத் தொடங்கினேன். அப்போதுதான் தொலைபேசி அழைப்பு. ரிசப்ஷனிஸ்ட்டின் குரல்தான் என்னை அழைத்தது.

"உங்களைப் பார்க்க ஒருத்தர் வந்திருக்கார்."

"யாரு டியர்?" நான் கேட்டேன்.

"நல்ல வாட்டசாட்டமான ஒருத்தர். நாப்பது வயசிருக்கும்".

"பேர் என்னன்னு கேட்டியா?"

"கேட்டுச் சொல்றேன் டியர்."

அவள் தொலைபேசியைக் கீழே வைக்கும் சப்தம் கேட்டது. ஒரு நிமிடத்திற்குள் மீண்டும் கூப்பிட்டாள்.

"பேர் என்னவாம்?"

"லஷ்மண்லால் பியாரிலால் பண்டிட்ஜி".

அவள் தொலைபேசியில் சிணுங்கலுடன் சிரித்தது எனக்கு நன்றாகக் கேட்டது.

யார் இந்த லஷ்மண்லால் பியாரிலால் பண்டிட்ஜி..? இருக்கையில் சாய்ந்தமர்ந்து யோசித்தேன். இப்படி ஒரு ஆளை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. பேர் கூட எனக்குப் பரிச்சயமில்லை. போய்ப் பார்க்கலாமா, வேண்டாமா? நான் எனக்குள்ளேயே கேட்டுக்கொண்டேன். என்னால் முடிவெடுக்க முடியவில்லை. அதனால் தொலைபேசியெடுத்து ரிசப்ஷனிஸ்ட்டைக் கூப்பிட்டேன்.

"லஷ்மண்லால் பியாரிலால் பண்டிட்ஜியை நான் பாக்கணுமா?"

"ஆமாம், பாக்கணும்", அவள் சொன்னாள்.

அவள் பார்க்கச் சொன்னதால் நான் பார்க்கலாம் என்று முடிவு செய்தேன். அவளை மறுக்க முடியுமா? நேற்றைய இரவைக்கூட என்னோடு பகிர்ந்தவள்தானே! அவளின் முடி இழைகளில் ஒளிந்து கிடக்கும் ஷாம்பின் சுகந்தம் இப்போதும் என் நாசியிலும் இதயத்தின் உள்ளறைகளிலும் உறைந்து கிடக்கிறது.



நான் கோட் எடுத்து அணிந்துகொண்டேன். முடியை ஒதுக்கி, கழுத்தைச் சுற்றியிருந்த டையைச் சரிசெய்தேன். பைப் எடுத்துப் பற்ற வைத்து புகை விட்டபடியே ரிசப்ஷனுக்கு நடந்தேன். அங்கே சிகப்பு நிற மெத்தை இடப்பட்ட பெரம்பு நாற்காலியில் பகவத்கீதை படித்தபடி பண்டிட்ஜி உட்கார்ந்திருந்தார். பகவத்கீதை படித்துக்கொண்டிருப்பவரைப் பார்த்தபோது எனக்குள் லேசான நடுக்கம் ஏற்பட்டது.

"பேரு என்னா..?"

நான் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். லஷ்மண்லால் பியாரிலால் பண்டிட்ஜி, புத்தகத்திலிருந்து முகம் உயர்த்தி என்னைத் தலை முதல் கால் வரை ஒருமுறை பார்த்தார். அவருடைய கண்கள் மிகவும் வித்தியாசமாக இருந்தன. அந்தக் கண்களை நேருக்கு நேராகச் சந்திக்க ஏனோ என்னால் முடியவில்லை. என் தலை குனிந்தது.

பகவத்கீதையை மூடிவைத்துவிட்டு பண்டிட்ஜி எழுந்தார். அப்போதுதான் அவருடைய அசாதாரணமான உயரத்தை என்னால் உணர முடிந்தது.

"வாங்க.." அவர் அழைத்தார்.

"எங்க?"

பண்டிட்ஜியின் முகபாவம் சட்டென மாறியது. கண்கள் குறுகிக் கூர்மையாயின.

"வான்னு சொன்னேன்."

அவர் வெளியே நடந்தார். ஒரு நிமிடம் என்ன செய்வதென்று தெரியாமல் நான் திகைத்து நின்றேன். பைப்பிலிருந்து ஒரு புகையை ஆழ்ந்து இழுத்த பிறகு பைப்பை வாயிலிருந்து எடுக்காமலேயே நான் அவரைப் பின் தொடர்ந்தேன். எனக்கு அவரைப் பார்த்துப் பயமேற்படவில்லை. அவரிடம் மட்டுமல்ல, எனக்கு யாரிடமும் பயமில்லை. பண்டிட்ஜி என்னதான் செய்கிறாரென்று பாக்கலாமே.

நான் பண்டிட்ஜியின் பின்னாலேயே நடந்து ஆபீஸிலிருந்து வெளியே வந்தேன்.

ஆபீஸ் கேட்டுக்குப் பக்கத்தில் ரெண்டு செண்டை மேளக்காரர்களும் ஒரு நாவிதனும் கூடவே நிறைய ஆட்களும் நின்றிருந்தார்கள். ஒரு கழுதையும் நின்றிருந்தது செண்டை மேளக்காரர்களுக்குப் பக்கத்தில். டோலக்குகளுடன் நிறைய ஆட்கள் நின்றிருந்தார்கள். அவர்கள் எனக்காகக் காத்திருப்பது போலத் தோன்றியது. கழுதை மெலிந்து பலமற்று நின்றுகொண்டிருந்தது.

பண்டிட்ஜி நாவிதனைக் கையசைத்துக் கூப்பிட்டார். அவன் எங்களுக்கருகில் வந்தான்.

"கீழ உக்காரு" பண்டிட்ஜி ஆணையிட்டார். அப்படியொரு குரலை நான் அதுவரைக் கேட்டதேயில்லை. அந்தக் குரலின் கம்பீரத்தைத் தட்ட முடியாமல் என்னையுமறியாமல் கீழே உட்கார்ந்தேன். "அசையக்கூடாது" பண்டிட்ஜி சொன்னதற்கு அப்படியே கீழ்படிந்தேன். பிறகு என்ன நடந்ததென்று மிகச்சரியாய் என்னால் நியாபகப்படுத்த முடியவில்லை. என் நினைவு தப்பியிருந்தது. நான் ஒரு மாதிரி ஹிப்னாட்டிசத்தில் அகப்பட்டது போலானேன். என் மூளை என்னிடமிருந்து கழன்று, என் கண்கள் என்னுடையதல்லாமலானது. என் நரம்புகளில் ஓடிக்கொண்டிருப்பதாய் நினைத்த ரத்தம் என்னிலிருந்து மொத்தமாய் வடிந்துவிட்டிருந்தது.. வேறு ஏதோ நரம்புகள் வழியாக இயங்கிக்கொண்டிருப்பதாய் நான் நினைத்துக் கொண்டிருந்த என் உடல் என்னிலிருந்து களவாடப்பட்டது.

எனக்கு நான் இல்லாமலாகவும், என்னிலிருந்து வெளியேறவும் செய்கிறேன் என்பது புரிந்தது.

புகைத்துக்கொண்டிருந்த பைப் என் உதடுகளிலிருந்து கீழே நழுவி விழுந்திருந்தது.

நாவிதன் என் முன்னால் வாகாய்க் குந்தி உட்கார்ந்துகொண்டான். அந்த ஆள் ஒரு தோல் பை வைத்திருந்தான். அதிலிருந்து தன் ஆயுதங்களை வெளியிலெடுத்தான். நீண்டு கூர்மையுடன் பளபளக்கும் கத்தி, சோப், ஒரு துண்டு. ஒரு சின்ன அலுமினியப் பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் கூட அவன் கொண்டு வந்திருந்தான்.

"இந்தப் பக்கம் நகந்து உக்காரு" அவன் குரலும் உயர்ந்திருந்தது.

நான் நகர்ந்து உட்கார்ந்தேன். அவனுடைய சொல்லைக்கூட என்னால் தட்ட முடியவில்லை. நான் அவனை விட தாழ்ந்தவனில்லையா?

நாவிதன் என் தலையை அவன் முட்டிகளுக்கிடையில் இறுக்கிப் பிடித்துக்கொண்டான்.

நேற்று ரிசப்ஷனிஸ்ட் பெண்ணின் முலைகளின் நடுவே தன்னைப் புதைத்திருந்த என் தலை.

எத்தனையோ பெண்கள் கடந்துபோன, எத்தனையோ ஓவியம் உருவெடுத்த, எத்தனையோ கவிதைகள் யோசித்த என் தலை,

என் அம்மாவின் கருவறையில் தலைகீழாய்ப் பூமியைப் பார்க்கப் போராடிய தலை,

பின்னொரு நாளில் டெல்லியின் மின் மயானத்தில் சூடேற்று வெடித்துச் சிதற வேண்டிய என் தலை,

எனக்கு எல்லாமுமான என் தலை,

வரவிருக்கும் ஜென்மங்களில் பாம்புகளாய் அலைவுற, மிருகங்களாய் வலம் வர, புழுக்களாய் நெளிந்துபோக வேண்டிய என் தலை,

பாம்புகளாக, மிருகங்களாக, பறவைகளாக ஜென்ம ஜென்மங்களுக்குமாய் சாட்சி சொல்ல வேண்டிய என் தலை.

அந்தத் தலையில் நாவிதன் அலுமினியப் பாத்திரத்திலிருந்து தண்ணீரை எடுத்துத் தெளித்தான். அந்தத் தலையில் அவன் கூர்மையாக்கப்பட்ட கத்தியால் விளையாட ஆரம்பித்தான்.

நான் ஷாம்பும் கண்டீஷனரும் உபயோகித்துத் தங்கம் மாதிரி பாதுகாத்த என் தலைமுடி.

பின்னால் கட்டிய கைகளோடு நாவிதன் என் தலையை முண்டகம் செய்வதைப் பண்டிட்ஜி வேடிக்கைப் பார்த்தபடி நின்றார்.

நாவிதனின் கத்தி என் தலையில் பலமுறை உரசிச் சென்றது. கத்தியின் கூர்மையான முனை மழிக்கப்பட்ட தலை ஓட்டில் முன்னேறிக் கொண்டேயிருந்தது. எனக்கு வலி தெரியவில்லையானாலும் எங்கெங்கோ கத்தி உராய்ந்து, காயம் தந்து தன் போக்கில் கடந்துகொண்டிருந்ததை உணர முடிந்தது.

நாவிதன் கத்தியால் என் தலை ஓட்டில் பாதை வகுத்துக்கொண்டு போகாமல் என் இதயத்தினூடாகப் பயணித்திருந்தான். அவன் சுரண்டி எடுத்தது என் முடியை அல்ல, அது என் ஆன்மாவாகயிருந்தது.

அந்தக் கத்தி சஞ்சரித்தது என் எலும்புகளுக்கு உள்ளே.. அதன் மஞ்ஞைகளுக்கு ஊடாக... என் புத்தியினை ஊடறுப்பதாக இருந்தது.

நாவிதன் என் வாழ்க்கையை முண்டகம் செய்திருந்தான். இனி மீதமுள்ள என் வாழ்க்கை குறைபட்டதாகவே மாறியிருந்தது. முடி இல்லாமல், மழுக்கப்பட்ட காயங்களேற்ற வாழ்க்கை.

நாவிதன் அவனுடைய வேலையை முடித்த போது பண்டிட்ஜி மீண்டும் ஆணையிட்டார்.

“எழுந்திரு”

நான் கீழ்படிந்தேன். எழுந்தபோது என் கால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. தலையிலும் கழுத்திலும் வியர்வை பெருக்கெடுத்து வழிந்தோடியது. ரத்த வாடையுடனான வியர்வை. என் ரோமக் கால்களிலிருந்து ஊற்றெடுத்துப் பெருகியது வியர்வை அல்ல, அது ரத்தமாக வழிந்துகொண்டிருந்தது.

நாவிதன் கத்தியைத் துடைத்துத் தோல் பெட்டியில் பத்திரப்படுத்தினான். அலுமினியப் பாத்திரத்தைக் காலியாக்கி உள்ளே வைத்தான்.

பண்டிட்ஜி என்னை மேலும் கீழுமாய் வருடி ஒரு பார்வை பார்த்தார். அவர் கண்களால் ஏதோ சைகை செய்தார்.

அழுக்கேறி நாற்றமடித்த பாண்ட் அணிந்திருந்த ஒரு இளவயதுக்காரன் கழுதைக்கு அருகில் போனான். அதை எனக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தினான். கழுதை தீனமான அதன் கண்களால் என்னை ஒருமுறை பார்த்தது.

அந்தக் கண்கள் என்னுடையதில்லையா?

அந்தக் கழுதை நான்தானே?

“ஏறி உக்காரு”

பண்டிட்ஜி உத்தரவிட்டார்.

நான் கழுதையையும் பண்டிட்ஜியையும் மாறிமாறிப் பார்த்தேன். கழுதை மேல் எப்படி ஏறி உட்காருவது? எனக்குத் தெரியவில்லை. எனக்கு ஸ்கூட்டர் ஓட்டத் தெரியும், கொஞ்சம் காரோட்டவும் தெரியும், கழுதை மேலும் குதிரை மேலும் நான் இதுவரை ஏறியவனில்லை.

“ஏறி உக்காரச் சொன்னேன்” பண்டிட்ஜியின் கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் பறந்தன.

நான் கழுதைக்குப் பக்கத்தில் போய் நின்று அதைச் சுற்றிப் பிடித்து எப்படியெப்படியோ அதன் மேல் ஏறி உட்கார்ந்தேன். கீழே விழாமலிருக்க குனிந்து அதன் கழுத்தை இறுக்கமாய்ப் பிடித்துக்கொண்டேன்.

அப்படியே கீழே விழுந்தால் மட்டுமென்ன? நான் ஏற்கெனவே நரகக் குழியில் விழுந்து விட்டிருந்தேன். நின்றெரியும் தீக்குண்டத்தில் மூழ்கித் தகித்துக்கொண்டிருக்கிறேன். கொதித்து நுரைக்கும் நெய்யில் உருகிக்கொண்டிருக்கிறேன். பின்னிப் புணர்ந்து ஆடி, சீறி, விஷம் துப்பும் பாம்புகளுக்கு நடுவில் செய்வதறியாது நின்று கொண்டிருக்கிறேன்.

இங்கிருந்து தப்ப வழியில்லை. தீயில் வெந்து தணிந்து நான் கரித்துண்டுகளாக வேண்டும். நெய்யில் உருகிக் கரைந்து நான் உருள் மணலாக வேண்டும். சர்ப்பங்களின் விஷமேற்று நான் கொடும் விஷமாக மாற வேண்டும். நான் ஒன்றுமில்லாதவனாக மாற வேண்டும்.

நான் கழுதைமேல் உட்கார்ந்தவுடன் பண்டிட்ஜி செண்டை மேளக்காரர்களிடம் கண்ணசைவில் கட்டளை பிறப்பித்தார். அவர்கள் செண்டைகளையும் பெரும்பறைகளையும் கழுத்தில் போட்டுக்கொண்டார்கள். அடிகோல் களைக் கையிலெடுத்தார்கள்.

மேளங்களின் பெரும் பறை சத்தம் அதிர்ந்தது.

“ம்.. நட”

பண்டிட்ஜி எல்லோருக்குமாகச் சொன்னார்.

அவர் முன்னால் நடந்தார். பின்னால் மேளக்காரர்கள், அவர்களுக்குப் பின்னால் கழுதையின்மேல் நான். எனக்கும் பின்னால் விசிலடித்துக்கொண்டும் மிக மோசமான பாடல்களைப் பாடிக்கொண்டும் கொஞ்சம் பொறுக்கிகள் அட்டகாசம் செய்தபடி தொடர்ந்து வந்தார்கள்.

அலுவலக வாசலிலிருந்து கூச்சலிட்டபடி அந்த ஊர்வலம் முன்னேற ஆரம்பித்தது.

நேரம் பட்டபகலாயிருந்தது. வீதி முழுக்க ஆட்கள் நிறைந்திருந்தார்கள். கார்களில் பேருந்துகளிலெல்லாம் மனிதத் தலைகள் இருந்தன. அந்தக் கூட்டத்தில் எனக்குத் தெரிந்தவர்கள் இருக்கமாட்டார்களா? நிச்சயம் இருப்பார்கள்.

என் நண்பர்கள்,

என் கவிதைகளை விரும்பி வாசிக்கும் வாசகர்கள்,

என் ஓவியங்களைத் தங்கத்துக்கு நிகரான விலை கொடுத்து வாங்கியிருக்கும் கலை ஆர்வலர்கள்,

என்னுடன் படுக்கையைப் பகிர்ந்துகொண்ட இளம்பெண்கள்.

அவர்களெல்லாம் என் முண்டகம் செய்த தலையைப் பார்த்தார்கள். நான் கழுதை சவாரி செய்வதைப் பார்த்தார்கள். எனக்காய் மேளமடித்துக்கொண்டு நடந்துவரும் மேளக்காரர் களைப் பார்த்தார்கள். பாட்டு கட்டி என்னை அதில் தோய்த்தெடுக்கும் பொறுக்கிகளைப் பார்த்தார்கள்.

முக்கிய வீதிகளில் திறந்து வைத்திருக்கும் கடைகளுக்கிடையில், ஆண் பெண் களுக்கிடையில், அம்மாக்களுக்கிடையில், சகோதரிகளுக்கிடையில், குழந்தைகளுக்கிடையில் என் ஊர்வலம் முன்னோக்கி நகர்ந்தது.

வழியில் வெள்ளைப் புடவை உடுத்தியிருந்த ‘பான்’ அதக்கிச் சிவந்திருந்த வாயால் ஒரு வயதான பெண் என்னை மிக வன்மமாகப் பார்த்துப் ‘பன்னிக்குப் பொறந்த தறுதல’ என்று உமிழ்ந்துவிட்டுப் போனாள்.

இன்னொரு ஆள் காலிலிருந்து செருப்பைக் கழற்றி என் முகத்தில் எறிந்துவிட்டுப் போனான். குதிரைச் சாணி மிதித்த வார் அறுந்த செருப்பு குறி தப்பாமல் என் முகத்திலேயே விழுந்தது.

ஒரு மணி நேரம் கடந்திருக்கும், கழுதை நடக்க முடியாமல் மூச்சிரைத்தது. மேளக்காரன் வியர்வையில் மூழ்கியிருந்தான்.

ஒரு டீக்கடைக்கு முன்னால் போய் நின்றபோது பண்டிட்ஜி திரும்பிப் பார்த்துச் சொன்னார்.

“நிறுத்துங்க”

மேளக்காரன் அடிப்பதை நிறுத்தினான். விசிலடித்துக் கேலி செய்து கெட்ட வார்த்தைகளில் பாடிக்கொண்டு நடந்து வந்தவர்கள் அப்படியே நிறுத்தினார்கள்.

“சாய் பிலாதோ பாய்”

பண்டிட்ஜி டீக்கடைக்காரனிடம் சொன்னார். டீக்கடை பெஞ்சில் பண்டிட்ஜியும் நாவிதனும், மற்றவர்களும் உட்கார்ந்தார்கள். என்னையும் இறங்கச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். அது நடக்கவில்லை. பண்டிட்ஜி ஒன்றும் சொல்லாமல் சேரில் சாய்ந்து உட்கார்ந்து கால் மேல் கால் போட்டு

உட்கார்ந்தார். அவர் ஒரு புத்தகத்தை எடுத்துத் திறந்து வாசிக்க ஆரம்பித்தார்.

அது பைபிள் என்பதை நான் பார்த்தேன்.

கடைக்காரன் கண்ணாடி டம்ளரில் டீ கொண்டு வந்தான். ஒவ்வொருத்தருக்கும் கொடுத்தான். எனக்கும் தருவான் என்று ஒரு டீக்காய் நான் ஏங்கித் தவித்தேன். தாகத்தால் என் தொண்டைக்குழி வரண்டு வற்றியிருந்தது.

ஆனால் அவன் டீயை என் முன்னால் நீட்டியபோது பண்டிட்ஜி அதை விலக்கினார்..

“மத் தேனா”

அழுக்கேறிய பேண்ட் அணிந்திருந்த இளவயசுக்காரன் ஒரு சின்ன தொட்டியில் தண்ணீர் எடுத்து வந்து கழுதைக்குக் கொடுத்தான். கொஞ்சம் தண்ணீராவது கிடைக்குமானால்... என் தொண்டைக் குழி எரிந்து காந்தளெடுத்து எரியும் தீயை அணைக்க ஒரு துளி தண்ணீராவது கிடைக்குமானால்...

“தண்ணி..”

நான் கழுதை மேல் உட்கார்ந்தபடி கேட்டேன். டீக்கடைக்காரன் என்னையும் பண்டிட்ஜியையும் மாறி மாறிப் பார்த்தான். பண்டிட்ஜி வேண்டாமெனக் கடைக்காரனிடம் சொன்னார்.

டீ குடித்த பிறகு அவர்கள் கொஞ்சம் ஓய்வெடுத்தார்கள். பண்டிட்ஜி வேறொரு புத்தகம் திறந்து வாசிக்கலானார். இந்த முறை அது குர்ரானாக இருந்தது.

அவருடைய கைகளில் நிறைய புத்தகங்கள் இருந்தன. மதம் சார்ந்த, தத்துவம் சார்ந்த, நியமம் சார்ந்த புத்தகங்கள். டீ குடித்து ஓய்வெடுத்த பிறகு பண்டிட்ஜி எழுந்தார்.

“சல்லோ”

அவர் உத்தரவிட்டார். செண்டை மேளக்காரர்கள் மேளங்களைக் கழுத்தில் போட்டுக்கொண்டார்கள். உடன் வந்த பொறுக்கிகள் புகை பிடிப்பதை நிறுத்தினார்கள். விசிலடிக்கவும் கெட்ட வார்த்தைகளை அர்ச்சிக்கவும் ஆரம்பித்தார்கள். ஊர்வலம் மீண்டும்



முன்னேறியது. ஒரு வரிசையிலிருந்து இன்னொரு வரிசைக்கு.. ஒரு காலனியிலிருந்து மற்றொரு காலனிக்கு ஊர்வலம் தொடங்கியது. இதற்கிடையில் பண்டிட்ஜியும் மேளக்காரர்களும் சாப்பிட்டார்கள். பல முறை டீயும் சர்பத்தும் குடித்தார்கள்.

எனக்கு சாப்பாடு தரவில்லை, டீ தரவில்லை, சர்பத்தும் தரவில்லை, குடிக்கத் தண்ணீர் கூட தரவில்லை.

இனி எனக்கு எதற்கு சாப்பாடு? எதற்கு டீ? எதற்கு சர்பத்? எதற்கு தண்ணீர்?

மாலை மங்கியவுடன் ஊர்வலம் பழைய நகரத்தை எட்டியது. அதற்குள் வெயிலில் என் மழுக்கடிக்கப்பட்ட தலை தீயாய் எரிந்து விரியத் தொடங்கியிருந்தது. உடல் முழுக்க அழுகின முட்டையும் பழத் தோல்களும் அப்பிக் கிடந்தன. மாலையில் இந்த ஊர்வலம் முடிவுக்கு வந்திருந்தது. செண்டைகள் நிசப்தமாயின. மேளக்காரர்களும் நாவிதனும் மற்றவர்களும் மெல்ல மெல்லக் காணாமல் போயிருந்தனர்.

கழுதையும் போயிருந்தது.

எல்லாம் முடிவுக்கு வந்தபோது, எல்லோரும் போய்ச் சேர்ந்தபிறகு நானும் லஷ்மண்லால் பியாரிலால் பண்டிட்ஜியும் மட்டுமானோம். செங்கோட்டைக்குப் பக்கத்தில்தான் நின்றிருந்தோம். தூரத்தில் சாந்தினி சௌக்கின் வெளிச்சங்கள் பிரகாசமாய் மின்னின. செங்கோட்டைக்கும் மேலே வெளிறியதாய்த் தெரியும் நட்சத்திரங்கள்.

அவமானமும்.. பசியும்.. தாகமும்.. எல்லாமுமாக நான் மிகவும் தளர்ந்திருந்தேன். உணர்வற்றுப் போயிருந்தேன் என்று கூடச் சொல்லலாம். நாக்கு அசைக்க முடியாமல் ஒட்டியிருந்தாலும் உதட்டை ஈரப்படுத்திச் சிரமத்துடன் பண்டிட்ஜியிடம் கேட்க வேண்டியதைக் கேட்டேன்.

“எதற்காக இவ்வளவு பெரிய தண்டனை பண்டிட்ஜி?”

என் கேள்வியைக் கேட்ட அவர் முணுமுணுத்தபடி ஏதோ சொன்னார். எனக்குக் கேள்வி கேட்க அருகதை இல்லாதது மாதிரி, பேசக் கூடாது என்பது மாதிரி.....

“சொல்லுங்க பண்டிட்ஜி”

நினைவு தப்பியும் மீண்டும் வருவதற்கிடையில் என் எல்லாச் சக்தியையும் உபயோகித்தபடி நான் கேட்டேன்.

“உனக்கு அது தெரிந்தே ஆகணுமா? கேட்டுக்கோ” பண்டிட்ஜி என்னைப் பார்த்துத் திரும்பி நின்றார். நான் தரையில் கவிழ்ந்து விழுந்திருந்தேன்.

“ஒருநாள் வயதான ஆள் தாகமெடுக்கிறது என்று உன் வீட்டுக்கு வந்தான் தானே? நியாபகம் இருக்காடா பன்னி அது உனக்கு?”

ஆமாம், எனக்கது தெளிவாய் நியாபகம் இருக்கிறது. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. மதிய நேரம். ஒட்டோ காஸ்டல்யாவின் கவிதைகள் படித்துக்கொண்டு பால்கனியில் பெரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். அப்போதுதான் வயதானவர் உள்ளே வந்தார். எழுபது அல்லது எண்பது வயதிருக்கும். மெலிந்த கை, கால்கள். வெயிலேற்று முகம் வெந்திருந்தது. கழுத்தினூடாக வியர்வை வழிந்தபடியிருந்தது.

“தண்ணி..” கேட்டைப் பிடித்தபடி கிழவன் யாசித்தான்.

“கொஞ்சம் தண்ணி..”

கிழவனின் குரல் கடைசி ஸ்வரம் போல வெளியே வராமல் பரிதாபத்திற்குரியதாக இருந்தது. அதை என்னால் தாங்க முடியவில்லை. நான் எப்போதும் பியர் குடிக்கும் நீண்ட டம்ளரை எடுத்தேன். ஃப்ரிட்ஜை திறந்து அதில் நிறைய குளிர்ந்த நீரை ஊற்றினேன். கிழவனை வராந்தாவில் வற்புறுத்தி உட்கார வைத்தேன். டம்ளரை பிடிக்கக் கூட வலுவில்லாத விரல்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. நான் டம்ளரை வாயருகே கொண்டு போனேன். தீராத் தாகத்துடன் நான்கு டம்ளர்கள் தண்ணீரை மிகுந்த ஆவலுடன் கிழவன் குடித்துத் தீர்த்தான். கொஞ்ச நேர ஓய்வுக்குப்பிறகு இரண்டு கைகளாலும் என்னை வாழ்த்தி அவர் திரும்பிப் போனார்.

“எதுக்காக நீ அந்தாளுக்குத் தண்ணி குடுத்த? தாகத்திலிருப்பவர்களுக்குத் தண்ணி குடுக்க நீ யாரு?”

பண்டிட்ஜியின் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன. அவர் என் முகத்தில் காறித் துப்பி, கைகள் வீசியபடி வெளிச்சம் நிறைந்த சாந்தினி சௌக்கைப் பார்த்து நடந்தார். நான் இருட்டில் அங்கேயே படுத்துக்கிடந்தேன். ■

• கவி: பாலைவன லாந்தர்

# வட்டக் கிணறு

கிணற்றுக்குள் நீந்தும் தன்னை
அடிக்கடி வெறித்துப் பார்க்கும் கண்கள்
கண்களில் நீந்தும் தன்னை
அடிக்கடி வெறித்துப் பார்க்கும் கிணறு
இரண்டும் முத்தமிடும் ஒருநாளில்
ஊர் கூடி வேடிக்கை பார்க்கும்

எண்ணற்ற கதைகளின் ஊற்று அது
நீரை விட வேகமாக ஊறும்
புனைவு
புறம்
ஆதங்கம்
காதல்

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு
இங்கொரு வட்டக்கிணறு இருந்தது
இதோ இந்த
பதினெட்டாம் மாடியிலிருந்து கீழே பார்
கவனம் விழுந்திடாதே

ஒவ்வொரு அடியாகச் சர்ப்பத்தை
இழுத்துச் சுருட்டுவது போல்
தாம்புக் கயிற்றை இழுத்து
பித்தளைக் குடத்தை மேலே இழுப்பதற்குள்
இரவுகள் பகல்களை முந்திவிடும்

கிணற்றுக்குள் மிதக்கும் நெகிழி பொம்மைகள்
உடைந்த வளையல் துண்டுகள்
அந்தப் பிரதேசத்தின் சாபக்கேடுகள்

வற்றிய கிணற்றினை எட்டிப்பார்த்து
வற்றிய வயிற்றைத் தடவிக்கொண்ட
பெருத்த கூட்டமொன்று
நகரங்களைத் தேடி நகர்ந்தபோது
நரகங்கள் சிரிக்கத் தொடங்கின. ■






• பா.ஜீவசுந்தரி

# கருச்சிதைவுக்குக் கூலி மற்றொரு கருச்சிதைவு



ஐரோப்பிய நாடுகளின் கருச்சிதைவு கொள்கைகளை விளக்கும் மனதைப் பாதித்த ஒரு திரைப்படம் பற்றி.....

நான்கு மாதங்கள், மூன்று வாரங்கள், இரண்டு நாட்கள் என மொத்தம் 143 நாட்கள் வயிற்றில் வளர்ந்த கருவினை, கருச்சிதைவு செய்து கொள்வதற்காக ஒரு பெண் எதிர்கொள்ளும் வேதனைகளும் பயங்கரங்களும் கலந்த, பரபரப்பும் திகிலூட்டும் உணர்வுக் கலவையும் ஒருங்கிணைந்த படம்தான் 4 Months, 3 Weeks and 2 Days. இப்படம், நிகோல் சௌஷெக் தலைமையிலான கம்யூனிஸ நாடான ருமேனியாவில், அவரது ஆட்சியின் இறுதி ஆண்டுகளைப் பதிவு செய்கிறது. அந்த நாட்டின், பெயர் குறிப்பிடப்படாத நகரம் ஒன்றில் இக்கதை நிகழ்கிறது.

ஒடிலியா, காப்ரியேலா இருவரும் பள்ளிப் பருவத்திலிருந்தே இணை பிரியாத தோழிகள். தற்போது பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலக்கூடிய மாணவிகள். ஒரே அறைத் தோழிகளும் கூட. அறைத் தோழிகளுக்கே உண்டான இயல்பான குறும்புகள், குறுகுறுப்புகள், பாசப் பகிர்வு, கருத்துகள், ஆசைகள், அபிலாஷைகள் இவற்றுடன் தங்கள் அந்தரங்கங்களையும் ஒளிக்காமல் மறைக்காமல் பகிர்ந்துகொள்ளக் கூடிய தோழிகள்.

காப்ரியேலா எதிர்பாராத விதமாகக் கருவுறுகிறாள். தோழிகள் இருவரும் இணைந்து ரகசியமாகக் கருவைக் கலைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். அதற்காக, மிஸ்டர். பேப் என்ற நபரின் உதவியை நாடுகிறார்கள். அந்த நபர் சட்டத்துக்குப் புறம்பாகக் கருச்சிதைவுகளைச் செய்யக் கூடியவர். கம்யூனிஸ நாடான ருமேனியாவில் கருச்சிதைவு சட்ட விரோதமென்று அப்போது அறிவிக்கப்பட்டிருந்தது. மாணவிகளான இளம் பெண்கள் இருவரும் சட்டத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுக் கருச்சிதைவை எங்ஙனம் எதிர்கொள்கிறார்கள் என்பதைத்தான் இப்படம் சொல்லுகிறது.



பொதுவாக மூன்று மாத வளர்ச்சியடைந்த கருவைக் கருச்சிதைவு செய்து கொள்வது என்பது பெண்களின் உயிருக்கே உலை வைத்துவிடும். ஆனால், உண்மையை மறைத்துப் பொய் கூறி நான்கு மாதங்களுக்கு மேல் வளர்ந்த கருவை அழிக்கும் முயற்சியை உயிரைப் பணயம் வைத்து எதிர்கொள்கிறாள் காப்ரியேலா.

மருத்துவமனைகளிலோ, மருத்துவர்கள் உதவியுடனோ சட்டத்தை மீறி அதைச் செய்ய முடியாது என்பதால், தோழிகள் இருவரும் ஒரு ஹோட்டலில் வாடகைக்கு அறை எடுத்துத் தங்குகிறார்கள். அங்கு பெயரைப் பதிவு செய்வதில் தொடங்கி, பொய்களை மட்டுமே அடுக்கடுக்காக விதைப்பதால், உண்மையைச் சொல்ல முடியவில்லை.

ஒடிலியாவின் காதலன் ஆடி, தன் தாயாரின் பிறந்தநாள் விழாவில் அன்றிரவு கலந்துகொள்ள வருமாறு அழைக்கிறான். ஆனால், தானும் தன் தோழி காப்ரியேலா இருவரும் சொந்த வேலைகளுக்காக வெளியில் செல்ல வேண்டியிருப்பதால் தன்னால் பிறந்தநாள் விழாவிலும் விருந்திலும் பங்கேற்க இயலாது என்று தெரிவிக்கிறாள்.

காப்ரியேலா தான் மூன்று மாதக் கர்ப்பிணி என்று பொய் சொன்னதைக் கருச்சிதைவு செய்வதில் நிபுணனான பேப், கண்டுபிடித்து

விடுகிறான். கரு நான்கு மாதங்களைக் கடந்து வளர்ச்சி பெற்றிருப்பதால், ஏற்கனவே பேசிய தொகையைக் காட்டிலும் கூடுதலாக 3000 ரூபாய் தர வேண்டுமென்று மிரட்டலாகக் கேட்கிறான். அப்படி தர இயலாது என்றால், இரண்டு பெண்களும் தன்னுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறான். இங்கு உடலுறவு என்பதை வெறும் செக்ஸ் என்பதோடு மட்டும் தொடர்புபடுத்திக் கொள்ளாமல், சட்ட மீறலாகச் செய்யப்படும் கருக்கலைப்புகளை அதிகரிக்கச் செய்யும் ஒரு தந்திரமான உத்தியாகவும், அவனுக்கான மேற்படி வருமானமாகவும் கொள்ள வேண்டும்.

வேறு வழியில்லாமல், காதலன் ஆடியிடம் கடன் கேட்பதற்காக அவன் வீட்டுக்கு வேண்டா வெறுப்புடன் செல்கிறாள் ஒடிலியா. ஆடியின் குடும்பத்தாரையும் சந்திக்கிறாள். அங்கு ஆட்டமும் பாட்டமும் குடியும் கூத்துமாகப் பிறந்தநாள் பார்ட்டி தொடர்கிறது. சிகரெட் புகை மண்டலத்துக்கு நடுவே யாரும் ஒடிலியாவை ஒரு பொருட்டாகக் கூட மதிக்கவில்லை. அளவுக்கு அதிகமான கூட்டத்தில் சிக்கிப் பிதுங்குகிறாள் அவள். ஆடி அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவளை அடைய நினைக்கிறான். அப்போது தோழி காப்ரியேலாவின் கருச்சிதைவு பற்றி அவனுடன் பேசுகிறாள். ஆடி கருச்சிதைவுக்கு எதிரான கருத்துகளைக் கொண்டிருப்பவன் என்பதும் அப்போதுதான் அவளுக்குப் புரிகிறது.

அங்கிருந்து ஒரு வழியாக அவனிடமிருந்து மீண்டு, தன் தோழி காப்ரியேலா தங்கியிருக்கும் ஓட்டல் அறையை வந்தடைகிறாள் ஒடிலியா. ஆனால், அங்கு காப்ரியேலா படுக்கையில் படுத்த நிலையில் தோழியை எதிர்கொள்கிறாள். அவளது கரு சிதைக்கப்பட்டு, குளியலறைக்குள் கிடக்கிறது. அதனை யாரும் அறியாமல் அப்புறப்படுத்த வேண்டிய பொறுப்பும் ஒடிலியாவையே சேருகிறது. சிதைக்கப்பட்ட கருவை ஒரு துண்டினுள் பொதிந்து சுற்றி, ஒரு பைக்குள் பாதுகாப்பாக வைத்து எடுத்துச் செல்ல முனையும்போது, அதைப் புதைத்து விடும்படி அவளிடம் கேட்டுக்கொள்கிறாள் காப்ரியேலா. ஆனால், மிஸ்டர். பேப் துளியளவு கூட கருணையின்றி அதனைக் குப்பைத் தொட்டியில் வீசியெறிந்து விடும்படி தெரிவிக்கிறான். இதயத்தை நொறுங்கச் செய்யும் காட்சிகள் கொண்ட படத்தின் முடிவு நம்மை அதிர வைக்கிறது.

காப்ரியேலா உடல் ரீதியாகச் சவாலை எதிர் கொள்ள வேண்டுமென்றால், அவளின் உயிர்த் தோழி ஒடிலியா, மனரீதியாகத் துணிச்சலுடன் அனைத்துச் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியவளாகிறாள். இறுதியில் இரு பெண்களும் எதிர்பாராமல், மீண்டும் சட்டத்துக்கு எதிரான ஒரு கருச்சிதைவினை எதிர்கொள்ளும் நிலையை நோக்கித் தள்ளப்படுகிறார்கள். கருச்சிதைவுக்காக வரும் பெண்ணொருத்தி, மற்றொரு வாடிக்கையாளரையும் அறிமுகப்படுத்த வேண்டிய நிலைக்கு ஆளாகிறாள். அல்லது அவளே அதற்கு பலியாகிறாள். மனசாட்சியோ, இதயமோ இல்லாத வகையில் மேலும் மேலும் கருச்சிதைவுகளுக்கான விதை ஊன்றப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

கருச்சிதைவு உலக நாடுகள் பலவற்றிலும் சட்டப்பூர்வமானதாக உருவாக்கப்பட்டுள்ள போதிலும் இங்கு ஒழுக்க நியதிகள் என்பதை எல்லாம் கடந்து, சட்ட மீறலாகக் கருச்சிதைவுகளை மாஃபியாக்களைப் போல் செயல்படுத்திக்கொண்டிருக்கும் கூட்டத்துக்கு மேலும் மேலும் வாடிக்கையாளர்களை உற்பத்தி செய்யும் ஒரு செயல்முறையாகவும் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பெண் உடலின் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்புணர்வுகள், அது கணவன் மனைவியாக இருந்தாலும் வன்முறைதான் என்பதை ஏற்காதவர்கள் எண்ணிக்கை இருக்கும் வரை, இத்தகைய பாலியல் வல்லுறவுகள் குறையப் போவதில்லை. கருச்சிதைவு குற்றம் என்றால், குழந்தைகளை அளவின்றி எந்திரம் போல் பெண்கள் பெற்றுத் தள்ளிக்கொண்டே இருக்க வேண்டுமா என்ற கேள்வியும் இயல்பாக எழுகிறது.

ஐரோப்பிய நாடுகளின் கருச்சிதைவுக் கொள்கைகளும் அதிர வைப்பவையாக இருக்கின்றன. ருமேனியா போன்ற நாடுகளில் சட்ட விரோதமாகச் செய்யப்படும் கருக்கலைப்புகளும் பெண்ணுடலைச் சிதைத்துக் கொண்டிருப்பதையே இப்படம் காட்சிப்படுத்துகிறது. உலக அளவில் பெரும் விவாதத்தை எழுப்பிய இத்திரைப்படம், 2007 கேன்ஸ் திரைப்பட விழாவில் கலந்துகொண்டு Palme d'Or and the FIPRESCI விருது பெற்றது. ■

• ஸ்ரீகா

# ‘உணர்வு போதையேற்றும் கவிதைகள்’






**நூல் - வைன் என்பது குறியீடல்ல**

**ஆசிரியர் - தேவசீமா**

**வை**ன் குறியீடோ இல்லையோ. ஆனால் அதை இரண்டு கவிதைகளில் ருசிக்க முடிகிறது.

பெரும்பான்மை கவிதைகளைச் சமையலையும் உணவையும் கொண்டே ருசிக்க வைக்கிறார்.

"இதயத்தின் இடத்தில்
கூழாங்கல் ஒன்றினை வைத்திருப்பவன் மட்டும்
நதிகளை உலையாக்கி
அழுக்கு நுரைகளை
அகப்பையால் ஒதுக்கி
அமுதம் சமைக்கிறான்"

இப்படித்தான் பல கவிதைகளைச் சமைத்திருக்கும் இப்பெண்கவிஞர் "பணவீக்கத்தின் பாதிப்பெனப் பையைப் பிதுக்கிக் காட்டிவிட்டு" என்பது போன்ற உள்நாட்டுப் பொருளாதார அரசியல் கவிதைகளையும்,

"தோற்புக்கும் தோற்பின்மைக்குமான
கை குலுக்கலுக்கிடையில்
சிக்கிய எறும்புகளின் தோலுரித்தே
எழுதப்படும் சரித்திரங்கள்"

என்று உலக அரசியலையும் பேசத் தவறவில்லை.

"தண்ணி உரம் வேண்டாம்
தொடுதிரையினைத் தேய்த்தால் போதும்
நாத்து நட
களை பறிக்க வேண்டாம்
மீளத்தேய்த்தால் முடிந்துவிடும் அறுவடை"

ஏனிந்த தொடுதிரை அறுவடை? விவசாயத்தை விளையாட்டாகக் கருதி அவர்களோடு விளையாடும் நிலையைத்தான் சாடுகிறார்.

"மனசுலயே பயிர் நட்டு
உயிர் அறுவடை
செஞ்சுக்குவான்" என்கிறார்.

தொடுதிரை விளையாட்டில் பயிர் அறுவடை எளிது. ஆனால் நிஜத்தில் தன் உயிரைத்தான் அவன் அறுவடை செய்து கொள்கிறான் என்பதை ஆழமாக இந்தக் கவிதையில் விதைத்துச் செல்கிறார்.

கண்ணாடிச் சில்லைத் திரட்ட "எங்கே செல்வது பசுவிற்கும் சாதத்திற்கும்" என்று கேட்கும் கவிதையின் ஒட்டுமொத்த ஆன்மா வேறொன்றாக இருந்தாலும் பசுவே இல்லாமல் பால் உற்பத்தியின் தன்னிறைவைக் கேள்வியால் அறைந்து தொங்கவிட்டிருக்கிறார்.

பொத்தான்களை வைத்தும் வாழ்க்கையைச் சொல்லியிருக்கிறார் ஒரு கவிதையில். ஒரு செய்தியைச் சொல்ல எந்தக் கருவியைக் கையிலெடுக்கிறார் என்பதே முக்கியம். அதைச் செவ்வனே செய்திருக்கிறார் இக்கவிஞர்.

அழுது சிணுங்கிய குழந்தைக்குப் பால் குடுக்க பதறி விலகிய விலைமாதுவின் வாழ்வை "பதவி விலகிய பேரம்" கவிதையில் குழந்தையுடன் போர்த்துகிறார்.

"தேவையற்றவர் தீண்டாதிருக்க
கொஞ்சம் சையனைடு தோய்த்த
முட்கள் விரவி விடு இவ்விடங்களில்
தவறான ஒரே தொடுதலில்
நிகழட்டும் உடனடிச் சாவு"

இந்த உடனடிச்சாவு என்ற வார்த்தையில் நிர்பயா குற்றவாளிகளுக்கும் இவரே தூக்கிட்டுவிடுகிறார்.

பெண்களின் உணர்வு தொட்டு காதல், காதல் தோல்வி, ஓடிப்போன மனைவியை நினைத்து மகளுக்குச் சோறூட்டும் அப்பா, மாதவிடாய்க் காலங்களில் பெண்கள் எரிந்துவிழும் "ஹார்மோன்களின் சாம்பா" என மிகச்சரியாகப் பலவகை உணர்வுகளைச் சிறந்த கவிதைகளாக்கித் தந்திருக்கிறார்.

"பாப்பா வா போகலாம்" என்ற கவிதையில் அவளுக்கு அவசரமாய் ஒரு தற்கொலை செய்ய வேண்டி இருக்கிறது அலை பேசாதீர்கள் என்று சொல்லிக் கடைசியில் அப்பா, பாப்பா வா போகலாம் என்று கனவில் வந்து கூப்பிடும் போது "இந்த அக்கற மயிறு மொதல்லயே இருந்திருக்கணும்ல'' என்று கேட்பதும் இன்னொரு கவிதையில் "ஒரு மலரினைப் போல் இருக்கட்டும் அவளின் தற்கொலை" என்று இளம்பெண்களின் தற்கொலையை நியாயப்படுத்தும் விதமாக எழுதியிருப்பதும் வருத்தத்திற்குரியதாகிறது.

மனநலம் பிறழ்ந்தவள் பாலியல் வன்முறைக்கு உள்ளாகும் காட்சியைக் கண்டவர் கலாம் கலாம் என்று பல கலாம்கள் சொல்லிக் காணாமலே கடந்திருக்கலாம் என்கிறார் "கலாம்கள்" கவிதையில். எங்கே தொலைத்தோம் நம் மனிதத்தை? கண்முன்னே நடக்கிறது, அதுவும் மனம் பிறழ்ந்தவளுக்கு.

பறவைகள் விலங்குகள் கூட தங்களுக்குள் ஆபத்தில் உதவ சண்டையிட முன் வருவதைப் பார்க்கிறோம். கண்முன்னே நடந்த அநீதி கண்டு பிறர் மூலமாவது உதவ முன்வந்திருக்கலாமே, ஏனித்தனை கலாம் என்று கேள்வியை இக்கவிதை முன்வைக்கிறது.

கடவுளை ஆராதிப்பவனின் நீலம் பாரித்த விழிகள் ஒரு வெறுப்பு மனம் கொண்டு கடவுளைக் கல்லாக்கி இஞ்சி இடிக்கிறான் தேத்தண்ணிக்கு.

இதேபோல் "நீலம் பாரித்தவள்" கவிதையிலும்

"விழிகளில் விஷமோவென விலகும் முன்
நீலநிறத்தில்






எரியும் கக்கிச் சென்றது அது"

என்று நீலம் பாரித்த விழிகளை இரு கவிதைகளில் சொல்லிச் செல்கிறார்...

வைன் கவிதையை விட பொவண்டோவைக் குலுக்கிக் குறியீடாய் வைத்த கவிதையில்தான் மிகச்சிறந்த உணர்வு போதை ஏறுகிறது.

"விபத்து நேர்ந்திருக்கும்
மகனின் நண்பனை
மகனாய் ஒரு கணம் நேசித்த
வயிறு கலங்கி குலுங்குகிறது"

இங்கே ஒரு தாய்மையின் வயிறு பிசைந்து உள்ளம் பொங்கி வழிதலைப் பொவண்டோவை விடச் சிறந்த உதாரணத்தில் விளக்க முடியாது.

"நதிகள் நீரால் ஆனவை அல்ல
யூதர்களின் எலும்புகளாலும் கடவுளின் உதிரத்தாலும்" கடவுளின் உதிர நதியில் கூழாங்கல்லாய் உருள்கிறது யூதர்களின் எலும்புகள் என்ற மாயப் புனைவும் அபாரம். சமையலைப் போல் கடவுள்களை அதிகக் கவிதைகளில் பயன்படுத்துகிறார். பேச்சு மொழிக் கவிதைகள் தான் என்றாலும் நாட்டுப்புறப் பாடலொத்த இரு கவிதைகளும் இருக்கின்றன.

"எறிந்து விட்டே வருகிறேன்
போராட்டக்களங்களில்
சொற்களோடு
சில புழுக்களையும்
அதுவோ இதுவோ
குடைந்தே தீரும்
ஏதாவது ஒன்று"

ஒன்றல்ல இரண்டும்தான். புழுக்கள் உடலைக் குடையும். சொற்கள் மனதைக் குடையும். சண்டைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தீர்வுகளை லாவகமாய் வீசுகிறார்.

நாம் நேயத்தின் பொருட்டு எதையோ ஆர்வமாகப் பேசப் போக அக்கேள்விகளின் பதில்களாய்க் கடந்தகாலக் கதைகளைப் பேசி அவர்களின் முழு வன்மங்களையும் வார்த்தைகளால் தீர்த்துக்கொள்ளும் அனேகர்களுக்கான ஒரு வரி, "பதில்களின் தூக்குக் கயிற்றில் இறுகி விட்டதென் பேரார்வம்" என்கிறார். இப்படித்தான் நல்ல பல உறவுகள் நட்புகள் சாகடிக்கப்பட்டுக் கடைசியில் யாருமற்ற நிலை எய்யும். ■

• கவி: ரத்னாவெங்கட்

# இடக்கரடக்கல்



ஒரு நீண்ட பகல்
முடியாத சலிப்பின்
ஆசுவாச விநாடியில்
உன் வழியில் நான் இடற
பகலும் இரவும்
ஒன்றையொன்று கடந்திடும்
குழப்பமான ஒளிப் புள்ளியில்
என் கவனம் உன்னால்
சிதறடிக்கப்பட

இருத்தலியலின்
கோடுகள் தென்படாத
இருள் மயக்கத்தில்
வனப்புலி நீ எனவும்
வனப்பு இலங்கிழாய்
மட்டுமே நான் எனவும்
மூடுபனியில் மறைந்திட
உடுக்கையின் உறுமலில்
உதறி நழுவி உயிர் தழுவி
களி நடமிட்டு
மாற்றாளாக்கி
மந்திக்க வைத்த மகிழ்வில்
அடுக்களைச் சாம்பலில்
சுருண்டு உறங்கச்
சென்று விட்டது இசை!

கை விடுத்த மதியோ
உருவற்றுச் சிதைய
இடுக்கண் களையவென்றே
கரங்கள் நீள்கிறது
அபயஹஸ்தங்களுடன்.
தடவித் தடவி
எனைத் தேடியணிந்து
விலகுகையில்
கண் விழித்துப் பார்க்கும் அதற்கு
புதிய சந்தத்தில் பாடலும்
மெல்லியதாய் ரீங்கரிக்கும்
வீணையின் நாதத்தையும்
பரிசளித்து
பற்றும் விரல் பிடித்து
மௌனமாய் நடக்கிறேன்..

முனை கடக்கையில்
முதுகில் ஊரும்
எகத்தாள உருமியில்
சொடுக்கி நிமிர்கிறது உடல்
தளரும் விரலை
இறுக்கிப் பிணைத்து
ஆவேசத்துடன் நகர்கிறேன்
புனையத் தொடங்குகிறது மனம்
வேகம் கூடக்கூட
நாளம் அதிர அதிர
உதிர்கிறது சொற்கள்
உதறும் கால்களடக்கி
திரும்புதலற்ற வைராக்கியம்
நடுக்கமுற்றுச் சமன்பட
மரித்த மெய் கடந்து
பிறக்கிறது இக்கவிதை. ■

கட்டுரை

• திலகபாமா
ஓவியம்: அன்பழகன்



# அரசியலும் பெண்களும்



பெண்ணுக்கு அரசியல் குறித்த சிந்தனை உண்டா? இந்தக் கேள்விக்குப் பலர் மறுப்பையே பதிலாகச் சொல்வதுண்டு. ஆனால் ஆண்கள் சொல்லுகின்ற அரசியலைப் பேசாதவர்களாக இருந்த நேரத்திலும் பெண்கள் தங்கள் வாழ்வில் கற்பிக்கின்ற, வாழ்வில் வெளிப்படவைக்கின்ற தன்மையில் தங்களுக்கான பாணியில் அரசியலை வெளிப்படுத்திக்கொண்டுதானிருந்தார்கள். இன்றைக்கும் தன் அரசியலைச் செய்தும் கொண்டிருக்கின்றார்கள். ஆணின் வெளிப்பாட்டோடு அவள் ஒன்றுபடுவதே இல்லை. பெண்ணை அன்று தொடக்கம் இன்று வரை குடும்பம், தன் வீட்டுக் கடமை தாண்டிச் சிந்திக்க முடியாதவளாகவும், ஆணின் உத்தரவைச் செயல்படுத்தும் அடியாளாகவுமே வைத்திருக்க விரும்புகிறது சமூகம்.

தான் தன் குடும்பம் இவற்றிலிருந்து ஓய்ந்து இருக்கின்ற நேரத்தில் வெளிஉலகத்தை அரசியல் தளத்திலிருந்து பெண் கேள்வி எழுப்பினால் அவள் தளம், கேள்வி, பார்வை எல்லாம் சிறுமையானதாகவும் ஆணுக்குப் பழக்கமில்லாததாக, ஒத்துக்கொள்ள முடியாததாகவுமே நம்பப்படுகின்றது. அதனாலேயே அவள் அரசியல் செயல்திறத்தை ஆண்கள் பயிற்றுவிக்கக் கடமைப் பட்டவர்களாகத் தங்களை நம்பிக் கொள்கின்றார்கள். அவள் இயல்பு ஏற்கெனவே இருக்கின்ற அரசியலைப் புறந்தள்ளுகின்ற முனைப்பில் இருக்க அவளும் தள்ளப்பட்டுப் பின்வரிசையில் அமர்த்தப் படுகின்றாள். எப்பவாவது பெண் அடையாளம் முன்னிறுத்தப்பட தேவைப்படுகிறபோது மட்டுமே அவள் பொம்மையாக அலங்கரிக்கப்பட்டு முன் அமர்த்தப்படுகிறாள்.

அப்படி அமர்த்தப்படுகிறபோது அவள் தன் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள என்ன செய்து கொண்டிருக்கிறாள்...

1. ஆண் விரும்புகின்ற ஒரு பெண்ணாய், ஜடமாய் மாற்றிக் கொண்டால் அவள் முன் வரிசை இடம் தக்க வைக்கப்படுகிறது என்பதை உணருகின்றபோது அப்படியே ஆகிப் போகின்றாள்.

2. ஆண் செய்கின்ற சூழ்ச்சிகளை தந்திரங்களை மட்டுமே அரசியல் என்று நம்பத் தொடங்கிச் சேலை கட்டிய ஆணாக மாறிவிட்டால் அவள் இருப்பு தக்க வைக்கப் படும்.

இது பெண்ணை வெற்றி கொண்டவளாக ஆண் நம்புவதற்குப் பெண்கள் இன்றைக்கும் அரசியலில் செய்துகொண்டிருப்பவை.

ஆனால் எனது கேள்வி என்னவென்றால் அவன் விரும்புகின்ற அவளாக அல்லது அவனையே படி எடுத்தல் என்பது என்னை இழந்து விடுதலுக்குச் சமானம். இந்த இழப்பைச் செய்துதான் பெண் அரசியலில் வெற்றியைப் பெறமுடியுமா? அப்படியென்றால் அது வெற்றியா? ஆண் வெற்றியென்று ஒத்துக் கொள்கின்றபோது அவள் தோல்வியடைந்து விடுகின்றாளே? அவள் எப்படி உன் வெற்றி மகிழ்ச்சியைத் தனதாக்கிக் கொள்வாள்? அது பெண்கள் நிராகரிக்கவேண்டிய வெற்றியாகவே இருக்கின்றது.

அடுத்து பெண்களோடு அரசியல் என்பது ஒவ்வொரு ஆண் அரசியல்வாதிக்கும் சிக்கலான விசயமாக உள்ளது. காரணம் இதுவரை பெண்களை வீட்டிலும் அலுவலகத்திலும் தன் சொல் கேட்பவர்களாகவும் தன் திட்டங்களைச் செயல்படுத்துபவர்களாகவும் தனக்கு மேல் ஏதொன்றும் தெரியாதவர்களாகவும் தான் பாதுகாக்க வேண்டியவர்களாகவும் எண்ணிக் கொண்டிருக்கின்ற ஆண் அரசியல்வாதியால் அவளைத் தனித்துச் செயல்படக்கூடியவளாக ஒத்துக்கொள்ள முடிவதில்லை. பெண்களின் பிரதிநிதியாக உயர்பதவிகளில் பெண் அமர்த்தப் படுகின்றபோது, சலுகையாக அவளுக்குப் பதவி வழங்கப்பட்டுவிட்டதாக யோசித்துத் தொடர் நிராகரிப்பைத் தருகிறவர்களே அதிகம்.

ஆனால் அதையெல்லாம் புறம் தள்ளி தான் அந்த அரசியல் தளத்தில் முக்கியமானவளாக மதிக்கப்படுவதற்கான தொடர் பயணத்தைச் செய்கிறவர்கள் சுய செல்வாக்கில் மிளிர்கின்றார்கள். பல நேரங்களில் உத்தரவுகளைத் திறமையாகச் செயல்படுத்து கின்றீர்கள் என்று சொல்லிவிட்டு உத்தரவுகளை மட்டும் பிறப்பித்து அவள் சிந்தனைகளை முற்றிலும் அழித்துக் கிளிப்பிள்ளையாக மாற்றிவிடும் வேலையை ஆண் அரசியல் செய்துவிடுகின்றது. அதிலிருந்து தனக்கான பயணத்தையும், தான் விரும்பிய பயணத்தையும் அந்த ஆணே அறியாமல் செய்வதுவே பெண்ணின் அரசியல் களமாகி விடுகின்றது.

பணம் பணம் பணம் பணத்துக்கான அதிகாரம், அதற்கான சூழ்ச்சி இவ்வாறாக இருக்கின்ற ஆணின் அரசியலுக்கிடையில் தாய்மை எப்படி பயணிக்க முடியும்?

வழி தவறிய குழந்தையைத் திருத்தச் சூடு வைக்கும் தாய்மையாய்ப் பெண் பொய்மையும் வாய்மையுடைத்து என வள்ளுவன் வாக்காயும் செயல்பட தேவையாயிருக்கின்றது.. பெண்ணின் தாயாண்மை அரசியலுக்குள் வரவேண்டும். அது நோயுற்றிருக்கின்ற அரசியலுக்குப் புதுஇரத்தம் பாய்ச்சுவதாக அமையும். அதற்கு இவ்வளவு உளவியல் சிக்கல்களுக்குள்ளிருந்துதான் பெண் பயணிக்கின்றாள் என்பதை ஆண்கள் உணர்ந்து சுதந்திரமாகச் செயல்பட தலையீடுகளை நிறுத்த வேண்டும். பெண் தன்மேலும் தன் உணர்வின்மேலும் நம்பிக்கை வைத்துப் புதிய சிந்தனைகளைச் செயல்வடமாக்கத் தனித்துவமாக முன் வரவேண்டும். ■

சிறுகதை

# சித்தாளு சுசீ

• அன்பு மணிவேல்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

"ஏம்மா...இன்னா ஏதுன்னு என்னாண்ட ஒரு வார்த்தையும் கேக்கமாட்றியேம்மா. நீ எதுவுமே கேக்காம எப்பயும் போல பேசிச் சிரிக்கிறது தாம்மா என்னைக் கொலையாக் கொல்லுது" என்று என் முகத்தைப் பார்ப்பதைக் கவனமாய்த் தவிர்த்தபடியே கீரையை ஆய்ந்து கொண்டிருந்தாள் சுசீலா.

அவளையொட்டி நானும் உட்கார்ந்தவாறே "முதல்ல இந்தக் காப்பியக் குடி.. பெறகு பேசலாம்" என்று அவள் கையில் ஒரு காப்பியைத் திணித்துவிட்டு என் கைகளுக்குள் புதைந் திருக்கும் காப்பியின் கடுஞ்சூட்டை ஊதிக் கொண்டே அவளை உறிஞ்சத் தொடங்குகிறேன்.

நினைவுகள் சில மாதங்கள் பின்னோக்கி நீளுகின்றன. ஆறு மாதமிருக்குமா இவள் வேலைக்கு வந்து.. ம்ம்... இருக்கும்.

நல்ல கருப்பு. கொஞ்சம் குட்டையும் கொஞ்சம் குண்டுமாய்... ஆனால் நாட்டுக்கட்டை என்பார்களே அதுபோலொரு தோற்றம். படிய வாரிய தலையும் பாந்தமான உடுத்தலும் அவள் நேர்த்தியைக் காட்டின. மூக்கில் பதவிசாய் உட்கார்ந்திருந்த எட்டுக்கல்லு பேசரி அவளின் களையான முகத்தை இன்னும் ரொம்பவே எடுப்பாக்கி இருந்தது.

நாங்கள் இப்போது கட்டிக்கொண்டிருக்கும் வீட்டுக்கு வாட்ச்மேன் குடிசைக்குக் கொட்டகை போட வந்த கணேசன் அண்ணன்தான் "உங்களுக்கு ரொம்ப ஒத்தாசையா இருக்கும்மா.. நம்மூட்டு வேல கணக்கா இழுத்துப்போட்டுப் பாக்கும்" என்று சொல்லிச் சித்தாளாக அழைத்து வந்தார்.

இரண்டு நாளிலேயே அவளை ரொம்பவே பிடித்துப் போயிற்று எனக்கு. மற்ற வேலையாட் கள் போலக் கணக்காய் ஒன்பது மணிக்கு வராமல் காலை எட்டு மணிக்கெல்லாம் இழுத்துச் செருகிய சேலையோடு கட்டிடத்தில் ஏறிவிடுவாள் தண்ணீர் பாய்ச்சி விடுவதற்கு. டீ குடிக்க சாப்பிடவென்று முடிந்தவரை நேரத்தைக் கடத்தும் சக வேலையாட்களை விரட்டி வேலை வாங்குவாள்.

செங்கல் மண் சிமெண்ட் என்று வந்து இறங்கும் சாமான்களைச் சரிபார்த்து இறக்குவாள். மாலை எல்லோரும் வேலை கலைந்து போக.. இவள் நின்று கட்டிடம் முழுக்க தண்ணீர் பிடித்துவிட்டுப் பிறகுதான் கிளம்புவாள்.

காலப்போக்கில் எனக்கும் அவளுக்குமிடையே ஏற்பட்டிருந்த ஒரு நல்ல புரிதலில் என்னோடு வெகு இயல்பாய் ஒட்டிக்கொண்டாள். ஞாயிறுகளில் வீட்டுக்கு வருவதும் வேலைகளில் எனக்கு ஒத்தாசை செய்வதும் கூட வாடிக்கையாயிற்று. மெல்ல அவளைப் பற்றிக் கேட்டதற்குக் கொட்டகைக்காருதான் தனக்கு எல்லாமே என்றதோடு முடித்துக்கொண்டாள். என் சுபாவப்படி மேற்கொண்டு அவளை நான் எதுவும் கிளறவில்லை.

ஆனால்... கணேசண்ணனுக்கு சுசீலா தொடுப்பென்றும் கணேசண்ணனை இவள்தான் வளைத்துப் போட்டுக் கொண்டாளென்றும் கைகாரி.. ஆள்மயக்கி.. யாரோடும் ரொம்பப் பேச்சு வச்சுக்க மாட்டா.. திமிர் பிடித்தவளென்று அவளைப் பற்றியும்; புருசன் செத்துப்போனவளைக் கணேசண்ணன்தான் வளைச்சுக்கிட்டாரு.. ஒத்தாளாப் போனவக்கிட்ட நல்லாக் காசு பாக்குறாரு என்று கணேசண்ணன் பற்றியும் ஏகப்பட்ட பேச்சுக்கள் தாறுமாறாய்த் தடுக்கி விழுந்தன கட்டிட வேலைகளினூடே.

கணேசண்ணனுக்கு சுசீலா காசு தருவதை நானும் சிலமுறை கவனித்திருக்கிறேன். அவளுக்கான வேலைகளில் எந்தவிதமான குறைகளும் சொல்ல முடியாதபோது அதைத் தாண்டி அவளது தனிப்பட்ட விசயங்கள் எதுவும் எனக்குத் தேவையில்லை என்பதில் நான் மிகத் தெளிவாகவே இருந்தேன்.

பணிகளினிடையே டீ குடிக்கும்போதெல்லாம் காக்கா, குருவி, நாய் என்று கண்ணில் தென்படும் உயிருக்கெல்லாம்... தனக்கான டீயிலும் வடையிலும் பங்கு வைத்து இவர்களையெல்லாம் என் புது வீட்டிற்கு எப்போதும் அழையா

விருந்தினர்களாக்கி இருந்தாள் சுசீலா. நாளடைவில் என் வீட்டைச் சுற்றியே இவைகளின் வாசம் என்றாகிப் போனதில் ரொம்பவே நெகிழ்வெனக்கு.

இவள் இப்படியென்றால்.. மா, பலா, வாழை, ரோசென்று செடிகளையும் விதைகளையும் தேடித் தேடிக் கொண்டுவந்து.. வெற்று இடங்களென்று கட்டிடத்தில் ஒதுக்கியிருந்த பகுதிகளில் மண்ணைச் செதுக்கிப் பக்குவப்படுத்தி அவர் பங்குக்கு அத்தனையும் விதைத்திருந்தார் கணேசண்ணன். வீட்டோடு அவற்றையும் சேர்த்து வளர்த்து விடுவதில் சுசீலாவிற்கும் அவருக்குமிருந்த பிரியமும் மெனக்கெடலும் ரொம்பவே அலாதியானது.

மொத்தத்தில் என் கனவு இல்லத்தை.. அது கட்டி முடிக்கப்படுவதற்கு முன்பாகவே அத்தனை உயிர்ப்போடு அதை நனவாக்கித் தருவதில் இவர்கள் இருவரின் முனைப்பும் உழைப்பும் இவர்களை என் மனதுக்கு மிகவும் நெருக்கமாக்கி விட்டிருந்தது என்றே சொல்லவேண்டும்.

இந்நிலையில் கர்ப்பப்பைக் கோளாறு காரணமாக ஆபரேசன் செய்துகொண்டு பதினைந்து நாட்கள் ஓய்விலிருந்த சுசீலாவைக் கணேசண்ணன்தான் கூடவேயிருந்து கவனித்துக் கொண்டாரென்றும்; ஆப்புட்டாலும் இப்பிடில்ல... ஆப்புடனும் எல்லாருக்குமா இப்புடி வாய்க்குமென்றும் செங்கலுக்கும் மண்ணுக்கு மிடையே புழுதியோடு புழுதியாய் மினுக்கிக் கொண்டு திரிந்தன ஏகப்பட்ட புரணிகளும் புகைச்சல்களும்.

மனசு கேட்காமல் வீடு விசாரித்துக்கொண்டு அவளைப் பார்க்கப் போனேன். வண்ணாரப் பேட்டையில் பிள்ளையார் கோவிலுக்குப் பின்னாடி அவள் வீடு கண்டுபிடிப்பதில் எந்தச் சிரமமும் வைக்கவில்லை வாசலில் காய்ந்து கொண்டிருந்த அவள் சேலைகள்.

குடிசைக்கு வெளியே தாழ்வாரம் போல இருந்ததில் சாதம் வடித்துக்கொண்டிருந்தார் கணேசண்ணன். நான் லேசாய்த் தொண்டையைச் செருமி 'சுசீ'யென்று இழுக்க.. திரும்பிய கணத்தில் சட்டென்று தொற்றிக்கொண்ட பரபரப்பில் "ம்மா.. வாம்மா.. வா.. செத்த நில்லும்மா, கூட்டியாரேன் அந்தப்புள்ளயெ"ன்னு ஓடப்பாக்க.. "நல்லாருக்கு.. முடியாதவளை வரச் சொல்லிட்டு நான் நிக்கவா.. நான் உள்ள வாரேன்"னு பேசிக்கிட்டே குனிஞ்சு உள்ளே போனேன்.

சாணி மெழுகின தரையோடு பத்துக்குப் பத்து இடம் அத்தனை சுத்தம். கீத்து ஓரமெல்லாம் சீப்பு கண்ணாடி சாமிப் படம்னு செருகியிருக்க ஓரமாய்க் கிடந்த கயிற்றுக் கட்டிலில் நைஞ்ச துணியாட்டம் ஒட்டிக்கிடந்தாள் சுசீலா.

பக்கத்தில் உட்கார்ந்து அவள் கைகளைச் சுவாதீனமாய் எடுத்து என் கைகளுக்குள் அழுத்திக்கொண்டதும் ரொம்பவே இளகிப்போனாள். "டீயோ கலரோ வாங்கியாரவா''ன்னு படபடப்போட கணேசண்ணன் வாசற் கதவருகிலேயே நிற்க.. "அத்தெல்லாம் இந்தம்மா குடிக்காதுயா.. காப்பிதான் குடிக்கும்''னு சொல்லியவாறே எழுந்து உட்கார்ந்தாள் சுசீலா.

சிரித்துக்கொண்டே "இருக்கட்டும்ணே.. நீங்க உக்காருங்க"னு நான் சொன்னாலும் "பேசிட்டு இருங்க.. நான் வெளில இருக்கேம்மா''ன்னு



நகர்ந்துவிட "ஏம்மா இத்தினி தூரம் வந்தே.. நல்லாயிருக்கியாம்மா" என்றாள் சுசீலா.

"நீ எப்டி இருக்கே.. முதல்ல அதச்சொல்லு. முடியாததோட துணியெல்லாம் தொவைச்சிருக்க போல.."

"நானெங்கம்மா பாக்க.. எல்லாம் அவுருதான் கெடந்து செரமப்படுறாரு.. சொன்னாலும் கேக்கமாட்டாரு" என்று வெட்கத்தினூடே சலித்துக்கொண்டாள்.

வலிகள் தின்றுகொண்டிருக்கும் அவளிடத்தில் வலிக்காது பூத்து நின்ற வெட்கம்.. அவர்களின் அந்நியோன்யத்தை அப்பட்டமாய்ப் போட்டுடைத்தது என்னிடத்தில்.

அடுத்து வந்த நாட்களில் அவளில்லாதபோது காண நேர்ந்த கணேசண்ணனிடம் தாளமுடியாது நான் கேட்டேவிட்டேன்.

"ஏண்ணே... இப்டி. உங்களுக்குன்னு குடும்பம் இருக்கு. சுசீலா பாவமுண்ணே. இது நல்லாவா இருக்கு?" என்றதும் "தங்கச்சிம்மா" என்று கலங்கிய அவரை இதற்கு முன் இப்படிப் பார்த்ததே யில்லை.

"என் ப்ரெண்டு பொண்டாட்டிதாம்மா சுசீ. அவன் போனதுக்கப்புறம் ஒத்தாளா இந்தப்புள்ளெ மருகிட்டுக் கெடக்க.. பாத்துட்டு ஒதுங்க முடிலம்மா. எப்பயாச்சும் போக வர ஒத்தாசையா இருப்பேன். அதுல ரெண்டு பேருக்குமே பேரு கெட்டுப்போச்சு. அதுவரைக்கும் சாமி சத்தியமா தப்பா நினைக்காத நான் என்னால பேருகெட்டு நிக்கிறாளேன்னு உடஞ்சு போயிட்டேன். என்ன ஆனாலும் சரி இனி நான்தான் இந்தப் புள்ளெக்கு எல்லாமுன்னு முடிவு பண்ணிக்கிட்டேன். கல்யாணம் செஞ்சுக்கலாமுன்னு எம்புட்டோ சொன்னேம்மா. கேக்கல அந்தப் புள்ளெ. இப்புடியே போயிருச்சு வருசம். ஒளிச்சு மறைச்செல்லாம் வச்சுக்கலம்மா இவள. தாலி கட்டாட்டியும் ஊருக்கே தெரியும் இவளும் எம் பொண்டாட்டின்னு. நான் அப்புடித்தான் எல்லார்ட்டயும் சொல்லியிருக்கேன். கட்டுனவளுக்கும் இது தெரியும். ஆரம்பத்துல கத்துனா. பின்னாடி இவதான் எனக்குக் காசு தரான்னு தெரிஞ்சுக்கிட்டுக் கம்முன்னு ஆயிட்டா. அவளுக்கு அல்லாமே காசுதான். நான் சுசீயப் பாத்துக்கல. அந்தப் புள்ளெதான் என்னியப் பாத்துக்குது. எங்கம்மாவாட்டம் அவ. இன்னிவரைக்கும் என்ட்ட அவ எதயும் எதிர்பாக்கல. ஒருத்தருக்கொருத்தர் அன்பா ஆதரவா இருக்கோம். ரெண்டு பேத்துக்கும் கெடக்காத அனுசரணை.. எங்களுக்குள்ள கெடச்சதுனாலதான் இத்தெல்லாம்" என்று உடைந்துபோய் நின்றவரை நான் புதுசாய்ப் பார்த்தேன்.

இவர் எத்தனை அனுசரணையா இருக்குறா ரென்றுதான் நான் பார்த்தேனே அவள் வீட்டில். முடியாதவளுக்குத் தன்னால முடிஞ்ச தெல்லாம் செய்யுறதுக்கு எந்தப் புருசனுக்கும் ஒரு மனசு வேணுமே. அது இவரிடம் கொட்டிக் கிடக்கிறதென்று புரிந்துகொண்டேன்.

அதன்பிறகு.. சுசீ.. இதோ.. இப்பொழுதுதான் வந்திருக்கிறாள் என் வீட்டுக்கு.

கடந்த வாரத்திலிருந்து வேலைக்கு வரத் தொடங்கியும் அவள் வீட்டில் கணேசண்ணனைப் பார்த்தது குறித்து நான் எதுவும் கேட்காதது பற்றித்தான் இப்பொழுது பேசவருகிறாளென்று எனக்குப் புரியாமலில்லை.

அவளை அழுத்திக்கொண்டிருக்கும் ஒரு பெரும் சுமையினை இறக்கி வைப்பதற்காய்த் தகுந்த வார்த்தைகளைப் பொறுக்கி எடுப்பதில் நேரத்தைத் தின்றுகொண்டிருந்தாள் அவள்.

"சரி.. விடு. இப்போ நேரிடையாவே கேக்குறேன். கணேசண்ணனுக்குத் தாலி கட்டிக்காத பொண்டாட்டின்னு வெளில உன்னப் பத்தி பேசுறது இருக்கட்டும். கொஞ்ச நேரமே இருந்தாலும் அன்னிக்கு உன் வீட்டுல உன்ன அவரு எப்புடிப் பாத்துக்கிட்டாருன்னு கவனிக்காம இல்ல நான். எல்லாஞ் சரிதாம்பா.. ஒருத்தருக்கொருத்தர் தொணையின்னு முடிவு பண்ணிக்கிட்டிங்க. அப்புறம் என்னா.. ஒரு தாலியக் கட்டிக்க வேண்டியதுதானே.. அதானே ஒனக்கு நல்லது. உனக்கும் ஒரு பிடிமானம் வேணாமா. அதுக்கப்புறமா இந்தப் பேச்செல்லாம் இருக்காதுல்ல. அத ஏன் நீ யோசிக்கல சுசீ" என்றவாறு ஆழமாய் அவள் முகத்தை ஊடுருவினேன்.

நான் இயல்பாய் அவளோடு பேசத் தொடங்கியதிலிருந்து அவளைத் தவறாக எதுவும் புரிந்து கொள்ளவில்லை என்பதை உறுதி

கொண்டதும் கொஞ்சம் ஆசுவாசமானாள். அந்த நிம்மதியில் இதுவரை முகத்தில் அப்பிக்கிடந்த கருமை இப்போது காணாமல் போயிருந்தது.

பேசிக்கொண்டே இருவருமாய் ஆய்ந்து முடித்திருந்த கீரையை முறத்தோடு எடுத்து எனக்குப் பக்கவாட்டில் வைத்துவிட்டுச் சுவற்றோடு சுவறாய் முதுகைச் சாய்த்துக்கொண்டு என்னைப் பார்த்தாள்.

"என்ன சுசீ.. பதிலே இல்ல. நான் ஏதாச்சும் தப்பாக் கேட்டுட்டேனா?"

"ச்சும்மாரும்மா நீ வேற. நீ இப்டி எதுவும் என்னக் கேக்கலேன்னுதானே தவிச்சுக்கிட்டுக் கெடந்தேன் நானு. உன்னாண்ட எல்லாத்தையும் கொட்டணும்னுதானே நானே வந்தேன்."

"இப்ப சொல்லு சுசீ. கணேசண்ணன்கிட்ட நான் பேசவா கலியாணத்தைப் பத்தி."

இதழ் பிரித்து லேசாய்ப் புன்னகத்தவாறே... "அது எத்தினியோ கேட்டுருச்சுமா. நாந்தான் பிடிவாதமா வேணாண்டேன். தாலியில இன்னாமா இருக்கு. கழுத்துல கட்டிக்கிற ஒத்தக் கயித்துல யாருக்கு என்னத்த நீரூவிக்கப் போறென் சொல்லு. அந்தக் கயித்துலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லம்மா. அப்புடிக் கயிறு கட்டாததுனாலதான் அந்தாளு குடும்பம் நிம்மதியா இருக்கு. இல்லாங்காட்டி நாளப்பின்ன எதுனாப் பங்குக்கு வந்துருவேன்னு பதறிப் போகுமுல்ல. எங்களால அவுங்கூட்டுல எந்தப் பெரச்சனையும் வரக்குடாது. இத்த எப்பயும் எம் மடில கட்டிக்கிட்டு இருக்கணும்னு ஒருக்காலும் நினைக்கல. எப்புடிப் பாத்தாலும் அந்தூடுதான



முதல்ல அந்தாளுக்கு. எனக்கொன்னுனா துடிக்க அது இருக்கு.. அதுக்கு ஒன்னுனா நான் இருக்கேன். அம்புட்டுதேன் எனக்கு. வேறொன்னும் வேண்டாம்.

குடியில கொடலு வெந்துதான் எம்புருசன் போய்ச் சேந்தான். மனசுல நிக்கிறாப் போல பெருசா ஒன்னும் அவனோட நான் வாழ்ந்துடல. அவனுக்கப்புறம் ஈயால்ல மொச்சானுங்க கூட வேலை செய்யிறவனுங்க. எனக்கும் நல்லது கெட்டது கேக்கப் பாக்க ஆளிருக்குன்னு இதுதாம்மா நம்பிக்கையக் கொடுத்துச்சு. அப்பவும் இப்பவும் எதுவும் எதிர்பாக்கல அது. ஒருத்தன் ஒரு சொல்லு சொல்ல உடாது என்னை.

கொதிச்சுப் போயிரும். அதச் சுத்தி இருக்குறவுங்களுக்கு ஒன்னுன்னா கையில இன்னா முடியுதோ யோசிக்காமக் குடுத்துரும். சமயத்துக்கு அதுங்கையில இல்லேன்னா எங்கையில புடுங்கிக் குடுக்கும். ஓட ஒடியாற ஒடம்பால அத்தினி பேத்துக்கும் உசுரக் குடுக்கும். கொழந்தப் புள்ளெயாட்டம் மனசு. இப்டியே போறபடி போட்டும்மா" என்றவளைப் பார்த்து,

"நீ சொல்றதெல்லாம் சரின்னே வெச்சுக்கு வோம். ஒரு கொழந்தையாச்சும் பெத்துட்ருக் கலாமே. அசந்த காலத்துல அண்டிக்க உனக்குன்னு ஒரு புடிமானம் இருக்குமுல்ல" என்றேன்.

சத்தமாய்ச் சிரித்துக்கொண்டே "அடப்போம்மா.. நீ. இங்கே யாரும் யாருக்கும் புடிமானம்னெல்லாம் ஒன்னுமில்லம்மா. சோலி முடிஞ்சா போயிக்கினே இருக்க வேண்டியதுதான். எங்கப்பன் ஆத்தா புருசன் யாரு இருக்கா இப்ப என்னோட. நாளைக்கு நான் அப்புறம் அந்தாளு. இருக்கந்தட்டிக்கும்தாம்மா ஒறவெல்லாம். யாரும் யாருக்கும் சதமில்லம்மா இங்கே" வெகு சாதாரணமாய்ச் சொன்னவளைப் பார்த்து இத்தனைத் தெளிவா எப்படி இவளால யோசிக்க முடிகிறதென்று அசந்துதான் போனேன் நான்.

ஒருவழியாக நாளும் பொழுதும் போட்டி போட்டுக்கொண்டு ஓடி முடித்ததில் வீடு அற்புதமாய் வளர்ந்து நின்றிருந்தது வெகு நிறைவாய் இருந்தது எனக்கு.

கிரகப்பிரவேசத்திற்கு நாள் குறித்தாயிற்று. பந்தல் போடுவது முதல் விசேசத்திற்கு வீட்டைச் சுத்தப்படுத்தித் தயார்ப்படுத்துவது வரைக்கும் அத்தனை வேலைகளையும் மாங்கு மாங்கென்று சுசீயும் கணேசண்ணனும் பங்கு போட்டுக் கொண்டு இரவு பகல் பாராது எடுத்துச் செய்தது எனக்கு மிகப் பெரிய உதவியாக இருந்தது.

கிரகப்பிரவேசத்திற்கு எல்லோருக்கும் போலவே சுசீலாவுக்கும் கணேசண்ணனுக்கும் புதுத் துணி எடுத்துக் கொடுத்து விசேசத்திற்கு உடுத்திக்கொண்டு வருமாறு அழைத்திருந்தேன்.

அன்றைக்கு இருவரையும் புதுத்துணியில் அருகருகே பார்க்க அத்தனை அழகாய் இருந்தது எனக்கு. அவர்களைத் தனியாக ஒரு போட்டோ எடுத்து வைத்துக்கொண்டேன். அருகருகே நிற்கச் சொன்னதும் இருவருக்கும் அப்படியொரு வெட்கம். இதையெல்லாம் பார்க்கப் பார்க்க மனம் பொசுங்கிப்போனது மற்ற வேலையாட்களுக்கு.

யார் கண் பட்டதோ... எண்ணிப் பத்து நாள் ஆகவில்லை. லாரியில் அடிபட்டு அந்த இடத்திலேயே உயிரற்றுப்போன கணேசண்ணனின் உடம்பை அவர் வீடு அள்ளிக்கொண்டு போயிற்று.

செய்தி கேட்டதிலிருந்து இடி விழுந்தது போலானது எனக்கு. இத்தனை கொடூரமானதா காலத்தின் விளையாட்டு. அன்பினால் மட்டுமே உயிர் பூத்துக் கிடக்கும் இரு மனங்களை வேரறுக்கும் துணிச்சல் எப்படி வந்தது அந்த விதிக்கு. ஒருவரைத் துரத்த ஆரம்பிக்கும் துயரம் கொஞ்சம் கூட நின்று மூச்சு வாங்கிக் கொள்ளாதா என்ன. விடக்கூடாதென்று முடிவு செய்துவிட்டால் கருவிலிருந்து கல்லறை வரைக்கும் கூட ஒருவரைத் துரத்தும் துயரக்காடு. அதுவே பற்றிக்கொண்டு எரிந்தால்தான் உண்டு. அவ்வளவு எளிதாய் யாரும் அதைக் கடந்துவிட முடியாது போலும்.

எனக்கும் அவர்களுக்கும் இடையே கொஞ்சமே கொஞ்ச கால பழக்கம் தானென்றாலும் அவர்களுக்கிடையே ஊறிக்கிடந்த நேசத்தைப் புரிந்துகொண்ட வகையில் என்னாலேயே இதைச் செரிக்க முடியாதபோது சுசீலாவின் நிலை... நினைக்கவே நடுங்கிப் பதறியது என் நெஞ்சம்.

வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு எல்லோரும் கணேசண்ணனின் வீட்டிற்குத் துக்கம் கேட்கப் போக.. நான் சுசீலாவைப் பார்க்கப் போனேன்.

கடும் புயலுக்குக் கட்டோடு இழுத்துச்சென்று சின்னாபின்னமாகிச் சிதறிக்கிடக்கும் மரம் போல் தரையில் வீழ்ந்து கிடந்தவளை என்னால் எதிர்கொள்ள சிஞ்சித்தும் திராணியற்றுப் போனது. என்ன சொல்லித் தேற்றுவது அவளை. எதைச் சொன்னாலும் தேற்றிவிட முடியுமா என்ன.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இனிப்பையோ கசப்பையோ காலம் அதன் போக்குக்கு நம் மீது வாரியிறைத்து விட்டுச் செல்வதை மறுதலிக்கும் வாய்ப்பு மறந்தும் கூட நமக்குத் தரப்படுவதில்லையே. நம் துக்கத்திற்கு உட்கார்ந்திருக்குமா என்ன நேரமும் காலமும். ஓடிப் போயிற்று ஒரு மாத காலம்.

கணேசண்ணனிடம் தாலி கட்டிக் கொண்டவள் வீடு தேடி வந்து என்னிடம் "அந்தாளு காசு கீசு எதுவும் அந்தப் பொம்பளைக்கிட்ட இருந்தா மருவாதுயா கொடுத்துரச் சொல்லுங்கம்மா.. அந்தாளுக்குப் பந்தி வச்சேன்னு கதை சொல்லிக்கிட்டு ஏதானும் பங்கு கேக்குற நெனப்பிருந்தா ஊரை விட்டு எங்கானும் இப்பவே ஓடிரச் சொல்லிருங்க. இல்லாட்டி உசுரு தங்காது ஒடம்புல. எங்கண்ணந்தம்பியெல்லாம் சும்மா இருக்க மாட்டானுக. பொலி போட்டுருவானுக" என்று வாய்க்கு வந்ததை வாரியிறைத்துத் தூற்றிவிட்டுப் போனாள்.

அதன்பிறகு ஒரு வாரம் இருக்கும். சீட்டுப் பணம் தள்ளி எடுத்ததாய் அம்பதாயிரமும் ஒரு செட்டு தோடுமாக என்னைப் பார்க்க வந்தாள் சுசீலா.

"அந்தாளுக்கு அதும் பொம்பளப் புள்ளெ மேல கொள்ளை உசுரு. அது போய்ச் சேர்ரதுக்கு முன்னாடி மாப்புள்ளெ வூடு வந்துட்டுப் போயிருந்தாக அந்தப் புள்ளெக்கு. அந்தப் புள்ளெய மனசுல வச்சுக்கிட்டுத்தான் சீட்டுப் போட்ருந்தேன். அதத்தான் இப்போ தள்ளி எடுத்தாந்தேன். இது எங்கம்மாவூட்டு தோடு. இனி எனக்கெதுக்கு இந்த அழகெல்லாம். இந்தப் பணத்தையும் தோட்டையும் எம் பேரு சொல்லாம.. அதுங்கிட்ட சேக்குறது ஒம்பொறுப்பும்மா."

"ஏன்டி... உனக்கென்ன பைத்தியமா புடுச்சிருக்கு. பெரிய தியாகின்னு நெனப்பா. மாசா மாசம் சீட்டுப் பணம் கட்டணுமில்ல. உங்கம்மா தோடுங்கிற. பொசுக்குன்னு தூக்கிக் குடுக்கிற. எதாருந்தாலும் நெதானமா யோசிச்சுச் செய்யி. அவுகளுக்குச் சொந்த வூடு பணங்காசு அண்ணெந்தம்பி எல்லாமும் இருக்கு. ஒனக்கு என்னா இருக்கு. ரெண்டாவது கணேசண்ணன் காசுல எப்பவும் நீ பொழக்கலேன்னு எனக்கு நல்லாத் தெரியும். நீதான் அவுருக்குக் குடுத்துட்டு இருந்தேன்னும் ரொம்ப நல்லாவே தெரியும்."

ஆத்திரமான ஆத்திரத்தைக் கொட்டித் தீர்க்கிறேன். கொஞ்சமும் அசரவில்லை அவள்.

"நான்தான் சித்தாளுக்குப் போறேன்லம்மா. சும்மாவா இருக்கப் போறேன். சீட்டெல்லாம் நான் கட்டிக்குவேன். அந்தாளு கையில இருக்குறதெல்லாம் அள்ளிக் குடுக்கும் ஊருக்கு. பெத்த புள்ளெக்கு ஒன்னும் குடுக்காமப் போயிட்டான்னு போன மனுசன இழுத்து வச்சு ஏசுவாங்கெ மச்சினங்கெ. எங்கம்மாவுட்டு தோடுதான். இல்லீங்கல. அது காலத்துக்கும் இருந்து போட்டுக்க முடிஞ்சுதா என்ன. நான் இன்னும் எத்தினி நாளைக்கி.. அந்தப் புள்ளெ வாழப் போற புள்ளெ. எனக்கு ஒண்டேருந்து ஒன்னு மட்டுந்தான் வேணும்மா. அத்த மட்டும் குடுத்துரு. அதப் பாத்துக்கிட்டே மிச்ச காலத்தைத் தைரியமா ஓட்டிப்புடுவேன். என் தைரியமெல்லாம் அந்தாளு மட்டுந்தாம்மா. என்னை வுட்டுட்டு ரொம்ப நாளைக்கெல்லாம் அது இருக்காது. சீக்கிரம் என்னைக் கூப்புட்டுக்கும்... நீ வேணாப் பாரேன்."

"அடச்சீ. என்ன பேச்சு இது. இப்போ நான் என்ன செய்யணும் சொல்லு. எதாருந்தாலும் கேளு சுசீ. என்னால முடிஞ்ச சப்போர்ட் எப்பவும் ஒனக்கு உண்டு."

"அதுல எந்தச் சந்தேகமும் இல்லமா. அது இருக்கச் சொல்லத்தானே உன்னான்ட அல்லாத்தையும் கொட்டுறேன்."

"சரி.. சொல்லு. என்ன செய்யணும் நான்."

குளம் கட்டி நிற்கும் கண்களைத் தரை தாழ்த்தி மடை திறந்தவாறு வெளியே வந்து விழுகிறது அவள் மனசு..

"நம்மூட்டு விசேசத்துல அவுரையும் என்னையும் படம் புடுச்சியே. அது மட்டும் எனக்கு வேணும். அது மட்டுமே எனக்குப் போதும்." ■

# கல்விமுறை ஆய்வும் கௌரவ டாக்டர் பட்டமும்



நவீனா, தேனி மாவட்டம் அனுமந்தன் பட்டியைச் சேர்ந்த இவர், கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரசு உதவிபெறும் கல்லூரியொன்றில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். ஆப்பிரிக்கப் பெண் எழுத்துக்கள் குறித்த முனைவர்பட்ட ஆய்வினை மேற்கொண்டுவரும் இவர், ஆங்கிலத்தில் இரண்டு கவிதைத் தொகுப்புகளும், தமிழில் லிலித்தும் ஆதாமும் என்னும் பெண்ணியக் கட்டுரைத் தொகுப் பினையும் வெளியிட்டுள்ளார்.

இவர், பழங்குடியினக் குழந்தைகளின் வாழ்க்கைத் திறனைச் சிதைக்காத கல்விமுறையை அறிமுகப்படுத்தும் திட்டவடிவைத் தயாரித்துள்ளார்.

"கல்லூரியில் இளங்கலை பயின்ற நாட்களில் களப்பணியாற்றச் சென்ற இடங்களில் பழங்குடியின மக்களோடு பழகவும், அவர்களின் வாழ்வியலில் இருந்த நுட்பங்களைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பு கிடைத்ததால், அதன் பின்னர் அவர்களைப் பற்றி அதிகம் வாசிக்கவும், அறிந்துகொள்ளவும் முற்பட்டபோது அவர் களுடைய வாழ்க்கைத்திறன்கள் பழங் குடியினரல்லாத எவரிடமும் எளிதில் காணக்கூடியதாய் இல்லாத தனித்தன்மை வாய்ந்தவையாக இருந்தன.

ஆப்பிரிக்க எழுத்தாளரான புச்சி எமசேட்டா தனது புதினங்களில் ஆப்பிரிக்கப் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் திறன்களை நவீனக் கல்விமுறை சிதைப்பது பற்றிய தனது துயரத்தைப் பெரும்பான்மையாக வெளிப்படுத்தியிருப்பார். முனைவர் பட்ட ஆய்வுக்காக அவற்றை வாசிக்க நேர்ந்தபோது இங்கும் நமது தமிழகத்தில் பழங் குடியினரின் வாழ்க்கைத் திறன்கள் நவீன கல்விமுறையால் சிதைக்கப்படுகிறதா என அறிந்துகொள்ள வேண்டி ஆய்வு செய்யத் துவங்கினேன்.

உண்மையில் தற்காலக் கல்விமுறை பழங்குடியினக் குழந்தைகளின் வாழ்க்கைத் திறனைச் சிதைப்பதோடு அல்லாமல் அவர்களுடைய வாழ்வியல் சார்ந்த ஒரு எதிர்மறையான எண்ணத்தையும் உருவாக்கி விட்டிருப்பதை அவர்களுடனான உரையாடல் கள் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. அவர்களுடைய பழக்கவழக்கங்களின் தனிச்சிறப்பை உணர்ந்துகொள்ளும் வாய்ப்பை உருவாக்கத் தவறும் தற்போதைய கல்விமுறை, அவர்களுடைய தனித்தன்மைகளை நாகரிக உலகத்திற்கு ஒத்துப்போகாததாய் அவர்களை நினைக்கவைத்து விடுகிறது. பிற குழந்தைகளிடம் இருக்கும் திறமைகள் தங்களிடம் இல்லை என்கிற தாழ்வு மனப்பான்மையையும் அவர்களுக்குள் உருவாக்கக் கூடிய சூழலை உண்டாக்குகிறது.

இப்படி பல்வேறு உளவியல் சிக்கல்களைக் கல்வி அவர்களுள் உருவாக்கினாலும், அவர்களுடைய சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும், அவர்களுக்குக் கேடு விளைவித்துக்கொண்டிருக்கும் பல மூடநம்பிக்கை களை அவர்களிடமிருந்து களையவும் கல்வி அவசியமாகிறது. இதுவே பழங்குடியினக் குழந்தைகளின் தனித்தன்மையை, அவர்களுடைய வாழ்க்கைத் திறனைச் சிதைக்காத கல்விமுறையை அறிமுகப்படுத்தும் திட்டவடிவைத் தயாரிக்க என்னைத் தூண்டியது" என்று தனது தயாரிப்பிற்கான காரணங்களை விளக்குகிறார்.

இதற்காக, கடந்த பிப்ரவரி 29, 2020 அன்று கொல்கத்தாவில் நடைபெற்ற விழாவில் இவருக்கு அமெரிக்காவின் ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

படைக்கும் மனதிற்குச் சமூகம் மீதான ஆழ்ந்த அக்கறை உண்டென்பதை இந்த ஆய்வின் மூலம் நிரூபித்திருக்கிறார், நவீனா. வாழ்த்துக்கள்! ■

• அமுதா தமிழ்நாடன்



# சிகரம் தொடும் சிங்கப் பெண்கள்!

உலகின் தலைவாசல் என்று சொன்னால் அது பெண்களின் கருவறைதான். ஏனெனில் உலகில் உள்ள எல்லா உயிரினங்களும் அதனதன் பெண்ணினத்தில் இருந்துதான் உயிர்த்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் பெண்மை என்பது படைப்பின் ஆதிவேர். இத்தகைய மதிப்புடைய பெண்மையைப் போற்றுவது மானுடக்கடமையாகும்.

ஆதி உலகில் தாய்வழிச் சமூகம்தான் செழித்திருந்தது. அதுதான் ஆண்களையும் வழிநடத்தியது. ஈன்றவளான பெண்ணே ஆணையும் பராமரிக்கும் தன்மை கொண்டவளாக இருந்தாள். இதன்பின் காலம் மாறியது. தமக்கென்று ஒன்றைப் பத்திரப்படுத்தும் தனிமனித எண்ணத்தால், உடைமைச் சமுதாயம் தோன்றியது. அப்போது ஆண்களின் உடைமைகளில் ஒன்றாகப் பெண் சுருங்கினாள். இதனால், ஆண்களின் சகலவிதமான சுரண்டலுக்கும் பெண்கள் தன்னியல்பாய் ஆளாக நேர்ந்தது. பாதுகாப்பு என்ற பெயரிலேயே பெண்களை அடைத்து வைக்கத் தொடங்கினார்கள் ஆண்கள். அது ஜென்மாந்திரச் சிறையாகப் பெண்களுக்கு ஆனது. இடையில், நாகரிகம் மேலோங்கிய காலமான சங்க காலம், பெண்களுக்கும் கல்வி கொடுத்தது. இதனால் பெண்கள் எழுச்சி பெறத் தொடங்கினர். அவர்கள் காதலையும் காமத்தையும் கூட மனம்விட்டுப் பாடத் தொடங்கினர். குறைகளைச் சுட்டிகாட்டி ஆண்களின் தலையில் வலிக்குமாறு குட்டினர். அவர்களைச் சமாளிக்க முடியாத ஆண்களின் சமூகம், பழையபடி பெண் சமூகத்தின் கல்வியை மெல்ல மெல்லப் பறித்து, மீண்டும் அடிமை இருட்டுக்குள் அவர்களை அமரவைத்தது. ஆண்களுக்கு எதிராகச் சிந்திப்பதும் தெய்வ நிந்தனை என்று நம்பவைத்தது. கற்பு என்ற கற்பித வேலியைக் குடும்பப் பெண்களுக்கு மட்டும் போட்டுவிட்டு, அவர்கள் உலகம் வெளியே சுதந்திரமாக மேய்ந்தது. அது பெண்களை மரத்துப்போன கற்சிலைகளாக மாற்றிவைத்திருந்தது.

• • •

இந்தச் சூழலில், உலகில் மறுமலர்ச்சிச் சிந்தனைகள் 19ஆம் நூற்றாண்டில் மெல்ல மெல்லத் தலையெடுக்கத் தொடங்கின. வெளிச்சம் பல திசைகளில் இருந்தும் பலவிதமாகக் கசிய ஆரம்பித்தது. பகுத்தறிவின் சுடரில் எல்லா வகையான மூடக் கட்டுக்களும் இற்றுப்போகத் தொடங்கின. இந்தக் காலத்தில்தான் பெண்ணியம்



மீண்டும் கண்விழித்தது. இங்கே நம் பாரதிகளும்,

'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்கும் விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' என்று முரசுகொட்டத்தொடங்கினர். பெரியார் 'பெண் ஏன் அடிமையானாள்?' என்று தன் அதிரடிக் குரலை உயர்த்தி, பெண்களுக்கு மீண்டும் முதுகெலும்பை முளைக்கவைத்தார். 'கல்வி இல்லாப் பெண்கள் களர் நிலம்' எனப் பெண்களுக்குச் சிறகைத் தரும் கல்வியைப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனைப் போன்றவர்கள் வலியுறுத்தத் தொடங்கினர். இப்படிப்பட்ட முற்போக்குவாதிகள் கொடுத்த உரத்தால், இன்று பெண்களைச் சுற்றிவளைத்திருந்த சிறைகள் எல்லாம் பல வகையிலும் உடைந்து தெறித்துக்கொண்டே இருக்கின்றன. காரணம் பெண்கள் விழிப்புற்று எழுந்ததோடு, நிமிர்ந்து நிற்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். பெண்களின் இத்தகைய பேரெழுச்சியின் அடையாளமாகத் தான் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப் படுகிறது.

• • •

உலகப் பெண்கள் தினத்தை ஐ.நா.சபை 1975 இல் அங்கீகரித்தது என்றாலும், அதற்கு முன்னரே இதற்கான விதைகள் பரவலாக விழத் தொடங்கிவிட்டன. பெண்களுக்குக் கடுமையான வேலைப்பளு இருந்தது. கால நேரம் பார்க்காமல் அவர்கள் வேலை பார்க்கும் கொடுமை அவர்களைக் கோபப்பட வைத்தது. எப்படி உழைத்தாலும் ஆண்களை விடவும் குறைவான கூலியையே பெறக்கூடிய அவல நிலையில் பெண்கள் இருந்தார்கள். தேர்தல் காலங்களில் வாக்களிக்கும் உரிமையும் பெண்களுக்கு மறுக்கப்பட்டு வந்தது. இத்தகைய ஆணாதிக்கக் கொடுமைகளை எதிர்த்து.. அமெரிக்க நாட்டின் நியூயார்க் நகரில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் 1908ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் தேதி பெருந்திரளாய்த் திரண்டனர். எழுச்சியோடு அங்கே உரிமைப் பேரணியை நடத்தினர். அதுதான் உலகையே திகைப்போடு திரும்பிப் பார்க்க வைத்தது. இந்த நாளைத்தான் உலகப் பெண்கள் தினமாக முதன்முதலில் அறிவித்தது அமெரிக்க சோசலிஸ்ட் கட்சி. இதைத் தொடர்ந்து இந்த மார்ச் 8ஐ உலகப் பெண்கள் தினமாக அறிவிக்கவேண்டும் என்று கிளாரா ஜெட்கின் அம்மையார் 1910இல் கோபன்ஹேகனில் நடந்த உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மாநாட்டில் வேண்டுகோள் வைத்தார். அந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். கிளாரா அம்மையாரின் கோரிக்கையை ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் உடனடியாக ஏற்றுக்கொண்டு மார்ச் 8 ஐப் பெண்கள் தினமாகக் கொண்டாடின. இது பல்கிப்பெருகிய நிலையில் 1975இல் மார்ச் 8ஐ உலகப்பெண்கள் தினமாக ஒருவழியாய் அறிவித்தது ஐ.நா. எனவே இந்த ஆண்டு 112 ஆவது உலகப் பெண்கள் தினமாக மலர்ந்திருக்கிறது.

• • •

ஒரு காலத்தில்.. 'தையல் சொல் கேளேல்' என்ற பிரச்சாரம் பெண் புலவர்களின் பெயரிலேயே நடந்தது. 'பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு' என்று சித்தர்களும்கூட சித்தம் கலங்கிப் பெண்மையைச் சிறுமைப்படுத்தினர்.



சிற்றின்ப வேட்கையைக் கட்டுப்படுத்த முடியாமல் சீரழிந்தவர்களே, தங்கள் பலவீனத்தை மறைக்கப் பெண்களை மாயப்பிசாசாக வக்கற்று வர்ணித்தனர். ‘பெண் புத்தி பின் புத்தி’ என்றும் அவதூறு செய்து பெண் குரலைப் புறக்கணித்து வந்தனர். இத்தகைய அடித்தளம் இல்லாத சகுனித்தனப் பரப்புரைகளை எல்லாம் 20 ,21 ஆம் நூற்றாண்டுப் பெண்கள், உலகின் உயர்ந்த சிகரங்களைக் கைப்பற்றியதன் மூலம் தெறிக்கவிட்டனர். ஆண்கள் மட்டுமே உட்கார்ந்திருந்த சிம்மாசனங்களில் ஆளுமை மிக்க பெண்கள் அமர்ந்து தங்கள் அறிவுக் கூர்மையையும் தொழில் நுட்பத் திறத்தையும் நிரூபித்து நிமிர்ந்தனர். இந்த மண்வெளியை மட்டுமல்லாது, விண்வெளியையும் விட்டுவைக்காமல் தங்கள் சாதனைக் காலடியை எடுத்து வைத்தனர். இன்று பெண்கள் விண்வெளி ஆராய்ச்சியிலும் கொடிகட்டிப் பறக்கின்றனர்.

பார்வைத் திறனும் செவித்திறனும் இல்லாமலே மானுடத்தைத் தன் சாதனையால் வியக்கவைத்து நோபல் பரிசு பெற்றார் ஹெலன் கெல்லர். கருணையினால் உலகத்தின் வணக்கத்திற்குரியவர் ஆனார் அன்னை தெரசா. உலகின் முதல் பெண் பிரதமர் என்ற சிறப்பைப் பெற்றார், இலங்கையைச் சேர்ந்த பண்டார நாயகே. இந்தியாவின் கவிக்குயில் என்று உலக அளவில் பெயர் பெற்றவர் சரோஜினி நாயுடு. பிரதமர் பதவியில் அமர்ந்து உலகின் இரும்புப் பெண்மணி என்ற பெயரைப் பெற்றார் அன்னை இந்திராகாந்தி. இந்தியாவின் முதல் பெண் ஐ.பி.எஸ். என்ற சிறப்பைப் பெற்றவர் கிரண்பேடி. தமிழகத்தின் முதல் பெண் ஐ.பி.எஸ். அதிகாரி என்ற சிறப்பை எட்டியவர் நம் திலகவதி அம்மா.

கல்பனா சாவ்லா என்னும் நம் இந்தியப் பெண்மணி விண்வெளி ஆராய்ச்சியின் போது ஏற்பட்ட விபத்தில் விண்ணோடு விண்ணாகக் கலந்தார். பிரபஞ்ச சக்தியாக அவர் இன்றும் நீக்கமற நிறைந்து நிற்கிறார். நான் வானத்தை ரசிக்கும் போதெல்லாம் நிலாவையும் விண்மீன்களையும் ரசிப்பதுபோல், என் மனக் கண்ணுக்குத் தரிசனம் தரும் கல்பனா சாவ்லாவின் புன்னகை முகத்தையும் தரிசித்து ரசிக்கிறேன்.

• • •



இன்று அறிவியல் துறையாக இருக்கட்டும் அரசியல் துறையாக இருக்கட்டும். படைப்பிலக்கியத் துறையாக இருக்கட்டும்... ‘ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்’ என்று சகல துறைகளிலும் பெண்கள் சாதித்துக் காட்டி வருகிறார்கள். இதைவிட பெருமையானது இங்கே என்ன இருக்கிறது? பெண்ணியத்தின் அண்மைக்கால வளர்ச்சி, உலகையே திகைப்பில் ஆழ்த்தி வருகிறது. 25 ஆண்டுகளுக்கு முன் நான் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில், பெண்கள் அதிகபட்சம் ஆசிரியர்களாகத்தான் இருந்தனர். எங்காவது பெண் மருத்துவத் தாதிகளும் மருத்துவர்களும் அபூர்வமாகக் காணப்பட்டார்கள். இன்று நிலைமை அப்படியில்லை. இந்த 25 ஆண்டு காலத்தில், நான் பார்க்கும் திசைகளில் எல்லாம் நீக்கமற நிறைந்து பெண்கள் சுடர்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லா வகையிலும் மேலோங்கி நிற்கிறார்கள். பெண்களில்லாத துறையையோ அலுவலகத்தையோ எங்கும் பார்க்க முடியாது. எல்லாப் பக்கமும்

‘சட்டங்கள் ஆள்வதும் பட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்’

என்று பெண்கள் சாதனைச் சரித்திரம் படைப்பதைக் கண்கூடாகப் பார்த்து வியக்கிறோம்.

• • •

படைப்புலகம் என்று எடுத்துக்கொண்டால் என்னைச் சுற்றி இருக்கும் பெண்கள் உச்சம் தொட்டுக்கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்.

உதாரணத்திற்கு ஒரு சிலரை இங்கே சுட்டிக் காட்டுகிறேன். ஏறத்தாழ 75 வயதை நெருங்கும் முனைவர் ந. நளினிதேவி, தனது கேட்கும் திறனை, ஒரு மருத்துவ விபத்தில் இழந்தவர். இந்த



நிலையிலும் ஏராளமான இலக்கிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, தமிழிலக்கிய உலகையே திரும்பிப் பார்க்க வைத்துவருகிறார். தமிழ் இலக்கியம் என்றால் திருக்குறளையும், கம்ப ராமாயணத்தையும், சிலப்பதிகாரத்தையும் தான் எல்லோரும் தலையானவை என்று சுட்டிக் காட்டுவார்கள். ஆனால் நளினிதேவி அம்மாவோ, 'தமிழர்களின் பேரிலக்கியம் புறநானூறே' என்று தகுந்த காரணங்களைச் சுட்டிக்காட்டி, அழுத்தமாக நிரூபித்திருக்கிறார். இதைக் கோவை ஞானி, ஆய்வாளர் மருதநாயகம் உள்ளிட்ட அறிஞர்கள் பலரும் வழிமொழியத் தொடங்கி விட்டார்கள். அதேபோல் வள்ளுவரின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் மட்டுமே பலரும் தூக்கிப்பிடித்து வந்தனர். நம் நளினிதேவி அம்மாவோ, மூன்றாம் பாலான இன்பத்துப்பாலின் சிறப்புக் கூறுகளைத் தூக்கிப்பிடிக்கும் வகையில் 'காதல் வள்ளுவன்' என்ற தலைப்பில் ஒரு நூலையே எழுதி, மாகவி ஈரோடு தமிழன்பன், ஆய்வாளர் ய.மணிகண்டன், அருள்நெறி அறிஞர் பிலிப் சுதாகர் உள்ளிட்டவர்களால் பாராட்டப்பட்டிருக்கிறார். நளினிதேவி ஏறத்தாழ 15 நூல்களைப் படைத்திருப்பதோடு, இப்போதும் சுறுசுறுப்பாக இயங்கி எல்லோரையும் வியக்க வைத்துக் கொண்டிருக்கிறார். தொல்.திருமாவளவன் அவர்களின் கைகளால் வெளியிடப்பட்ட நளினிதேவியின் 'அக விடுதலையே பெண் விடுதலை' என்ற ஆய்வுநூல், சிந்தனை உலகில் கலகக்குரலை எழுப்பிக்கொண்டிருக்கிறது. பெண்களும் பாலியல் விடுதலை பெறவேண்டும் என்று இந்த நூல் உரத்துப் பேசி ஆணாதிக்க வாதிகளை அதிரவைத்து வருகிறது. தனது தமிழ்ப்பணியையே தியானமாக எண்ணி, அதிலேயே மூழ்கும் அவரது உழைப்பை அருகில் இருந்து நான் கவனித்திருக்கிறேன்.

அதேபோல் கவிஞர் நர்மதா, பெண்ணியச் சிந்தனைகள் கொண்ட கவிதைகளை எழுதி, அவற்றை நூல்களாக்கித் தந்து வருவதோடு, 'பெண்' என்ற அமைப்பைத் தோழிகள் சிலரோடு சேர்ந்து கட்டியெழுப்பி இருக்கிறார். கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட அந்த அமைப்பில் இப்போது ஏறத்தாழ 150 பல்துறைப் பெண்கள் செயல்படும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அடுத்த மாதம் பெண் அமைப்பின் ஆண்டு விழாவைச் சிறப்புற நடத்தும் ஏற்பாட்டிலும் அந்தத் 'தலைநிமிர்' பெண்மணி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இரண்டு டஜன் கவிதை நூல்களைத் தந்த ஆளுமை அவர்.

நான் மேடைகளில் சந்திக்கும் அன்புச் சகோதரி ஆண்டாள் பிரியதர்ஷினி, கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழிலக்கிய உலகில் இயங்கி வருகிறார். தொலைக்காட்சி நிலைய இயக்குநராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர் இவர். இவரது நூல்களும் மேடை உரைகளும் நெஞ்சத்தை அள்ளக் கூடியவை. தமிழிலக்கியம் படைக்கும் பெண்களில் புகழ்பெற்ற பெண் மணியான இவரை, நவீன ஆண்டாள் என்று பாராட்டினாலும் தகும்.

ஒடுக்கப்பட்ட காயங்களில் இருந்து உயிர்த்தெழுந்த நர்த்தகி நடராஜன், திருநங்கையர் உலகின் விடியலாய் பத்மவிருது பெற்று உயர்ந்திருக்கிறார். கவிஞர் சக்திஜோதி, சங்க இலக்கியத் தோய்வறிவோடு தமிழ் இலக்கியத்தில் தனித்தடம் பதித்துவருகிறார். புதுவை வானொலி நிலையத்தில் பணியாற்றும் கவிஞர் உமா மோகன், தன் கவிதைகளால் புகழ்பெற்று வருகிறார்.

அதேபோல் வடசென்னையில் வாழும் அன்புமிகும் இலக்கியச் சகோதரி லதா சரவணன், 50 நூல்களுக்கும் மேல் எழுதியிருக்கிறார். சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மூன்றாம் பாலினரான திருநங்கையருக்காக இவரெழுதிய நூல்களும் கட்டுரைகளும் சமூகத்தின் கவனம் பெறுபவை. பெண்ணியத்தின் நிமிர்வைப்பற்றியே எண்ணும் இவரது படைப்புகளும் இலக்கிய மேடைகளும் நம்மை வியக்கவைக்கின்றன. இப்போது மின்னிதழ் ஒன்றையும் சிறப்புற நண்பர்களுடன் இணைந்து நடத்திவருகிறார் லதா சரவணன்..

முகநூலில் நான் கண்டெடுத்த சகோதரி கோ.லீலா, முகநூல் குழுமமான 'படைப்பு'க் குழுமத்தின் மூலம் 'மறைநீர்' என்ற அறிவியல் சார்ந்த நூலைத் தந்து இன்று இலக்கிய உலகத்தின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பி இருக்கிறார். சிறந்த கவிஞராகவும் பேச்சாளராகவும் கட்டுரையாளராகவும் இருக்கும் இவர், பொதுப்பணித் துறையில் இளநிலைப் பொறியாளராகப் பணியாற்றி, அந்தத் துறையிலும் தன் இருப்பைச் சிறப்புற நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார். இவர்களைப் போலவே கவிஞராகவும் எழுத்தாளராகவும் சிந்தனையாளராகவும் திகழும் தோழி லதா, திரைமறைவுப் பிரச்சினைகள் என்று கருதப்பட்டு வந்த பாலியல் குறித்தும், அதில் பெண்கள் பெற வேண்டிய விழிப்புணர்வு குறித்தும் கலகக்குரல் எழுப்பி, கருத்துலகின் கவனத்தை ஈர்த்து வருகிறார். இவர் முன்னெடுக்கும் முற்போக்குச் சிந்தனைகள், பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றன.

காதலை அழகியல் உணர்வோடு வெளிப்படுத்துவதில் கோவையைச் சேர்ந்த பேராசிரியரும் என் தோழியுமான சுசீலா மூர்த்தி, உச்சத்தைத் தொட்டவர். இவர் கையாளும் படிமங்களும் கற்பனைகளும் பாறைகளையும் கரைய வைக்கும் தன்மை கொண்டன. இவரது படைப்பான 'பெருங்காட்டு நேசம்' காதல் தேசத்தின் தேசிய நூலாகக் கருதத்தக்கது. இவரைப் போலவே என் தோழிகளில் கவிஞர் இன்போ.அம்பிகா 'பச்சைய மழை' என்ற காதல் தேனூறும் கவிதை நூலைக் கொடுத்து, தமிழ் மொழியின் அழகைக் கூடுதலாக்கி வருகிறார். இயற்கையையும் கொண்டாடுகிறவர் இவர். இவரைப் போலவே வேலூரைச் சேர்ந்த பேராசிரியர் கயலும் தன் காதல் பொங்கும் படிமக் கவிதைகளால், இலக்கிய உலகில் நறுமணம் வீசும் தனித்தடத்தைப் பதித்து வருகிறார். இவர் வனத்தின் காதலர். மரங்களின் நேசர். அதனால் இவரது கவிதைகளில் மூலிகை வாசம் அதிகமாகவே வீசுகிறது.

என் மதுரைத் தோழியான நான்சி, அன்பில் ஊறிய எழுத்துக்களால் இலக்கியத்தை இனிப்பாக்கி வருகிறவர். தன் பேரக் குழந்தைகளுக்காக யூ டியூப்பில் தேர்ந்த 'கதை சொல்லியாக'த் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இவர், 'மீட் அண்ட் ஈட்' உணவகத்தைச் சிறப்புற நடத்தி, தன்னை ஒரு சாதனைப் பெண்மணியாக நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார். முகநூல் தங்கையான பாரதி பத்மாவதி, தன் கவிதைகளால் மட்டுமல்லாது இலக்கிய அரங்குகளில் நிகழ்ச்சிகளைச் சுவைபடத் தேன் குரலில் தொகுத்து வழங்கி, எல்லோரையும் கவர்ந்து வருகிறார். இவர்களைப் போலவே தோழியர் பெருமாள் ஆச்சியும், அன்புச்செல்வி சுப்புராஜூம் நம்பிக்கை விளக்கேற்றும் கவிதைகளால் சிறந்து வருகின்றனர். இவர்களின் இலக்கியப் பங்களிப்பு மகளிருக்கு உத்வேகத்தைத் தரும்வகையில் அமைந்திருப்பது சிறப்பிலும் சிறப்பாகும். அண்மையில் என் நட்பு வட்டத்திற்குள் வந்திருக்கும் செல்வி சிவஞானம், 'மாந்தளிர் நினைவுகள்' என்ற கட்டுரை நூலை எழுதியிருக்கிறார். 'அன்பின் வழியது உயிர் நிலை' என்ற வள்ளுவனின் இலக்கணத்துக்கு இலக்கியமாகவே இவர் தன் எழுத்துக்களைப் படைத்து வருகிறார். முரடர்களிடம் இவரது எழுத்துக்களைப் படிக்கக் கொடுத்தால் அவர்கள், மென் மலர்களாக மாறிவிடுவார்கள் என்பது என் நம்பிக்கை. அவரது எழுத்துக்கு அப்படிப்பட்ட சக்தி இருக்கிறது.

கிராமிய வாழ்வை உயிர்ப்பாகச் சித்தரிக்கும் கவிஞர் இளம்பிறை, என்னுடைய நீண்டநாள் ஊர்த் தோழியாவார். எத்தனையோ மேடைகளில் நாங்கள் சேர்ந்து ஏறி இருக்கிறோம். இவர் தன் காயங்களையும் மலர்களாக்கிக் காட்டிய வித்தகி. சறுக்கும் பள்ளத்தில் இருந்தும் படிக்கட்டுக் களைத் தயாரித்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றவர். அவர் இன்று புகழின் உச்சத்தைத் தொட்டு, தன் இருப்பை நிலைநாட்டி இருக்கிறார். அதேபோல், சேலத்தில் இருக்கும் கவிஞர் சக்தி அருளானந்தம், தன்னம்பிக்கைக் கவிதைகளைப் படைத்து வருகிறார். பெண்களின் இருப்பையும் உயர்வையும் அவர் பாடும் விதம் பாராட்டுக்குரியது. தலைமைச்



செயலகத்தில் பணியாற்றும் என் அன்புத்தோழி லஷ்மி, தன் கவிதைகளையே சங்கீதம் போல் இசைக்கக் கூடியவர். அன்பு ததும்பும் எழுத்துக்களால் இதயத்தைத் தட்டி எழுப்பிக் கட்டி இழுக்கிறவர் என் தோழி சுமதி சங்கர் ஆவார். மரபில் ஆளுமை செலுத்தும் அன்புத்தங்கை அம்பிகா குமரனின், கவித்துவம் மகத்துவம் மிக்கவை. புதுவையைச் சேர்ந்த பெண்ணியம் செல்வகுமாரி, களமாடும் ஆயுதக் கவிதாயினி ஆவார். கவியரங்கக் கவிதைகளால் இதயத்தைத் தீண்டும் வல்லமை கொண்டவர்களாக ரேவதி அழகர்சாமி, மன்னை ஜீவிதா, சாரா பாஸ், கிருஷ்ணதிலகா, அன்புத் தங்கை நீரை பாத்திமா உள்ளிட்டோர் வலம் வருகிறார்கள்.

மதுரையைச் சேர்ந்த என் அன்புத்தோழி சுகுணா அம்மு, முகநூலில் சொற்களைக் கொண்டே வீணை வாசித்துவருகிறார். அவரது அன்பின் ஈரத்தில் தமிழின் இனிப்பு இருமடங்காவதை உணர்ந்து மகிழ்கிறேன். கவிதாயினி கிறிஸ்டினா அருள்மொழி, நட்சத்திரங்களைச் சொற்களாக்கி, மயிலிறகு கொண்டு உயிர்வருடுகிற வித்தகக் கவிஞராய்த் திகழ்கிறார்.

கேரளாவில் இருந்தபடியே ஈரத் தமிழால் இதயம் கவரும் கவிஞரும் எழுத்தாளருமான என் அன்புக்குரிய தோழி அல்லிபாத்திமா, தன் முதல் புதினமான 'பாண்டிச்சி'யிலேயே உள்ளம்கவர் கள்வியாய் மாறியிருக்கிறார். கவித்துவத் தமிழால் நற்சிந்தனைகளை வளர்க்கும் தோழி சித்ரா மாணிக்கத்தின், மந்திரமொழி மனதை மயக்கும் தன்மை கொண்டது.

தன்னம்பிக்கை மனுஷி என்று ஒருவரை அடையாளம் காட்டச்சொன்னால், நான் கொஞ்சமும் தயங்காமல் சுட்டிக்காட்டும் இரும்பு மனுஷி, வான்மதிதான். 'பாவையர் மலர்' என்னும் பல்சுவை இதழை நடத்திவரும் அவர், மேடை ஏறினால் கூன் விழுந்தவர்களும் நிமிர்ந்து உட்கார்ந்துவிடுவார்கள். அத்தகைய உரையாளர் அவர். அவரது தன்னம்பிக்கைப் பயணம் பெண்கள் பலருக்கும் வகுப்பறையாகும். இதேபோல் தஞ்சை மதுரா, சுசித்ரா மாரன், கவிக்குழல், கனகா பாலன் உள்ளிட்ட கவிதையாளர்களும் பெண்ணிய உலகின் நம்பிக்கை நட்சத்திரங்களாகத் திகழ்ந்து வருகின்றனர். கல்லூரிப் பேராசிரியரான ஆதிரா முல்லை, கவிதைகளாலும், சொற்பொழிவாலும் இதயம் கவர்கிறவர். அவரது 'உச்சிதனை முகர்ந்தால்' நூலில் இடம்பெற்ற கட்டுரைகள், குழந்தைகளுக்குப் பாடமாக வைக்கத் தகுந்த பயன்மிகும் கட்டுரைகள். இன்னும் நூலாகத் தொகுக்கப்படவில்லை என்றாலும் முகநூலில் தங்கை ஸ்டெல்லா தமிழரசி எழுதிவரும் கவிதைகளும் கஜலும், குலோப்ஜாமூன் தமிழால் நம்மைக் கரையவிடுகின்றன. இவரைப் போலவே தோழி ஜானு இந்துவின் கவிதைகள், ரத்த அணுக்களைத் தித்திக்க வைப்பவையாகத் திகழ்கின்றன.

பெண்கள் எழுதுகோலைப் பிடித்தால் மொழியே உயர்வடையும், மேலதிகச் சுவையாகும் என்பதற்கு இத்தகைய பெண் படைப்பாளிகள் சான்றாகத் திகழ்கிறார்கள். முகநூல் குழுமத்தைக் கட்டி எழுப்பி, அதன் மூலம் ஏராளமான படைப்பாளிகளை மேடை ஏற்றி அறிமுகப்படுத்தி வருகிறார் அன்புச் சகோதரி ஞானி. அயராது உழைக்கும் இவரையும் இவரது இலக்கியப் பணிகளையும் வியப்போடு பார்த்துவருகிறேன். இப்போது மின்னிதழ் மூலமும் தன் சாதனைப் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார் ஞானி. திருச்சியைச் சேர்ந்த தோழி கவிச்செல்வா, வீறுகொண்ட படைப்புப் பெண்மணி. காவல் துறையில் பணியாற்றி, இலக்கியத்தினாலேயே பணியைத் துறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டவர். இருந்தும் இவரும் இவரது இலக்கிய இதயமும் சோர்ந்துவிடவில்லை. அவரது கவிதைகளின் உரத்த தொனியும், சமூக அவலத்திற்கு எதிரான கவிதைக் குரலும் தனித்த தன்மைகொண்டன. அவருடைய சொற்பொழிவுத் திறன் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன்.

இதேபோல் தோழி மருத்துவர் ஜீவரேகாவும் முகநூல் குழுமத்தைச் சிறப்புற நடத்திப் படைப்பாளர்கள் பலருக்கும் ஊக்கம் தந்து வருவதோடு, சுவையான கவிதைகளையும் படைத்து வருகிறார். என்மனதில் இருக்கும் பலரைப் பட்டியல் போட்டால் அதைத் தனி நூலாகத் தொகுக்க வேண்டியிருக்கும். இப்படி நான் பார்க்கிற, என் கண்களில் தென்படுகிற, நான் கேள்விப்படுகிற அத்தனைப் பெண்களும் சாதனை மகளிராக இருக்கிறார்கள் என்பது பெருமிதத்திற்குரியது. ஆணாதிக்க அநீதிகளை வெற்றிகொண்டு, இன்று சமத்துவப் பேரொளியை நோக்கி நகரும் இந்த உலகம், பெண்களால் ஆனதே. இதை எந்தச் சபையிலும் என்னால் அடித்துச் சொல்ல முடியும். ■

• கவி: அனார்



அவளது விரல்கள்
தானியக் கதிர்களென
விரிந்திருக்கின்றன...

கிரீடமாக ஆகாயமிருந்தது

கண்கள் இரண்டும்
நாவற்பழங்கள்

முகம் காலைப்பொழுது

முடிந்த கூந்தல்...
தூக்கணாங்குருவிக் கூடு

பற்கள் ஆயுதங்களெனப்
பளிச்சிட்டன...

நடக்கத் தொடங்கியிருந்தாள்
சுயேச்சையாக...

எவருக்கும் உடைமையற்றவளாக
வரலாற்று உடலை நிமிர்த்தி
காலத்தின் ஆன்மாவை
மிகைத்து...
ஏறி மிதித்தவாறு..... ■

அத்தனை தீட்டுப்பட்ட உனது
வார்த்தைகளும்
நகரத்தின் கழிவுநீராய்
ஆற்றின் அடிவயிற்றில்
கலக்கிறது
நீ கண்டறிந்த வார்த்தைகள்
எல்லாமும்
எவரும் எவரையும்
தொடாமலிருக்கத்தான். ■



• கவி: குட்டி ரேவதி

சிறுகதை

• கனகா பாலன்
ஓவியங்கள் : அன்பழகன்



# வரட்டூர்வாசிகள்

வசதி, நாகரீகம்னு நாடு வளர்ந்துக்கிட்டே போனாலும் ஏழ்மை, துயரம்னு கஷ்டப்படுற மக்கள் மட்டுமே இருக்கிற ஊருதான் வரட்டூர்..

எண்ணி முப்பது வீடு இருக்கும். இயற்கை அவங்க மேல வச்சிருக்கிற கரிசனத்துக்குச் சாட்சியாய் அப்பப்போ பெய்ற மழை மட்டுந்தான்...

"அடியே மாரி, சீக்கிரம் எழுந்திரிச்சி வாடி. நேத்து நாம அடையாளம் போட்டு வச்சிருந்த கருவேல முள்ளை யாராவது வெட்டிட்டுப் போயிடப் போறாங்க"ன்னு, வாசலுக்கு முன்ன வந்து கத்துன சோலையோட வாயை வீட்டுக்குள்ள இருந்து வெளிவந்த மாரி கையால மூடினாள்.

இணைபிரியாத் தோழிகள் இருவரும். "நாம ரெண்டு பேரும் ஒரே வீட்டுக்குத்தான்டி வாக்கப்பட்டு போகணும்", மாரி சொல்ல, "அப்படியில்லைனா பக்கத்துப் பக்கத்து வீடு டீ, சரியா?" என்று மாறிமாறிப் பாசத்தைக் கொட்டிங்குங்க ரெண்டும்...

கொஞ்சம் வெள்ளாண்மை, ஆடு, மாடு, கோழி வளர்க்கிறது - இதுதான் அந்த ஊர்ல இருக்கிற மக்களுக்கு வயிற்றை நிரப்புவதற்கும் வாழ்க்கைனு சொல்றதுக்கும் அர்த்தமா இருக்கிறது...

இந்திய வரைபடத்தை எந்த அதிகாரியாவது உற்றுப் பார்த்தா மட்டும்தான் அந்தக் கிராமம் இருக்கிறது தெரியும்...

மருத்துவ வசதி இல்லாத இடந்தான். ஆனால் அதிசயமாகவும் அதிர்ஷ்டமாகவும் எப்போதாவது ஒரு வேன்ல மருத்துவக் குழுமம் வந்து மாத்திரை மருந்துனு கொடுத்துட்டுப் போகும்... அதற்கு இடையில ஏதாவது நோவு வந்தா ரொம்பக் கஷ்டந்தான்...

பொண்ணு கொடுக்கிறது வாங்குறது எல்லாமே அந்த நாப்பது குடும்பத்துக்குள்ள மட்டுந்தான்...



மாரிக்கும் சோலைக்குங்கூட மாப்பிள்ளை இருக்கத்தான் செய்யுது.. ஆனால் இவளுக இரண்டு பேரும் கூடிக் கூடிப் பேசி எப்படியாவது இந்த ஊர விட்டுப் போயி டவுன்ல இருக்கணும்னு அடிக்கடி தீர்மானம் பண்ணிப்பாங்க அவங்களுக்குள்ளே...

இவங்களுக்கு ஏற்பட்டிருக்கிற மனசு மாறுதலுக்கு முழுக்க முழுக்கக் காரணம் சிலர்னு சொல்லலாம் - ஏதோ ஒரு உடல் குறைபாடோட இருக்கிற அந்த ஊர் ஆளுங்கதான்.

"சொந்தத்துக்குள்ளே கல்யாணம் பண்ணுனா உடல் ஊனக் குழந்தைகள் பிறக்கும்"..னு ஒவ்வொரு தடவையும் நடக்கிற மருத்துவ முகாம்ல கிளிப்பிள்ளைக்குச் சொல்ற மாதிரி மருத்துவர்கள் ஊர் மக்களுக்கு எடுத்துச் சொன்னாலும்.. யாரும் அதைக் காதுல வாங்கிக்கிறதே இல்லை...

ஆனால் இந்தப் புள்ளைங்க புரிஞ்சித் தெளிவா இருக்காங்களா இல்லை, பயந்து தப்பிக்கப் பார்க்குறாங்களானு தெரியாது... ரொம்பப் பிடிவாதமா இருக்கிறாங்க, இங்க உள்ளவங்களுக்குக் கழுத்த நீட்டக்கூடாதுனு. மனசுக்குள்ள நல்லாப் பதிய வச்சிக்கிட்டாங்க...

இப்படித்தான் ஒருநாளு விடிஞ்சி விடியாததுக்கு முந்தியே விறகு பிறக்கப் போன பிள்ளைங்க சாயங்காலம் ஆறு மணியாகியும் வீடு வந்து சேரலை. ஆளாளுக்கு ஒவ்வொரு மூலையில தேடிக் கடைசியில ஆந்து சோர்ந்து போய் மந்தையில கூட்டம் போட்டாங்க...

தலைவர் மாதிரி இருக்கிற ஒருத்தரு ஓங்கி ஓங்கிப் பேசிட்டு இருந்தாரு "இதுதான் பொம்பளைப் புள்ளைகளை வயசுக்கு வந்ததும் இங்க இருக்கிற எவனோ ஒருத்தன் கைல பிடிச்சிக்கொடுத்து அடக்கிப் போடணும்..."னு சொன்ன பேச்சுக்கு தலையைக் குனிஞ்சபடியே கக்கத்துல துண்ட வச்சிட்டுக் கண்ணீர் வடிச்சிட்டு நிற்கிறது வேறுயாருமில்ல சாட்சாத் அந்த ரெண்டு பெண்பிள்ளைகளைப் பெத்த அப்பனுங்கதான்...

அந்தச் சின்ன ஊர்ல இருந்து தப்பிச்சி வந்த தோழிகள் இரண்டு பேரும் விடிய விடிய ஓயாமல் நடந்து மனசுக்குள்ள பயம் இருந்தாலும் மல்லுக்கட்டி தைரியத்தை வரவழைச்சிக்கிட்டு கார், பஸ் னு போகிற பெரிய ரோடு பக்கம் வந்துட்டாங்க.. ஆனால் அது எந்த ஊரு, எப்படி போகணும் அதெல்லாம் தெரியாது...

பேந்தப் பேந்த ஒருத்தர் முகத்தைப் பார்த்து ஒருத்தரு முளிச்சிக்கிட்டு விக்கி விக்கி நின்னுட்டு இருக்கும்போது...

சர்ர்ர்ருனு ஒரு காரு இடிக்கிற மாதிரி வந்து பக்கத்தில நின்னுச்சி...

"யாரும்மா நீங்க? ஏன், இங்க நிக்கிறீங்க?" ...என்ற குரலில் கோபமும் இருப்பது அவங்களால புரிஞ்சிக்க முடிஞ்சது.

நடுக்கத்தோடு அந்த ஊரைப் பற்றியும் அங்கிருப்பவர்களைப் பற்றியும் அவர்களுக்குப் பிடிக்காத ஒன்றான திருமண முறைகள் பற்றியும் ஒன்னுவிடாம சின்னப் புள்ளைங்க வாய்ப்பாடு சொல்ற மாதிரி கடகடனு ஒப்பிச்சு முடிச்சிருச்சிக...

"அதெல்லாம் சரி... ஆனால் நீங்க உங்க வீட்டுக்குத் தெரியாம ஓடிவந்து திக்குத் தெரியாத இந்த இடத்துல வந்து இப்படி நிக்குறதுனால உங்க ஊர் நிலைமை சரியாகுமா?", என்று கேட்டார் ஆபீஸர் தோரணையில் காரில் அமர்ந்திருப்பவர்...

"சரி சரி கார்ல ஏறுங்க. உங்களை ஒரு இடத்துல பத்திரமா கொண்டு போய் விட்டுறேன்"... என்று சொன்னவரை நம்பவும் முடியலை, நம்பாலும் அதே இடத்தில நிற்கரதுக்கும் தைரியமில்லை.

காரில் அமர்ந்து ரொம்ப நேரம் வரைக்கும் அமைதியாகவே சென்றது அவர்கள் பயணம்.

"ஐயா, நீங்க யாருனு தெரிஞ்சிக்கலாமா?" என்று கேட்ட சோலையைப் பார்த்துச் சிறு புன்னகையை விரித்து "பரவாயில்லையே, இந்தக் கேள்வியை எப்பவோ நான் எதிர்பார்த்தது, இப்படித்தான் இருக்க வேண்டும் பெண்கள். ஊரை விட்டுத் தைரியமா வெளிவந்த நீங்க,



இதோ! நான் யாருனே தெரியாமல் என்னை நம்பி என் காரில் வருகிறீர்களே, இதற்கெல்லாம் காரணம் என்னவா இருக்கும்?'' என்று கூறிக்கொண்டே நமுட்டுச் சிரிப்பு சிரித்தார் அவர்...

"நான் யாருனு நான் சொல்றதைவிட நீங்களே சொல்வீங்க ஒருநாள்", என்று சொல்லிவிட்டு அமைதியாகிவிட்டார்...

அதற்குமேல் அவரைப் பற்றிக் கேட்கத் தோணவில்லை. நம்பிக்கை மட்டும் காரணமே இல்லாமல் அவர் மேல் வந்தது.

போகிற வழியில் அவ்விருவருக்கும் சாப்பாடு வாங்கிக் கொடுத்தார்.. வயிறு நிரம்பிய கிறக்கத்தில் ஆழ்ந்த தூக்கத்தோடு அவர்களின் மிச்சப் பயணமும் தொடங்கியது...

வந்து சேர்ந்து இடம் பெண்கள் காப்பகம் என்பதைக் கூட முகப்பில் எழுதியதை வாசித்துப் புரிந்துகொள்ளக் கூடத் தெரியவில்லை அவர்களுக்கு...

நிர்வாகியிடம் நிறைய நேரம் பேசிக் கொண்டிருந்த அவர் இடையிடையே இவர்களைப் பார்த்ததிலிருந்து அவர்களைப் பற்றித்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்பதை உணரமுடிந்தது...

நாற்காலியிலிருந்து எழுந்து அவர்களை நோக்கி வந்தவர் "நீங்க, இங்கேயே தங்கிக்கோங்கமா, இன்னமும் இரண்டு நாளில் உங்களை உங்கள் ஊரில் விட்டுவிடுகிறேன்" என்று சொன்னார்.

"மன்னிச்சுக்கோங்க ஐயா.. நாங்க மறுபடியும் எங்க ஊருக்குப் போனாலும் எங்களுக்கான கஷ்டம் அப்படியேதான் இருக்கும், எதுவும் மாறப் போவதில்லை... படிச்சவங்களும் இல்லை, ஏதாவது எடுத்துச் சொன்னா அதைப் புரிஞ்சிக்கணும்னு நினைக்கிற ஒருத்தரும் இல்லை..."

"எங்களுக்கு ஏதாவது உதவி செய்யணும்னு நினைச்சீங்கன்னா, எங்க ஊரைப் பற்றி எல்லோரும் தெரிஞ்சிக்கிற அளவுக்கு நீங்க செய்யுங்க. அது போதும். இப்படி ஊரைவிட்டுப் பொம்பளைப் பிள்ளைங்க வெளில வந்தா தப்பானவங்கன்னு முடிவு கட்டுற கூட்டத்தில நாங்க தலைநிமிர்ந்து மீண்டும் ஊருக்குள்ள காலடி எடுத்து வைக்கணும். அதுக்கு ஏதாவது யோசனை சொல்லுங்க ஐயா" என்று சொன்ன மாரியை பெரும் வியப்பாகப் பார்த்தார் அவர்.

"இத்தனை வருடங்களாக யாருக்கும் வராத துணிச்சல், ஏன்? ஒரு ஆண்கூட இதற்காகப் போராடத் துணிவில்லாம இருக்கிற நேரத்துல உங்களோட இந்தத் தைரியம் எனக்கு ஆச்சரியமா இருக்கும்மா" என்றார்...

"எனக்கு, ஒரு இரண்டு நாள் டைம் கொடுங்க. நான் ஒரு முடிவெடுத்துச் சொல்றேன்.. இங்க உங்களைப் பத்திரமாப் பார்த்துப்பாங்க, கவலைப் படாம இருங்க, ஒரு நல்ல முடிவோட வர்ரேன்' னு சொல்லிவிட்டுச் சென்றார்...

வேணுகோபால், திரைப்படத் தயாரிப்பாளர் என்று நுழைவாயிலின் இடப்பக்கம் எழுதப் பட்டிருந்த வீட்டினுள் தவழ்ந்து நின்றது கார்...

இரவு முழுவதும் தூங்காமல் யோசித்துக் கொண்டிருந்தவர் காலை எழுந்ததும் முதல் வேலையாக அவரின் பட இயக்குனருக்குத் தொலைபேசி அழைப்பு விடுத்தார்.. நிறைய நேரப் பேச்சுக்குப் பின்னே மிகுந்த உற்சாக மனதோடு சுறுசுறுப்பானார்.

மறுநாள் மதிய வாக்கில் பெண்கள் காப்பகத்துக்குச் சென்று அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு அவர்கள் ஊரை நோக்கிக் கார் புறப்பட்டது...

இதற்குள்ளாகத் திரைப்படக் கருவிகளும் நடிகர்களும் வந்து, கிட்டத்தட்ட அந்த ஊரே அடையாளம் தெரியாத அளவுக்கு நிறைய நிறைய செட்டுகள் போட்டு மாறியிருந்தது.

தொலைந்துபோன இவர்களைத் தேடக்கூட அங்கிருந்தவர்கள் மறந்துபோனார்கள்.

இருக்காதா, பின்னே! வரட்டூர் கிராமமும் அந்த ஊர் மக்களும் சினிமாவில தெரியப் போறாங்களே...

இதுமட்டுமல்ல சமுதாயத்தில் பின்னோக்குச் சிந்தனையும் செயல்பாடுகளும் கொண்ட கிராமத்தின் கதை, அதில் மாற்றம் ஏற்படச் செய்தல் அவசியம்னு உணர்த்துற படம்..

வெறும் திரையில் காட்டப்பட மட்டு மல்லாமல் அக்கிராமத்தைத் தத்து எடுத்து வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதோடு அவர்களுக்குள் இருக்கும் அறியாமையை நீக்குதல் தன் கடைமையெனப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தயாரிப்பாளர் வேணுகோபால் மாரிக்கும் சோலைக்கும் கடவுளாகவே தெரிந்தார்.

ஆணென்ன பெண்ணென்ன.. மாற்றம் என்பது நல்ல மனங்களிலிருந்து வரக்கூடியதுதானே என்ற வாக்கியத்துக்கு முழுச் சொந்தம் கொண்டாடப் படும் உரிமை இப்போது அந்த இணைபிரியாத் தோழிகளோடு ஒட்டிக்கொண்டுள்ளது... ■

• முத்தரசி

# மகளாகிய மானசி



'ஆயிஷா' என்ற ஒரு சிறுகதையை வாசிக்க நேர்ந்ததுண்டா? கல்வியாளர் நடராஜன் எழுதிப் புகழ்பெற்ற சிறுகதை அது. வாசிக்கும் பொழுதுகளில் உள்ளத்தை உறைய வைக்கும் ஒரு அற்புதக் கதை. எந்த ஒரு நல்ல ஆசிரியராலும் கடக்க முடியாத மாணவி ஆயிஷா. ஆசிரியர் எனப்படுபவர்கள் தங்களின் அதிகார, அகங்கார முகமூடிகளைக் களைந்து, மாணவர்கள் மீது அன்பும் பிரியமும் மீதூர அவர்தம் கரம்பற்றி அழைத்துப் போக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் அற்புதப் படைப்பு.

நிறைய எழுத்தாளர்கள் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்கள். மானசி ஆயிஷாவை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சட்டென்று பலரது கவனத்தையும் கவர்ந்தபோது அவள் படித்துக்கொண்டிருந்தது ஒன்பதாம் வகுப்பு மட்டுமே.

பின் இரவுகளில் கரு வானம் நிறைத்துப் பிரகாசிக்கும் அழகான நட்சத்திரமாய் மானசி ஒளி வீசத் துவங்கியது அப்போதுதான்.

தாயின் கரம் பற்றி, தந்தையின் வழியில் நடந்துகொண்டிருந்த மானசி தனித்த ஒரு இலக்கியச் சித்திரமாக அனைவரின் மனதிலும் தடம் பதித்தது அப்போதுதான்.

மானசியின் குழந்தைப் பருவம் முழுக்க முழுக்க இலக்கிய வாழ்வால் சூழப்பட்டிருந்தது. குழந்தையிலிருந்தே புத்தகங்களோடு அதிகம் பேசிப் பழகியவள். அவளின் வீடு கற்களால் அல்ல, பலப்பல மனித முகங்களின் சுவாசத்தால் நிறைந்தவை. வாசிப்பு எனும் இரத்தினக் கம்பளம் ஏறி உலகெங்கும் சுற்றிப் பறந்துகொண்டிருக்கும் வேளையில்தான், புத்தகத்தில் வைத்த மயிலிறகு குட்டி போடாது என மிகச் சிறிய வயதிலேயே அறிந்துகொண்டாள்.

மானசியின் ஆரம்பகாலப் பள்ளிப்பருவம் நண்பர்கள், விளையாட்டு, இயற்கை, இசை என சந்தோஷங்கள் மட்டுமே நிறைந்திருந்த பருவம். ஒரு ஜனநாயக வகுப்பறையில் இயல்பாகவே முகிழ்க்கும் சந்தோஷம் அவள் மேல் ஒரு அழகான கொடியைப் போல் பற்றிப் படர்ந்திருந்தது. மரங்களைச் சுற்றி விளையாடி, நீரூற்றி, மலரும் பூக்களை எண்ணிக்கொண்டு திரிந்த நாட்களில் அவள் சந்தோஷித்திருந்தாள்.

மனித முகங்களின் கயமைகள், குடும்பச் சிக்கல்கள், அவை தரும் மன அழுத்தங்கள் என எதையும் உணராது மழையை ரசித்து

விளையாடிய கணங்களில் அவள் இலக்கியத்தை நேசித்திருந்தாள். பின்பொரு நாள் பதினொன்றாம் வகுப்பிற்கு அருகில் இருக்கும் அரசுப் பள்ளிக்கு மாற்றலாகிப் போனபோது எல்லாமே மாறிப் போனது. தகிக்கும் பறையின் இசையை உயிர் மட்டுமே உணர்வது போல வாழ்வு அதன் சகல உக்கிரத்தோடு அவள் முன் வந்து நின்ற பொழுதுகளில் அவள் இலக்கியத்தை உணரத் துவங்கியிருந்தாள்.

தன் வீட்டில் பேப்பர் போடும் தன் வகுப்புத் தோழன், கெட்டுப்போன மதிய சாப்பாட்டை எந்தப் புகாரும் இல்லாமல் சாப்பிடும் தோழி, வார இறுதி நாட்களில் வேலைக்குச் சென்றால்தான் அந்த வாரம் முழுவதும் பிழைத்திருக்க முடியும் என்கிற சவாலைச் சுமந்திருக்கும் நண்பன் என அவள் திரும்பிய பக்கமெல்லாம் அவள் நண்பர்கள் அவளைத் திகைக்க வைத்தார்கள். இந்த வாழ்வு இத்தனை கொடூரமானதாகக் கூட இருக்க முடியுமா என அவள் விம்மித் தணிந்தபோது அவளின் இரவுகள் தூக்கம் தொலைத்திருந்தன.

வாழ்வை அதன் உண்மையோடும் எளிமையோடும் அணுகும் தருணங்களை வேண்டியாசித்த பொழுதுகளில் அவள் தஞ்சமடைந்தது இலக்கியத்தின் மடி மட்டுமே. இலக்கியம் அவளின் தலைகோதி வாழ்வியலைப் புரிந்துகொள்ள வைத்தது. வாழ்வின் தீராத வடுக்களை கூட நட்பெனும் பெருஞ்சிறப்பு அன்பில் நனைத்து ஆசுவாசப்படுத்த முடியும் எனக் காட்டியது.

ரூமி தான் மானசிக்கு வக்கிரம், அவமானம், துயரம், வஞ்சனை ஆகியவற்றைக்கூட வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர வைத்தார். பசிக்காக, மானத்திற்காக, பிழைப்பிற்காக, சிறு அங்கீகாரத்திற்காக அத்தனை நாள் வாழ்ந்த வாழ்வை உதறி எறிந்துவிட்டு ஓடும் வாழ்வின் கொந்தளிப்பை ஆண்டன் செக்காவும், தஸ்தாவெஸ்கியும் ஆற்றுப்படுத்துகிறார்கள். "சிந்திக்கும்போதுதான் நாம் நிலைகுலைந்து போகிறோம்" என்கிற ஆல்பர்ட் காம்யூசின் வார்த்தைகளில் அவள் நிமிர்ந்து நின்று யோசிக்கத் துவங்குகிறாள்.

"If you don't stand for something, you will fall for anything" என்பதன் அசலான பொருளை வாழ்வின் அறத்தோடு பொருத்திப் பார்த்துக் கொள்கிறாள்..

கருவிலேயே திருவான மானசியினிடத்தில் எந்தத் துயரத்தின் சாயலும் தேங்கி நிற்பதில்லை. துயரத்திற்குத் தீர்வு என்பது சோகம் அல்ல, நம்பிக்கையின் ஒளி மட்டுமே எனத் தான் புரிந்து கொண்டதை மேடையேறிப் பேசுகிறாள் .

வெளிர் பச்சையில் துளிர்விட்டு, காற்றை அவதானித்து, வான்மழைக்கு ஏங்கி, புயல் மழையைக் கடந்து, வெப்பம் சுமந்து, வாழ்ந்து பிறகு ஒருநாள் மண்ணில் விழுந்து காய்ந்து மரணித்து மக்கிப் போகும் இலையை விடவா ஒரு ஆசிரியர் அதிகம் கற்றுக் கொடுத்து விட முடியும் என்கிற அவளின் கேள்விக்கு இங்கு யாரிடமும் பதில் இல்லை.

இயந்திரத்தனமான வகுப்பறைகளைப் பற்றிய அவளின் நியாயமான ஆதங்கங்களுக்கு அத்தனை ஆசிரியர்களும் மௌன சாட்சியாகத்தான் நிற்க முடியும்.

மானசி மிகச் சமீபத்தில் தன் இளம் வயதில் இலக்கிய மேடையை ஆக்கிரமிக்கத் துவங்கியிருக்கும் அக்கினிக்குஞ்சு. அதன் தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் கிடையாது.

ஊடக வெளிச்சத்தையும் கொண்டாடும் உறவுகளையும் சட்டெனக் கடக்கப் பழகியிருக்கிறாள். அவளைச் சிலாகிப்பதைத் தன் தலைக்குள் ஏற்றிக்கொள்ளாமல் வெறுமனே வேடிக்கை பார்க்கப் பழகி இருக்கிறாள்.

தன்னைத்தானே செதுக்கிக்கொள்ள வேண்டிய சுயம்பின் அவசியத்தை உணர்ந்து தெளிந்து மீண்டும் கான்கிரீட் சுவர்கள் நிரம்பிய வகுப்பறைக்குத் திரும்பி, ஏதோ ஒரு ஆசிரியரின் சொல்கேட்டுத் தேர்வுகள் எழுதிக் கொண்டிருக்கிறாள். என்றாலும் அவள் அறிந்திருக்கிறாள் தேர்வும் மதிப்பெண்ணும் மட்டுமே வாழ்க்கை இல்லை என்றும்....

இயற்கை தனக்கான மகத்தான மனிதர்களை அவர்களின் இளம்வயதிலேயே அடையாளம் கண்டு அவர்களைத் தனக்கெனத் தத்து எடுத்துக்கொள்கிறது மானசியைப் போல. இலக்கியம் ஒரு கரை எனவும் மனிதநேயம் மறுகரை எனவும் நீளும் இந்த வாழ்வெனும் பெரும் நதியைக் கடக்க எங்கும் நிறைந்த அன்பெனும் பெருங்கருணை மானசியைக் காத்து வழி நடத்தட்டும். ■

• துப்பறிவாளர் யாஸ்மின்

# தனித்திரு.. ஜெயித்திரு..

ஒருநாள் தோணிச்சி.. என்ன இது இப்படியே காலம் போயிடுமா என்ன.. பத்தோடு பதினொன்னு அத்தோடு இது ஒன்னுன்னு. நாமளும் சுயமா தனியா கெத்தா தெரியணும்.. இப்படி வெறும் அவுஸ் வொய்ப்பா மட்டும் இருக்கக் கூடாதுன்னு.. புத்தருக்கு ஞானம் வந்தது போல் தோணியது. புத்தி பரபரன்னு தேட ஆரம்பிச்சது.. அப்போ பேப்பரில் ஒரு டிடெக்டிவ் நிறுவனம் பற்றிப் படிச்சேன்.. டிடெக்டிவ் என்ற சொல்லே புதுசா இருந்துச்சி. அதைத் தேடிப் போக ஆசைப்பட்டேன். வீட்டில் அனுமதி கிடைக்கல. போராடி அனுமதி வாங்கி அதை நடத்துறவரைப் போய்ப் பார்த்தேன். ஒரு கேஸ்ஸைக் கொடுத்துக் கண்டுபிடிக்கச் சொன்னார். சில அடிப்படை விஷயங்கள்



தெரிஞ்சது. போராடிப் போராடி நுட்பங்களைக் கத்துக்கிட்டேன். பின்னால நானே தனியா வெரிபிகேசன் சர்வீஸ் ஆரம்பித்தேன். அதன் ஆண்டு விழாவுக்கு இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் என் தோழி தமிழச்சி தங்க பாண்டியன், தோழி திலகபாமா, எழுத்தாளர் ராஜேஷ் குமார், கல்கி பத்திரிக்கையாளர் அமிர்தம் சூர்யாவெல்லாம் வந்தாங்க. அடுத்த ஆண்டு விழாவில் முன்னாள் போலிஸ் கமிஷனர் நடராஜ் ஸார் சென்னையிலிருந்து கோவைக்கு வந்து சிறப்பு செய்தார். இதெல்லாம் எனக்கு தூண்டுகோல்களா அமைஞ்சது.

நம்மகிட்ட ஒரு விஷயத்தைக் கண்டுபிடிச்சித் தாங்கன்னு ஒருவர் சொல்லும்போது அதைக் கண்டுபிடிச்சித் தருவது துப்பறிவாளர் பணி. ஆராய்வது விசாரிப்பது விவரம் சேகரிப்பது கண்டுபிடிப்பது இந்த நான்கு விஷயங்களைச் செய்வது துப்பறிதல். அதாவது திருமண விஷயத்தில் அந்தப் பையனின் நடத்தை, அவனுக்கு யாரோடு தொடர்பு இருக்கு, உண்மையில் என்ன வேலை.. இப்படி விசாரிப்பது கண்டுபிடிப்பது.. இதைத் தாண்டி விவாகரத்து வழக்கில் சில விசாரிப்புகள்.. வீட்டில் திருட்டு போனதைக் கண்டுபிடிப்பது.. சில குடும்பச் சந்தேகங்களைத் தெளிவாக்கிக்கொள்வது.. கம்பெனியோடு தொடர்பு ஆட்களை விசாரிப்பது.. இப்படி வழக்குகள்.

ஒன்று தெரியுமா.. ஒருவருக்குப் பட இயக்குநர் வாய்ப்பு கொடுக்கலாமா என்பதற்காகக் கூட தயாரிப்பாளர்கள் அந்த நபரைப் பற்றி விசாரிக்கச் சொல்லும் சம்பவமும் உண்டு. திறமை மட்டும் போதாது.. சம்பந்தப்பட்டவன் நடத்தை, அவனுக்கு இருக்கும் சினிமா அறிவு, உடன் இருக்கும் நண்பர்கள், அவனுக்கு இருக்கும்

அரசியல் தொடர்பு.. இதெல்லாம் விசாரிக்கக்கூட வழக்கு வரும். வள்ளுவர் சொல்வாரே 'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்' என்று.. அதான் இது. இப்படியானது துப்பறிவாளர் பணி.

நம்மிடம் வரும் வழக்கை முதலில் நல்லா அலசணும்.. சம்பந்தப்பட்டவர் யார் மேல சந்தேகப்படுறாரோ அவங்க மேல மட்டும் இல்ல.. சில நல்லவங்களையும் சந்தேகப்படணும். கிமு கிபி மாதிரி சம்பவம் நடந்த பின் நடப்பதற்கு முன் விசாரிக்கணும். 360 டிகிரில நம்ம பார்வை இருக்கணும்.. இந்தப் பணிக்கு இரவு பகல் கிடையாது. இரவு ரெண்டு மணிக்கு ஒரு பெண் போன் பண்ணலாம். பேசித்தான் ஆகணும். விடியற்காலை நாலு மணிக்கு ஒரு துப்பு கிடைச்சா பனி, இரவுன்னு பாக்காம பைக் எடுத்துக்கிட்டு ஓடணும். எந்த நேரமும் மாறுவேடம் போடத் தயாரா இருக்கணும்.. அந்தத் தெருவுல பூக்காரியா போனாத்தான் முடியும்னா பூக்காரியா மாறிக் கத்திப் பூ விக்கப் போகணும். சினிமாவுக்குக் குடும்பத்தோட போகக் கிளம்பும்போது திடீரென ஒரு பெண் 'சேலத்துல இருந்து வரேன். எனக்கு இந்தச் சிக்கல்'னு வந்து நிப்பா.. போட்ட திட்டம் எல்லாம் டனால்.. இதுக்கு எல்லாம் தயாராகணும்.

சில நேரம் தாக்குதல் வரலாம்.. அப்போ காப்பாத்திக்க தற்காப்புக் கலை முக்கியம். சில நேரம் காவல் துறை நண்பர்கள் உதவியும் தேவைப்படும். சட்டநுணுக்கமும் தேவைப்படும். அதுக்காகத்தான் தொடர்ந்து வக்கீல்களைப் பார்ப்பது தவிர்க்க வேண்டியே நானே சட்டப்படிப்பை முடித்தேன்.

இது மற்ற பணி போல் இல்ல. காலையில் ஆரம்பித்து மாலை வீட்டு வேலை பார்க்க. நேரம் காலம் சூழல் எதுவும் திட்டமிட முடியாது. ஒரு வழக்கு ஒரு வாரத்தில் கண்டுபிடிச்சி முடிக்க முடியும். கண்டுபிடிக்க முடியாதபடி சிக்கலாகவும் இழுக்கலாம். வருடம் முழுக்க வேலைகள் வந்தபடியும் இருக்கும்.. சில மாதம் பணியே இல்லாமலும் இருக்கும். நிறைய ஆட்கள் கைவசம் இருக்கணும். நாம் சேலத்தில் ஒருவரைத் தேடிக்கொண்டு இருப்போம். அவர் சென்னையில் ஒரு பாரில் குடிப்பதாகத் தகவல் வந்தால் சென்னையில் அவர் குடித்துவிட்டுக் கிளம்பும் முன் அது அவர்தானா என்று பார்க்க அந்த பாருக்குப் போக நம்மிடம் ஆள்பலம் இருக்கணும்.

சிலதொழில்நுட்பத்தில் முன்னணியில் இருக்கணும். கண்ணுக்குத் தெரியாத கேமிராக்கள் ரிக்கார்டர் இப்படி.. எது வந்தாலும் சமாளிக்கும் நெஞ்சுரம் தைரியம் இருக்கணும்.. சில மிரட்டல்கள் போன் எரிச்சல்கள் வரும். சந்திக்கத் தெரியணும். யாருக்கும் தெரியாதபடி நம்மைப் பாதுகாக்கத் தெரியணும். சவால்கள் அந்தந்த வழக்கைப் பொறுத்து மாறும்.. இதுதான்னு திட்டமிட்டுச் சொல்ல முடியாது.

இந்தப் பணியை வெற்றிகரமா தலைமை தாங்கி எடுத்து நடத்துபவர்கள் இந்திய அளவில் ஐந்து பெண்கள்தான்.. ஆனால் பகுதி நேர வேலை செய்யும் பெண்கள் உண்டு. இது பத்து மணிக்கு வந்து ஐந்து மணிக்குப் போகும் பணி இல்ல. புருசன் புள்ளைங்க கூட இருக்கும்போதும் அதிகாலை நாலு மணிக்குக் கிளம்பிச் சம்பந்தப்பட்ட விஷயத்தைக் கண்டுபிடிக்க ஓட முடியுமா.. கஷ்டம்.. அப்படி எல்லாம் கஷடப்பட்டுத்தான் நான் இப்போ இந்தத் தலைமை இடத்துக்கு வந்து இருக்கேன்.

ஆரம்பத்தில் குடும்பத்தில் பெரும் போராட்டம். சண்டைகள். பேசிப் பேசிப் புரிய வைத்து விளக்கிச் சொல்லி அன்பால் அனுமதி வாங்கி இப்போ ஜெயிச்ச பின் எந்தச் சிக்கலும் இல்ல. இப்போ கணவரே எனக்குப் பக்க பலமா ஆதரவா ஆறுதலா இருக்கிறார். அவர் பங்களிப்பு இதில் ரொம்ப முக்கியம்.. உறவினர்கள் குத்தல் பேச்சு, பயமுறுத்தலோட எதுக்கு இந்த ஆபத்துன்னு சொல்லுவாங்க. அக்கறைதான். அன்பு சில நேரம் அதிகாரமா மாறிடும். இப்போ அப்படி இல்ல. எல்லோரும் கொண்டாடுறாங்க. ■

• கவி: அ.வெண்ணிலா

# துரோகத்தின் நிழல்



துரோகம்
தன்னைப் பற்றிய கற்பிதங்களைப்
பொய்ப்பித்தது

நேர்த்தியான பச்சை நிற ஆடையில்
என்னை எதிர்கொண்டது

கனிந்த முகம்
உள்ளங்கைகளில் அப்படியொரு மென்மை

குழைந்த வார்த்தைகள்
நானெனவே ரூபம் கொண்ட
நம்பிக்கை

பிசிறு தட்டாத உரையாடல்கள்
ஒரு கணமும் என்னைத் தவற விட்டுவிடாத
அணுக்கம்
சோர்வுறும் கண்ணிமைகளைக்கூட
மலர வைக்கும் நுட்பம்

துரோகத்தின் கரும்புள்ளியை
இனி காலாதீதத்தில்
காணாமல் போக்கும் கனவுடன்
கண் திறவாத நாய்க்குட்டியைப் போல்
கழிப்பறையைத் திறந்தேன்

துரோகம் பொய்மைகளற்ற
தன் முகங்களுடன்
பல்லிளித்துக் கொண்டிருந்தது
துரோகத்தைச் சுற்றி
இறைந்து கிடந்தன
என் பலவீனங்கள்

வசீகரிக்கும் தன் மாய முகங்களை
என் பலவீனங்களில் இருந்து
பின்னிக் கொண்டிருக்கிறது
துரோகம். ■

• ர.லாவண்யா
முதுகலை முதலாண்டு, சமூகப் பணித்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.

# ஒவ்வொரு கணமும் யோசிக்கிறேன்..



தூப்புக்காரி என்னும் புத்தகத்தை வாசிப்பதற்கு முன் அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் மலர்வதி அவர்களைப் பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். ஒரு மனிதன் மேல் இருக்கும் சமூகப் பார்வை குறித்து எழுதும் தமிழ் எழுத்தாளர்கள் என்று எடுத்துக்கொண்டால் மிகக் குறைவு. அதிலும் பெண் எழுத்தாளர்கள் என்றால் சற்றே யோசிக்கும் நிலைமைதான். ஆனால் அதையெல்லாம் தவிடுபொடியாய் ஆக்கியது.. மலர்வதி அவர்களின் தூப்புக்காரி என்கிற நாவல்.

நான் அந்தப் புத்தகத்தை முதலில் எடுத்துப் பார்க்கையில் பிறகு படித்துக்கொள்ளலாம் என்றே நினைத்து வந்தேன். இப்படி ஒரு ஏழு நாட்கள் ஆனது.. கையில் எடுப்பதும் பிறகு படிக்காமலேயே வைப்பதுமாய். இறுதியாகப் படித்தே ஆக வேண்டும் என்று நினைக்கும் பொழுது அந்தப் புத்தகத்தை கையில் எடுத்துப் புத்தகத்தின் கடைசி அட்டையைத் திருப்பிப் பார்த்தேன். அதில் அந்நூலின் நாவலாசிரியர் எழுதியிருந்த ஓரிரு வரிகளைப் படித்துப் பார்த்தேன். அதன் பிறகுதான் நான் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினேன்.

படிக்க ஆரம்பித்த சில வினாடிகளில் அந்தப் புத்தகத்தோடு பயணிக்க ஆரம்பித்துவிட்டேன். ஒவ்வொரு பக்கத்தினைப் புரட்டும்பொழுதும் என்னுடைய எண்ண அலைகள் புரட்டப்பட்டன. புத்தகத்தின் பாதி பக்கங்களைக் கடக்கும்பொழுது ஒரு வியப்பு ஏற்பட்டது. ஏனென்றால் அவர் எழுதிய இந்நூலில் வட்டார வழக்கினை மிகச் சரியாகவும் நேர்த்தியாகவும் பயன்படுத்தியிருக்கிறார். முழுவதுமாக வட்டார வழக்கு உள்ள புத்தகத்தை நான் படிப்பது இதுவே முதல் தடவை. புரியாத வார்த்தைகளுக்குப் புத்தகத்தின் கடைசி பக்கத்தில் அதற்குண்டான அர்த்தமும் இருந்தது.

மனித மிருகங்களுக்கு நடுவில் மனிதன் யார் என்று இப்புத்தகத்தைப் படிப்பவர்களுக்கு மட்டுமே புரியும். ஒரு சமூகத்தைப் பார்த்து என்னென்ன கேள்விகளைக் கேட்க வேண்டுமோ அவை அனைத்தையும் தன் புத்தகம் வாயிலாகவும், படிக்கும் வாசகர்கள் வாயிலாகவும் கேட்டுவிட்டார். அடிமட்ட வேலைக்காரர்கள் என நினைக்கும் பல சமூக மனித மிருகங்களுக்கு அவர்களின் உயர் எண்ணங்கள் பற்றித் தெளிவாக இந்நாவலில் கூறப்பட்டுள்ளது.

இறுதிப்பக்கத்திற்கு வந்த பிறகு இந்நூல் ஒன்றை மட்டும் எனக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளது. ஒரு மனிதன் பார்க்கும் வேலையில் அவன் வைத்திருக்கும் மதிப்பை விட மற்றவர்கள் அந்த வேலையைப் பற்றிக் கூறும் மதிப்பைப் பொறுத்தே அவனுடைய நிலைமை பேசப்படுகிறது. என்னுடைய எண்ண அலைகளை முழுவதுமாகப் புரட்டிப்போட்டு ஒரு கணம் மட்டுமல்லாது ஒவ்வொரு கணமும் என்னை யோசிக்கத் தூண்டியுள்ளது. இறுதியாக இந்தப் புத்தகத்திலுள்ள ஒரு வரியை நான் மீண்டும் நினைவுகூர விரும்புகிறேன்.

நெருப்பிட நெருப்பிட
தங்கம் மேன்மையுறும்....
துன்புற துன்புற
மனித மனம் மேன்மையுறும்.....

மொழிபெயர்ப்புச் சிறுகதை

• மூலம்: ஷார்லட் பெர்கின்ஸ் ஸ்டெட்சன் (கில்மன்)
தமிழில்: கார்குழலி
ஓவியம் : அன்பழகன்

# மஞ்சள் வண்ண சுவர்த்தாள்






**கதாசிரியர், கதை பற்றிய குறிப்பு:**

ஷார்லட் பெர்கின்ஸ் ஸ்டெட்சன் (கில்மன்) (Charlotte Perkins Stetson (Gilman)), (ஜூலை 3, 1860–ஆகஸ்டு 17, 1935) அமெரிக்க ஐக்கிய நாட்டின் முன்னணி மனிதப் பண்பாட்டியலாளர், நாவல், சிறுகதை, கவிதை மற்றும் அபுனைவு எழுத்தாளர், சமூக மாற்றத்துக்குக் குரல் கொடுத்தவர், உடோபியப் பெண்ணியம் பேசியவர், பழமைக்கோட்பாடுகளை எதிர்க்கும் வாழ்க்கைமுறையை ஆதரித்தவர்.

அவருடைய மஞ்சள் வண்ண சுவர்த்தாள் (The Yellow Wallpaper) ஒரு தன்வரலாற்றுச் சிறுகதை எனலாம். மகப்பேற்றுக்குப் பின் பெண்களுக்கு ஏற்படக்கூடிய உளப்பிணி நிலைதான் (Post-Partum Depression) கதையின் மையக் கரு. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தன்னுடைய மகள் பிறந்த பிறகு கடுமையான உளச்சோர்வுக்கு ஆளாகிறார் ஷார்லட். மூளைக்கு அதிகமான வேலைகொடுப்பதுதான் காரணமென்று கூறி உடலுக்கும் உள்ளத்துக்கும் முழுமையான ஓய்வுகொடுப்பது மட்டுமே இதற்கு மருந்து என்கிறார் அவருடைய மனநல மருத்துவர். அந்த அனுபவத்தை ஒரு சிறுகதையாகப் பதிவுசெய்கிறார் ஷார்லட்.

ஆண்வழிச் சமூகத்தில் பெண்களுடைய நோய்மை, மனநலம், உளவியல் பற்றிய புரிதல் அதிகமில்லாத காலகட்டத்தைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது சிறுகதை. குடும்ப அமைப்பு, மணவாழ்வு, கலாச்சாரத்தோடு இயைந்த ஆணாதிக்கம், பெண்ணடிமை எனப் பல நிலைகளை எளிய நடையில் தொட்டுச்செல்கிறது. பெண்ணியத்தைப் பேசிய கதைகளுள் முதன்மையாகக் கருதப்பட்டு உலகின் பல பல்கலைக்கழகங்களின் இலக்கியப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருக்கிறது இந்தக் கதை.

கதையின் முதன்மைக் கதாபாத்திரம் ஒரு பெண்; படித்தவர், கற்பனைவளம் மிகுந்த எழுத்தாளர். கணவரும் உடன்பிறந்த சகோதரரும்

மருத்துவர்கள். பாசமும் காதலும் நிறைந்த மருத்துவக் கணவரின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கிறார். தன்னுடைய தினசரி அனுபவங்களையும் எண்ணங்களையும் வாசகர்களுடன் தன்னிலையாக ஒரு டைரிக்குறிப்புபோலப் பகிர்ந்துகொள்கிறார். அவர் வசிக்குமறையின் சுவர்த்தாளுடன் அவருக்கேற்படும் அனுபவங்களை நுணுக்கமான ஆனால் எளிமையான நடையில் எழுதியிருக்கிறார். காலப்போக்கில் அவரிடம் ஏற்படும் மாற்றங்களைச் சொற்களால் நம்மையுணரச் செய்கிறார். அவருடைய குரலும் தொனியும் மாறாமல் மொழியாக்கம் செய்ய முயற்சித்திருக்கிறோம்.

• • •

மிக அரிதான சமயங்களில் மட்டுமே என்னையும் ஜானையும் போன்ற சாதாரண மானவர்கள் இதுபோன்ற பழமைமிக்க பண்ணையும் வீடும் ஒன்றாக அமைந்த இடத்தைக் கோடைக்காலத்தில் வாடகைக்கு எடுப்பார்கள்.

காலனித்துவப் பாணியில் அமைந்த வீடு, பாரம்பரியம்மிக்க இடம், என்னைப் பொருத்தவரை பேயுறையும் வீடு. இப்படியொரு இடத்தில் காதலின் ஆனந்தத்தை எட்ட முடியும் என்பதே விதியிடம் வைக்கும் அதிகபட்சக் கோரிக்கை என்பேன். இருந்தாலும் இதில் ஏதோ ஒரு விந்தையான விஷயம் இருந்தது என்று செருக்குடன் உறுதியாகச் சொல்வேன்.

பின் எதற்காக இத்தனை குறைந்த வாடகைக்கு விட்டார்களாம்? எதனால் இத்தனை நாளாக யாரும் குடித்தனம் வராமல் கிடந்ததாம்?

என்னைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தார் ஜான். அதனால் என்ன, திருமண உறவில் இதெல்லாம் வழக்கம்தானே.

ஜான் தீவிரமான எதார்த்தப் பேர்வழி. கடவுள் நம்பிக்கையைச் சுத்தமாக சகித்துக்கொள்ளமாட்டார். மூடநம்பிக்கை என்றால் பெருவெறுப்பு. பார்க்கவோ உணரவோ எழுத்தில் எழுதவோ முடியாதவற்றைக் குறித்த பேச்சுக்களை வெளிப்படையாக ஏளனஞ் செய்வார்.

ஜான் ஒரு மருத்துவர், ஒருக்கால் – (வேறு எந்த உயிருள்ள ஆத்மாவிடமும் நான் இதைச் சொல்லவேமாட்டேன், நல்லவேளை இது உயிரற்ற காகிதம் என்பதால் மனதுக்குப் பெரும் வடிகாலாக இருக்கிறது) – அதுதான் நான் விரைவாகக் குணம் பெறாததற்குக் காரணமோ என்னவோ.

நான் நோய்வாய்ப்பட்டிருக்கிறேன் என்றே அவர் நம்பவில்லை என்றால் பாருங்களேன்.

இதுகுறித்து ஒருத்தி என்ன செய்துவிட முடியும்?

புகழ்பெற்ற மருத்துவரும் அந்த ஒருத்தியுடைய கணவனாக இருப்பவரும் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் ஒரு பிரச்சினையுமில்லை, தற்காலிகமான நரம்புக் கோளாறுதான், கொஞ்சம் மிகையுணர்ச்சிக் கோளாறுக்கான போக்கும் இருக்கிறது என்று சொல்லும்போது என்னதான் செய்யமுடியும்.

என்னுடைய சகோதரனும் ஒரு புகழ்பெற்ற மருத்துவர்தான், அவனும் இதையேதான் கூறுகிறான்.

எனவே நான் பாஸ்பேட்டுக்களையோ பாஸ்பைட்டுக்களையோ, இரண்டில் ஏதோ ஒன்றையும் டானிக்குகளையும் பயணங்களையும் காற்றையும் உடற்பயிற்சியையும் எடுத்துக் கொள்கிறேன். குணம்பெறும் வரை 'வேலையே' செய்யக்கூடாது என்ற கட்டளை வேறு.

என்னைப் பொருத்தவரை அவர்களுடைய ஆலோசனைகள் அனைத்தையும் நிராகரிக்கிறேன்.

என்னைப் பொருத்தவரை மனதுக்கு இசைவான வேலையும் கூடவே உற்சாகமும் மாற்றமும் எனக்கு நன்மை செய்யும் என்று நம்புகிறேன்.

ஆனாலும் ஒருத்தி என்ன செய்யமுடியும்?

சிறிது காலம் அவர்கள் சொன்னதையும் மீறி எழுதினேன் என்றாலும் அது என்னைக் களைப்படையவே செய்தது. ஏனெனில் கடும் எதிர்ப்புக்கு ஆளாக நேரிடுமென்பதால் யாருக்கும் தெரியாமல் அதைத் திருட்டுத்தனமாகச் செய்ய வேண்டியிருந்தது.

இந்த நிலைமையில் எதிர்ப்பு குறைவாகவும் தோழமையும் ஊக்கமூட்டலும் இருந்தால் நல்லது என்று விரும்புகிறேன். இப்படி என் நிலைமையைப் பற்றி யோசிப்பதுதான் இருப்பதிலேயே மோசமான செயலாக இருக்கமுடியும் என்று ஜான் சொல்கிறார் என்பதால் அதைக்குறித்து நான் நினைக்கும் போதே ஏதோ தவறு செய்ததுபோல உணர்கிறேன் என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

எனவே அதை விடுத்து இந்த வீட்டைப் பற்றிப் பேசுகிறேன்.

உள்ளதிலேயே மிகவும் அழகான இடம்! கிராமத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் தெருவிலிருந்து உள்ளடங்கித் தனியே நிற்கிறது. இதுவரை படித்திருக்கக்கூடிய இங்கிலாந்து நாட்டின் இடங்களைப்பற்றி நினைவூட்டுகிறது; புதர் வேலிகளும் சுவர்களும் பூட்டக்கூடிய கதவுகளும் தோட்டக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் தனித்தனியே நிறைய குட்டி வீடுகளும் இருக்கின்றன.



ரசனைமிக்க தோட்டமொன்றும் இருக்கிறது. அப்படியொரு தோட்டத்தை நான் பார்த்ததே இல்லை; பெரியது, நிழலார்ந்தது, பெட்டிகளைக்கொண்ட கரைகளையுடைய பாதைகளையும், திராட்சைக்கொடி படர்ந்த வளைவுகளையும் அவற்றுக்குக் கீழே இருக்கை களையும் கொண்டது.

செடிகளை வளர்க்கும் கண்ணாடிக்குடில்களும் இருந்தன, ஆனால் அவை இப்போது உடைந்து போயிருந்தன.

இடத்தின் வாரிசுகளுக்கும் அவர்களுடைய சந்ததியினருக்குமிடையே ஏதோ சட்டச் சிக்கலிருந்தது என்று நினைக்கிறேன், பல வருடங்களாக இந்த இடம் காலியாகவே கிடந்தது.

பேய்களைப்பற்றிய என் கற்பனைக்கு இடமில்லாமல் செய்துவிட்டது என்றாலும் அந்த வீட்டில் ஏதோ இனமறியாத அதிசயம் இருந்ததை என்னால் உணரமுடிந்தது.

நிலவொளி நிறைந்த ஒரு மாலையில் இதுகுறித்து ஜானிடமும் சொன்னேன். அவரோ குளிர்காற்று வீசுவதைத்தான் நான் அப்படி உணர்கிறேன் என்று ஜன்னலை மூடச் செய்தார்.

சில நேரங்களில் காரணமேயில்லாமல் ஜான் மீது கோபம் வருகிறது. இவ்வளவு எளிதில் உணர்ச்சிவயப்படுபவளாக நான் இருந்ததே யில்லை. இந்த நரம்புக் கோளாறினால்தான் அப்படியாகிறது என்று நினைக்கிறேன்.

ஆனால் ஜானோ அப்படி நினைத்துக் கொண்டால் நான் சுயக்கட்டுப்பாட்டை இழந்துவிடுவேன் என்கிறார். எனவே அவர் முன்னாலாவது என்னை நானே கட்டுப்படுத்திக் கொள்ள மெனக்கெடுகிறேன், ஆனால் அது என்னை மிகவும் சோர்வடையச் செய்கிறது.

எங்களுடைய அறையைக் கொஞ்சங்கூடப் பிடிக்கவேயில்லை. முற்றத்துக்கு இட்டுச்சென்ற ஜன்னல்களெங்கும் ரோஜா பூத்திருந்ததும் பல வண்ண சீட்டித் துணியாலான திரைச்சீலையைக் கொண்டதுமான தரைதளத்திலிருந்த அறைதான் எனக்குப் பிடித்திருந்தது. ஆனால் நான் சொன்னதைக் கேட்க மறுத்துவிட்டார் ஜான்.

அங்கே ஒரேயொரு ஜன்னல்தான் இருக்கிறது. இரண்டு கட்டில்களைப் போட இடமில்லை; இன்னொரு கட்டிலைப் போடுவதற்குப் பக்கத்தில் வேறு அறையுமில்லை என்று சொல்லிவிட்டார்.

அவர் மிகுந்த கவனமும் அன்பும் கொண்டவர், அவருடைய சிறப்பான வழிகாட்டுதல் இல்லாமல் என்னை அசையக்கூட விடமாட்டார்.

ஒரு நாளின் ஒவ்வொரு மணியிலும் நான் என்ன செய்யவேண்டும் என்பதற்கு நேர அட்டவணையும் மருத்துவக் குறிப்பும் வழங்கப் பட்டிருக்கிறது. என்னைக் கவனித்துக்கொள்ளும் வேலையை அவர் எடுத்துக்கொண்டுவிட்டார். அதற்கு மதிப்பளிக்காவிட்டால் நன்றிமறந்த கேடுகெட்டவளாக உணர்கிறேன்.

என் பொருட்டுமட்டுமே இங்கே வந்தோமென்பதால் கச்சிதமான ஓய்வையும் நல்ல காற்றையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றார். "என் அன்பே, உடற்பயிற்சி உன் உடல் திறத்தைப் பொருத்தது. உணவுப் பழக்கம் உன் பசியுணர்ச்சியைப் பொருத்தது, ஆனால் காற்றை நீ எப்போதும் உள்ளிழுத்துக்கொண்டே இருக்கலாம்", என்றார். அதனால் மாடியில் இருந்த குழந்தைகளுக்கான அறையை எடுத்துக் கொண்டோம்.

பெரிய காற்றோட்டமான அறை. அந்தத் தளத்தின் முழு பரப்பிலும் கட்டப்பட்டிருந்தது. நாலாபுறமும் ஜன்னல்களும் ஏராளமான காற்றும் சூரிய வெளிச்சமும் இருந்தது. முதலில் குழந்தைகளுக்கான அறையாகவும் பிறகு விளையாட்டு அறையாகவும் கடைசியாக உடற்பயிற்சி அறையாகவும் இருந்திருக்கும் என்று கணிக்கிறேன். குழந்தைகளுக்காக ஜன்னல்களில் கம்பி சட்டங்களைப் போட்டுத் தடுத்திருக் கிறார்கள். சுவர்களில் வளையங்களும் வேறு பொருட்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

சுவரின் வண்ணத்தையும் தாளையும் பார்த்தால் ஏதோ ஆண்கள் பள்ளி இந்த அறையைப் பயன்படுத்தியது போல இருக்கிறது. கட்டிலின் தலைமாட்டைச் சுற்றிக் கையெட்டும் தூரம் வரையிலும் பெரிய திட்டாகவும் அறையின் மற்றொரு புறத்தில் தரையை ஒட்டியும் சுவர்த்தாள் உரிக்கப்பட்டிருக்கிறது. இதைவிட

மோசமான தாளை இதுவரை வாழ்க்கையில் பார்த்ததேயில்லை.

பரந்துபட்ட அலைத்தெழும் தழல்போன்ற எல்லாவகையிலும் கலைக்குப் பாவமிழைக்கும் ஒரு படிமம்.

தொடர்ந்து பார்க்கும்போது பார்வையைக் குழப்பும் அளவுக்கு மந்தமாக இருந்தாலும் கண்களை உறுத்தி உற்றுநோக்க வைக்கும். அந்தத் தெளிவற்ற வட்டங்களைத் தொடர்ந்து பார்த்துகொண்டேயிருந்தால் சிறிது தூரத்தில் அவை தற்கொலை செய்துகொள்ளும்; நினைத்தே பார்க்கமுடியாத கோணங்களிலிருந்து திடீரெனக் கீழே குதித்து இதுவரை கேட்டே இராத முரண்பாடுகளில் தம்மையே மாய்த்துக்கொள்ளும்.

வெறுப்பும் குழப்பமுமூட்டும் அந்த நிறம், கனன்றுகொண்டிருக்கும் ஒரு அழுக்கு மஞ்சள், மெல்ல மறையும் சூரியனின் வெளிச்சத்தில் அதிசயமாக மங்கியிருந்தது.

சில இடங்களில் மங்கலான வெளிறிய ஆரஞ்சு வண்ணத்திலும் மற்ற இடங்களில் வெளிறிய சல்பரின் பசுமஞ்சள் சாயலிலும் இருந்தது.

குழந்தைகளுக்கு இந்த அறையைப் பிடிக்காமல் போனதில் வியப்பேயில்லை. நீண்ட காலத்துக்கு இங்கேயே தங்கவேண்டி வந்தால் நானும் வெறுக்கத் துவங்குவேன் என்பதில் சந்தேகமில்லை.

அதோ ஜான் வருகிறார், இதை ஒளித்துவைக்க வேண்டும். நான் ஒரு வார்த்தை எழுதினாலும் அவருக்குப் பிடிப்பதேயில்லை.

நாங்கள் இங்கே வந்து இரண்டு வாரமாகிவிட்டது, முதல் நாளைக்கப்புறம் எனக்கு முன்னைப்போல எழுதத் தோன்றவில்லை.

மேலேயுள்ள இந்தக் கோரமான அறையில் ஜன்னலுக்கருகில் உட்கார்ந்திருக்கிறேன். என் விருப்பப்படி எழுதத் தடையேதுமில்லை, என்னுடைய உறுதியின்மையைத் தவிர.

ஜான் நாள் முழுவதும் வீட்டில் இருக்கமாட்டார். சில நேரங்களில் நோயாளிகளின் நிலைமை ஆபத்தானதாக இருந்தால் இரவிலும் இருக்கமாட்டார். என் நிலைமை ஆபத்தானதாக இல்லை என்பதில் மகிழ்ச்சி. ஆனாலும் இந்த நரம்புக் கோளாறு மிரட்சியூட்டும் வகையில் உளச்சோர்வை ஏற்படுத்துகிறது.

நான் உண்மையில் எவ்வளவு அவதிப் படுகிறேன் என்பது ஜானுக்குப் புரியவேயில்லை. நான் அவதிப்படுவதற்குக் காரணம் ஏதுமில்லை என்பதே அவருக்குத் திருப்தியளிப்பதாக இருக்கிறது.

ஆம், இது வெறும் நரம்புக்கோளாறு சார்ந்த பயம் மட்டுமே. ஆனாலும் என் கடமையைச் செய்யவிடாமல் அழுத்தமேற்படுத்துகிறது.

ஜானுக்கு ஒத்தாசையாக இருக்கவேண்டும், ஆசுவாசமும் ஆறுதலும் தரவேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால், அதைவிட அதிகமாகப் பாரத்தைத் தருபவளாக மாறிவிட்டிருந்தேன்.

அலங்காரம் செய்துகொள்வது, விருந்தினர்களை வரவேற்பது, என்ன செய்யவேண்டுமென்று கட்டளையிடுவது போன்ற சின்னச் சின்னவேலைகளைச் செய்வதற்குக்கூட நான் நிறைய மெனக்கெட வேண்டியிருக்கிறது என்பதை யாரும் நம்பமாட்டார்கள்.

மேரி குழந்தையை நன்றாகப் பார்த்துக் கொள்கிறாள் என்பது அதிர்ஷ்டவசமானது. மிகவும் அருமையான குழந்தை.

ஆனாலும் அவனோடு இருப்பது நரம்புக் கோளாறை அதிகப்படுத்துவதால் என்னால் அவனோடு இருக்கமுடிவதில்லை.

ஜான் அவர் வாழ்க்கையில் ஒருபோதும் நரம்புக் கோளாறுக்கு ஆட்பட்டதேயில்லை என்று நினைக்கிறேன். இந்தச் சுவர்த்தாளைப் பற்றி நான் சொல்லும்போது விழுந்துவிழுந்து சிரிக்கிறார்.

முதலில் இந்தச் சுவர்த்தாளை மாற்றி விடலாமென்றார். அதற்கப்புறம் அது என்னை ஆட்டுவிக்க நான்தான் இடம்கொடுக்கிறேன் என்றும் என்னைப் போன்ற நரம்புக் கோளாறு உள்ளவர்கள் இதுபோன்ற கற்பனைகளுக்கு இடம்கொடுப்பதைவிட கெடுதி ஏற்படுத்தக்

கூடியது வேறொன்றுமில்லை என்றும் கூறிவிட்டார்.

சுவர்த்தாளை மாற்றினால் அடுத்தது கட்டிலால் பிரச்சினை ஏற்படும், அப்புறம் கம்பிபோட்ட ஜன்னல்கள், படிக்கட்டின் மேல்பகுதியில் உள்ள கதவு என ஒவ்வொன்றாக வரும் என்றார்.

"இந்த இடம் உனக்கு நன்மை பயக்கிறது என்று தெரிகிறதல்லவா. அன்பே, மூன்று மாத வாடகைக்கு வந்திருக்கும் வீட்டைப் புதுப்பிப் பதில் எனக்கு அக்கறையில்லை என்பதுதான் உண்மை", என்றார்.

"அப்படியென்றால் கீழ்த்தளத்துக்குப் போய் விடலாம். அங்கே நிறைய அழகான அறைகள் இருக்கின்றனவே," என்றேன்.

என்னைக் கட்டியணைத்துக்கொண்டு "என் ஆசீர்வதிக்கப்பட்ட குட்டி முட்டாளே, உனக்கு விருப்பமென்றால் வீட்டின் நிலவறைக்குக் கூட போகத் தயாராக இருக்கிறேன். அதை உனக்காக வெள்ளையடித்துத் தயார்செய்து தருவேன்," என்றார்.

கட்டிலைப் பற்றியும் ஜன்னல்கள் மற்ற பொருட்களைப் பற்றியும் அவர் சொன்னது சரிதான்.

எவரும் விரும்பக்கூடிய பெரிய காற்றோட்டமான அறைதான் இது. என்னுடைய இந்தத் திடீர் விருப்பத்தின் பேரில் அவரைச் சிரமப்படுத்தும் முட்டாள்தனத்தை நிச்சயமாக நான் செய்யமாட்டேன்.

இந்தப் பெரிய அறையின்மீது உண்மையாகவே எனக்கு விருப்பம் ஏற்படுகிறது. அருவருப்பூட்டும் இந்தச் சுவர்த்தாளைத் தவிர.

ஒரு ஜன்னலின் வழியாக என்னால் தோட்டத்தை, அந்த ஆழ்ந்த வண்ணமுடைய மர்மமான வளைவுகளையும் களிப்பூட்டும் பழைய பாணி மலர்களையும் புதர்களையும் முண்டு முடிச்சுகளையுடைய மரங்களையும் பார்க்க முடிகிறது.

இன்னொரு ஜன்னலின் வழியாக விரிகுடா வின் அழகான தோற்றத்தையும் வீட்டின் தனிப்பட்ட கப்பல்துறை மேடையையும் பார்க்கமுடிகிறது. வீட்டிலிருந்து அதுவரை நிழலார்ந்த குறுகிய பாதை ஒன்று செல்கிறது. இந்தப் பாதைகளிலும் வளைவுகளின் கீழும் மனிதர்கள் நடமாடுவதைப் பார்ப்பதுபோலக் கற்பனை செய்துகொள்கிறேன், ஆனால் அதுபோன்ற கற்பனைகளுக்கு இடம்கொடுக்கக் கூடாது என்று ஜான் எச்சரித்திருக்கிறார். என்னுடைய கற்பனைத் திறமும் கதை உருவாக்கும் பழக்கமும் எனக்கிருக்கும் நரம்புக்கோளாறும் எல்லாவிதமான கிளர்ச்சியூட்டும் கற்பனைகளுக்கும் வழிவகுக்கும் என்பதால் நான் என்னுடைய மனத்திட்பத்தையும் நல்லுணர்வையும் செலுத்தி அந்தப் போக்கைக் கட்டுப்பாட்டில் வைக்கவேண்டுமென்று சொல்கிறார். அதனால் நானும் முயற்சி செய்கிறேன்.

கொஞ்சம் எழுதும் அளவுக்கு உடல்நிலை மட்டும் நன்றாக இருந்தால் பாரமாக அழுத்தும் எண்ணங்களைத் தணிக்க உதவியாக அமைந்து ஓய்வளிக்கும் என்று சில நேரங்களில் நினைக்கிறேன்.

ஆனாலும் முயற்சி செய்யும்போது சோர்வடைந்துவிடுகிறேன்.

என் பணி குறித்து எந்தவிதமான அறிவுரையும் தோழமையும் இல்லாமல் இருப்பது நம்பிக்கையிழக்கச் செய்கிறது. எனக்கு இன்னும் கொஞ்சம் சரியாகிவிட்டால் என் உறவினர் களான ஹென்றியையும் ஜூலியாவையும் இங்கே வந்து தங்குமாறு அழைப்புவிடுக்கலாம் என்று சொல்கிறார் ஜான். கிளர்ச்சியூட்டும் அந்த இருவரையும் இப்போதே அழைக்கவேண்டு மென்றால் அதற்குப் பதில் என்னுடைய தலையணையினுள் வாண வேடிக்கைகளை வைப்பது உத்தமம் என்கிறார்.

நான் விரைவில் குணமாகிவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

ஆனால் அதைப்பற்றி நான் நினைக்கக்கூடாது. இந்தச் சுவர்த்தாளுக்கே தான் எவ்வளவு கொடூரமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று தெரியுமென்று நினைக்கிறேன்.

மீண்டும் மீண்டும் தோன்றும் ஒரு புள்ளியில் படிவம் முறிந்து விழுந்த கழுத்தைப் போலவும்

அதிலிருந்து இரண்டு முட்டைக் கண்கள் தலைகீழாகப் பார்ப்பது போலவும் இருக்கும்.

இந்த முட்டாள்தனமான படிமத்தையும் அதன் முடிவில்லாத் தன்மையையும் பார்த்த எனக்கு உண்மையாகவே கோபம் வந்தது. அர்த்தமற்ற கண்சிமிட்டாத அந்த முட்டைக் கண்கள் மேலும் கீழும் பக்கவாட்டிலும் தவழ்ந்தன, எல்லாவிடத்திலும் இருந்தன. ஒரு இடத்தில் சுவர்த்தாளின் இரண்டு பகுதிகள் சமமாக ஒட்டப்படாததால் ஒரு செங்குத்து வரிசையில் ஒரு கண் மேலேயும் ஒரு கண் கீழேயும் என இருந்தது.

உயிரற்ற பொருட்களுக்கு இருக்கும் உணர்வு வெளிப்பாடு பற்றி நம் எல்லோருக்கும்தான் தெரியுமே, இத்தனை உணர்ச்சி பாவங்களை இதுவரை நான் பார்த்ததில்லை. நான் குழந்தையாக இருந்தபோது பெரும்பாலான குழந்தைகள் பொம்மைக் கடையில் அனுபவித்த கேளிக்கையையும் திகிலையும் என்னைச் சுற்றியிருந்த வெற்றுச் சுவரையும் எளிமையான சாமான்களையும் இரவில் உறங்காமல் பார்ப்பதன் மூலம் அனுபவித்தேன்.

எங்களுடைய பழைய பீரோவின் கைப்பிடிக் குமிழ்களின் கனிவான கண்சிமிட்டலும் உறுதிமிக்க நண்பனைப்போலத் தோன்றிய பெரிய நாற்காலியும் நினைவுக்கு வருகின்றன.

மற்ற பொருட்கள் அச்சமூட்டுவதாகத் தோன்றும்போது ஒரே எம்பில் நாற்காலியில் ஏறி அமர்ந்து பாதுகாப்பாக இருக்கலாம் என்று நினைத்துக்கொள்வேன்.

இந்த அறையிலிருக்கும் பொருட்களை யெல்லாம் கீழ்த்தளத்தில் இருந்து எடுத்துவர வேண்டியிருந்ததால் ஒன்றுக்கொன்று ஒத்திசைவில்லாமல் இருக்கிறது. இதை விளையாட்டு அறையாக மாற்றியபோது குழந்தைகளுக்கான பொருட்களையெல்லாம் அகற்றவேண்டியிருந்திருக்கும் என்பதில் ஆச்சரியமில்லை. அறையைக் குழந்தைகள் செய்துவைத்திருப்பது போன்ற ஒரு நாசக்கேட்டை இதுவரை நான் பார்த்ததே யில்லை.

முன்னர் சொன்னதுபோல சுவர்த்தாள் ஆங்காங்கே பிய்த்து எடுக்கப்பட்டிருக்கிறது. சகோதரப் பாசத்தில் பிணைத்ததுபோல ஒட்டப்பட்டதை விடாமுயற்சியும் பெருவெறுப்பும் கொண்டவர்களால் மட்டுமே இப்படிச் செய்யமுடியும்.

தரை கீறிக் கொத்திப் பிளக்கப்பட்டும் பிளாஸ்டரில் இங்கும் அங்கும் குழிபறிக்கப் பட்டும் இந்த அறையில் இருக்கும் பெரிய கனமான கட்டில் போருக்குச் சென்று வந்ததுபோலவும் இருக்கிறது.

இதெல்லாம்கூட எனக்கு ஒரு பொருட்டே இல்லை. இந்தச் சுவர்த்தாள் மட்டும்தான்.

அதோ வருகிறாள் ஜானின் சகோதரி. மிகவும் அன்பானவள், என்மீது மிகுந்த அக்கறை கொண்டவள்! நான் எழுதுவதை அவள் பார்த்துவிடக்கூடாது.

அவள் ஒரு சுறுசுறுப்பான நேர்த்தியான வீட்டு நிர்வாகி, அதைத் தவிர வேறு எதையும் செய்வதில் விருப்பமில்லாதவள். எழுதுவதுதான் என் உடல்நலத்திற்குத் தீங்கு செய்தது என்று அவள் நினைக்கிறாள் என்று நம்புகிறேன்!

அவள் வீட்டிலில்லாதபோது என்னால் எழுதமுடியும். அவள் தூரத்தில் வருவதையும் போவதையும் இந்த ஜன்னல்களின் வழியாக நான் பார்க்கமுடியும்.

வளைந்து நெளிந்து செல்லும் நிழலார்ந்த பாதையைப் பார்த்தபடி இருக்கிறது ஒரு ஜன்னல். பெரிய எல்ம் மரங்களையும் பட்டுவிரித்தது போன்ற புல்வெளிகளையும் கொண்ட அழகிய கிராமத்தைப் பார்த்தபடி மற்றொன்று.

இந்தச் சுவர்த்தாளில் வேறு ஒரு வண்ணச் சாயலில் மிகுந்த எரிச்சலைத் தூண்டும் ஒரு உள் படிமம் இருக்கிறது, அதைச் சில நேரங்களில்தான் தெளிவாகப் பார்க்கமுடியும், அதுவும் மங்கலாக.

நிறம் மங்காத இடங்களில் சூரிய ஒளி படும்போது அந்த முட்டாள்தனமான வெளிப்படையாகத் தோன்றும் படிமத்துக்குப் பின்னால் வினோதமான எரிச்சலைத் தூண்டும் உருவமில்லா வடிவம் ஒன்றும் தெரியும்.

அதோ சகோதரி படியேறி வருகிறாள்!

- தொடரும் ■

• தொகுப்பு: படைப்புக்குழுமம்

# டாலுவும் டோலுவும்





நவீன இலக்கியப் படைப்புலகில் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ந்துவரும் படைப்பாளர்களான கோ.லீலாவும் அம்பிகாகுமரனும் தமக்குள் டாலு என்றும் டோலு என்றும் அழைத்துக்கொள்ளும் அளவுக்கு நெருங்கிய தோழியர். முகநூலாலும் படைப்பினாலும் இணைந்த அழகிய நட்பினர். ஒரு மாலைப்பொழுதில் அவர்கள் இருவரும் மனந்திறந்து பேசிய உரையாடல் சமூகம் சார்ந்த பதிவாயும் அமைந்திருக்கிறது. அந்த உரையாடல் தருணங்கள்..

**டாலு - கோ.லீலா**

**டோலு - அம்பிகா குமரன்**

**டாலு :** டோலு.. நாம முகநூல் வழியாகத்தான் அறிமுகமானோம். ஆனால் முகநூல் பெண்களுக்கான தளமாக இருக்கிறதுன்னு சொல்வீங்களா..?

**டோலு :** ஆமாம் டாலு. நிச்சயமாக முகநூல் பெண்களுக்கான தளமாக இருக்கிறது. முகநூல் ஆரம்பித்தபொழுது என் கணவர் பெயரில் ஒரு கணக்கை ஆரம்பித்து (பேக் ஐடி) உறவினர் களோட வேடிக்கையான விஷயங்களைப் பேசிப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் எதேச்சையாகத் தமிழ்ப் பட்டறை என்ற முகநூல் குழுமம் என் கண்ணில் பட்டது. என் பெயரில் ஒரு முகநூல் கணக்கைத் தொடங்கித் தமிழ்ப்பட்டறையில் எனது கவிதைகளை எழுத ஆரம்பித்தேன். அன்று முதல் இன்று வரை கவிதைத் தளத்தில் நான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிக்கும் முகநூலே சாட்சியாக இருக்கிறது.

அதுசரி டாலு.. இயற்கையின் காதலியா இருக்கீங்களே.. இயற்கை மீதான இந்த நேசம் உங்களுக்கு எப்போது எப்படி ஆரம்பித்தது?

**டாலு :** சிறுவயதில் திருவாரூரில் கமலாலயம் ஏரிக்கரையில் வசித்து வந்தேன். எல்லாக் குழந்தைகளும் விளையாடிக்கொண்டிருக்கும் போது நான் மட்டும் கமலாலயக் குளத் தண்ணீரின் அலையில் ஆடும் விளக்கு வெளிச்சத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன். வானத்தில் நிலவையும் நட்சத்திரத்தையும் அவை உருவாக்கும் உருவ அமைப்பையும் பார்த்து ரசிப்பேன். விடுமுறை நாட்களில் பகல் பொழுதுகளில் புத்தகம் படிப்பது, வானத்தில் மிதக்கும் வெண்மேகங்களின் உருவங்களைப் பார்ப்பது, அருகில் இருக்கும் வேப்பமரம் தென்னை மரங்களின் வழியே வரும் சூரிய ஒளி பார்ப்பது என ரசித்துக் கொண்டிருப்பேன். விடுமுறை நாட்களில் ஆத்தா

ஊருக்குச் செல்லும்போது கடலில் மிக விருப்பத்துடன் விளையாடுவதும் அருகிலுள்ள குளங்களில் வெகுநேரம் நீராடுவதும் எனத் தண்ணீரின் மீது ஒரு தீராத மோகம் இருந்துகொண்டே இருந்தது. சிறு வயது முதல் தற்போது வரை தண்ணீரைக் கண்டால் விளையாட ஆரம்பித்து விடுவேன்.

பணி சார்ந்து செல்லும்பொழுது நீர் நிலைகள் மற்றும் காடு இரண்டும் இணைந்து இருந்ததால் அது எனக்கு மிகவும் மனதிற்கு நெருக்கமான பணியாக அமைந்திருந்தது.

பெரும்பாலும் மனிதர்களை விடவும் இயற்கையின் மீது ஒரு பற்றுதல் ஒரு பொசசிவ்னஸ் என்று சொல்லலாம், எனக்கு உண்டு.

முக்கியமான செய்தி, மனிதர்களைப்போல இயற்கை ஒருநாளும் என்னை நிராகரிப்பதில்லை. இந்த நேசிப்பு ஒரு தியானம் ஒரு தவம்.

சரி டோலு.. நல்ல கவிஞர்னு பேர் வாங்கிட்டீங்க. வாழ்த்துக்கள். உங்கள் வெளிதேடும் சொற்கள் தொகுப்பு பற்றிச் சொல்லுங்களேன்?

**டோலு :** "வெளிதேடும் சொற்கள்" எனது முதல் கவிதைத் தொகுப்பு. இதில் அனைத்தும் மரபுக்கவிதைகள். நான் கவிதை எழுத ஆரம்பித்ததிலிருந்து ஒரு தொகுப்பு கொண்டு வர வேண்டும் என்பது பெரிய கனவாக இருந்தது. சில சூழல்கள் காரணமாக, பொருளாதாரச் சிக்கல்களின் காரணமாக ஒரு கவிதைத் தொகுப்பு வெளியிடுவது என்பது கனவாகவே போய் விடுமோ என்ற அளவில் இருந்து வந்தது. எந்தக் கூட்டத்திற்குச் சென்றாலும் எப்போ தொகுப்பு கொண்டு வருவீங்க என்ற கேள்வியே சங்கடப்படுத்துவதாக இருக்கும். இதையெல்லாம் கடந்து இந்தத் தொகுப்பு வெளிவருவதற்குக் காரணமான தமிழ்ப்பட்டறை பதிப்பகம் சேக்கிழார் அப்பாசாமி அண்ணன் மற்றும் என் நண்பர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி சொல்கிறேன். இந்தத் தொகுப்பில் காதல் சமூகம் அரசியல் என்று அனைத்துத் தளங்களிலும் கவிதைகள் அமைந்திருக்கின்றன. மேலும் நான் பெரிதும் மதிக்கக்கூடிய என் வாழ்க்கையின் முன்உதாரணமாக நான் எடுத்துக்கொண்ட தலைவர் "டாக்டர் கலைஞர்", "கவிக்கோ அப்துல் ரகுமான் அப்பா", "கவிப்பேரரசு வைரமுத்து", "கவிஞர் பழனிபாரதி" ஆகியோருக்கான வாழ்த்துக் கவிதைகளும் இருக்கின்றன.

**டாலு :** டாக்டர் கலைஞரின் ஊர்தான் நான் தெரியுமா?

**டோலு :** அப்படிப்போடு.

**டாலு :** என் அப்பாவின் ஊர் திருக்குவளை. நான் பிறந்து வளர்ந்து, படித்தது எல்லாம் திருவாரூர் என்பதால் முத்தமிழறிஞர் கலைஞர், இனமான தலைவர் கி.வீரமணி அவர்களின் உரையைக் கேட்டு வளர்ந்தேன்... ஆசிரியருக்குக் கீழ் பணியாற்றியபோது அவரின் அன்புக்குரிய மகளாக என்னை நடத்தியிருக்கிறார். அப்போது அருகிலிருந்து அவரது தலைமைப் பண்புகளைக் கவனித்தது உண்டு. அரசியலுக்கு அப்பாற்பட்டுக் கலைஞரின் தமிழ், பண்பு, ஆளுமையைக் கண்டு வியந்திருக்கிறேன். ஊர்க்காரவங்க நாங்க...(சிரிப்பு).

**டோலு :** பணிபுரியும் இடத்தில் யாரும் நீ பெண் என்பதை உணர்த்தும்விதமாக நடந்து இருக்கிறார்களா? நீங்கள் எடுக்கும் முடிவுகளை மதிக்காமல் இருந்து இருக்கிறார்களா?

**டாலு :** அலுவலகத்தில் மிக உயர் மட்ட நிலையில் எடுக்கப்பட வேண்டிய பல முடிவுகளுக்கு என்னை ஆலோசிப்பதும், பாராட்டுவதும் ஊக்கப்படுத்துவதும் உதவி செய்வதும் எனத் தொடர்ந்து என்னைக் கொண்டாடி என் வெற்றியில் மகிழும் மனிதர்களோடு நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். ஆண் பெண் பேதமின்றி என்னுடன் சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்தால் சற்று ஆதரவாக, ஆறுதலாக இருப்பதாகக் கூறுவார்கள்.

**டோலு :** எனக்கும்கூட அப்படித்தான் தோணுது டாலு.. எப்படி இப்படி ஒரு மனநிலை உங்களுக்கு வாய்த்தது?

**டாலு :** எனது அம்மா, தாத்தா அனைவருமே முற்போக்குச் சிந்தனை உடையவர்கள். நான் படித்ததும் கூட பெரியார் கல்லூரியில் என்பதால்

எனக்கு இயல்பிலேயே ஒரு சுதந்திரத் தன்மையும் ஒரு மகிழ்ச்சியான மனநிலையும் வாய்த்திருக்கிறது.

அதை எல்லோரும் கொண்டாடுகிறார்கள். நானும் அவர்களைக் கொண்டாடுகிறேன்.

**டோலு :** உங்ககிட்ட இருக்க தலைமைப் பண்பை எப்படி வளர்த்துக்கொண்டீர்கள்?

**டாலு :** சமூகத்தின், சக மனிதர்களின் மீதான அன்பு, அக்கறை கொண்ட எவருக்கும் தலைமைப் பண்பு இயல்பானதுதான். ஒரு பெண் இயல்பிலேயே ஒரு குழுவை, ஒரு குடும்பத்தை வழிநடத்தக்கூடியவளாக இருக்கிறாள். அன்பு, பணிவு, ஆளுமை, சட்டென்று முடிவெடுக்கும் திறன், அச்சமின்மை, போராடும் குணம் அனைத்தும் என் பெற்றோர் தந்த வரம்.

**டோலு :** நல்ல பெண் ஆளுமை நீங்க. அதனால கேட்கிறேன். காதல் மற்றும் பாலியல் தொடர்பான செய்திகள் பொதுவெளியில் பெண்கள் பேசுவது தவறாகக் கருதப்படுவது குறித்து என்ன நினைக்கிறீங்க?

**டாலு :** காதல் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான ஒரு பொதுவான உணர்வு. ஒரு பெண்ணைப் பார்க்கும்பொழுது காதல்கொண்ட ஆணிற்கு ஏற்படும் உணர்வுகள் அனைத்துமே ஒரு பெண்ணிற்கும் ஆணின் மீது உண்டாகும். இது இயற்கையின் நியதி. அப்படி ஏதும் நிகழவில்லை என்றால் அவசியமாக மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

(இருவரும் சிரிப்பு)

ஆகச்சிறந்த காதல் என்பது ஒருவர் மீது கொண்டிருந்த நேசம் இருவரின் குடும்பத்தின் மீதான நேசமாக.... தோழமைகளின் மீதான நேசமாக விரிவடைய வேண்டும்... பின் குழந்தைகளின் மீதான நேசமாக விரிவடைந்து சமூகத்தின் மீதான நேசமாக அது மலரும்பொழுது இந்தப் பிரபஞ்சத்தின் மீதான காதலாக மாறும்பொழுது இந்தக் காதல் தனித்துவத்தையும் முழுமையையும் அடைவதாகக் கொள்ளலாம். வெற்றிடத்தையும் நேசிக்கும் பேரன்பு அது... அனுபவித்தவர்களுக்கு மட்டுமே அதன் சுவை தெரியும்.

குறிப்பாக இந்தச் சமூகத்திற்கான அவலங்களைத் தட்டிக் கேட்பவர்கள், சமூகப் போராளிகள் எனப் பல்வேறு சமூக அக்கறைக்குரிய தளங்களில் இயங்குபவர்கள் மிகவும் வறண்ட மனநிலை உடையவர்கள் என்றும், காதல் ரசனை இல்லாதவர்கள் என்றும் ஒரு பொதுக் கருத்து நிலவிவருகிறது. உண்மையில் போராளிகள்தான் ஆகச்சிறந்த காதலர்கள். அல்லது ஆகச் சிறந்த காதலர்கள் போராளிகளாக ஆகிவிடுகிறார்கள்.

சமூகத்திற்காகப் போராடிய பெரியார் அவர்களின் மீது ஒரு பெருங் காதல் எனக்கு உண்டு. உலகத்தில் யாராலும் யோசித்துக்கூட பார்க்க முடியாத சிந்தனை உடைய ஓஷோவின் மீது தீராத பற்று உண்டு. தன் சமூகத்திற்காகப் போராடும் திருமாவளவன் அவர்கள் மீது ஒரு காதல் உண்டு. இன்றைய மொழியில் சொல்ல வேண்டுமானால் crush உண்டு.

எனவே "போராளிகளே ஆகச் சிறந்த காதலர்கள்" என்பேன்.

கார்ல் மார்க்ஸ், ஜென்னியின் காதல். ஹிட்லர், அன்னா காதல் எனப் பெரிய பட்டியல் உண்டு.

சமூகப் பார்வையில் ஆண் ஆதிக்கம் நிறைந்தவனாகப் பார்க்கப்பட்டாலும், பெண்ணிற்குரிய தயக்கம், வெட்கம் அனைத்தும் ஆணுக்கு உண்டு.

பொதுவாக, நன்றாகத் திருப்தியாக உணவு உண்ட பின் நாம் அதைக் குறித்துப் பேசுவது இல்லை. மாறாக அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து விடுகிறோம்.

காதல், காமம் இரண்டுமே அதிகம் பேசப்படுவது அந்த உணர்வில் முழுமைத்தன்மை அடையாதவர்களால்தான். முழுமைத்தன்மை அடைந்தவர்கள் ஞானவான்களாக அடுத்த கட்ட நகர்வுக்குத் தயாராகிவிடுகிறார்கள். எதையும் விழிப்புணர்வுடன் அனுபவிக்கும்போது அது முழுமையடைந்து விடும்.

சரி, உங்களுக்குப் போராட்ட குணம் எப்போது வந்தது?! உங்களின் ரோல்மாடல் யார்?!

**டோலு :** எனது ரோல் மாடல் என்றால் அது என் அப்பாதான். அப்பா ஒரு மிதிவண்டி

வைத்திருந்தார். அதில் நான் அமர்வதற்கென்றே ஒரு ஒயர் கூடையைக் கைப்பிடியில் மாட்டிவைத் திருப்பார். அவர் கால்கள் அடைந்த வலியின் வழியாகவே என் வெளி திறந்துகொண்டது. அவரின் விழிவழியே அறிமுகமான இந்த உலகத்தை அவரைப் போலவே நான் எதிர்கொள்கிறேன்.

சாதி மாறித் திருமணம் செய்தால் கொலை கூடச் செய்யும் சமூகத்தில் திருமணத்திற்கு வரன் பார்ப்பதற்கு முன்பு என்னிடம் யாரையாவது காதலிக்கிறாயா, அப்படி ஏதாவது இருந்தால் பேசலாம் என்று சொன்னவர். சமூக அவலங் களைத் தட்டிக் கேட்பதும் சுயமரியாதைக்குப் பங்கம் வரும்போது அவர் காட்டிய எதிர்ப்புமே என்னுள் போராடும் குணத்தை விதைத்தன. அவருக்காக ஒரு கார் வாங்கி அதில் அப்பாவை முன் இருக்கையில் ஏற்றிக்கொண்டு அவர் விழிவழியே கண்ட உலகத்தை அவருக்குப் புதிதாய்க் காட்ட வேண்டும். இதுவே என் நீண்டகால ஆசை. அடுத்துச் சொல்லணும்னா என் தம்பியும் நண்பர்களும், என் இணையரும், ஆசான்களும் ஒவ்வொரு தருணங்களில் எனக்கு ரோல்மாடலாக இருந்திருக்கிறார்கள்.

**டாலு :** நீங்க பணிபுரியும் இடத்தில் இயங்கும் பெண்கள் எப்படி?

**டோலு :** எனக்குப் பெண்களை விட ஆண் நண்பர்களே அதிகம். அதனால் வேலை பார்க்குமிடத்தில் சக பெண்களின் விமர்சனத்திற் குள்ளாவதே எனக்கு வேலையாக இருக்கும்.

**டாலு :** (சிரித்தபடி) கவிதைத் தளத்தில் இயங்கும் பெண்கள்..

**டோலு :** கவிதைத் தளத்தில் இயங்கும் பெண்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் ஒவ்வொரு பெண்ணும் பெரும் சக்தியாகவே தெரிகின்றார்கள். ஒவ்வொருவருக்குள்ளும் அத்தனைத் திறமைகள். தனித்தனியாகப் பெயர் சொல்ல முடியவில்லை. ஆனால் ஒரு பெண் உடலரசியல் பேசி என்மீது அவதூறு பரப்பிய செய்தியை நண்பன் மூலமாக அறிந்து வருந்தினேன். ஆனாலும் அவரின் கவிதைத் தொகுப்பை வாங்கி வாசித்ததில் சக கவிஞராக அவரை மனதார வாழ்த்துகிறேன்.

**டாலு :** அனிருத் என்ற மொழிமாற்றுப் படத்தில் பாடல் எழுதிய அனுபவம் எப்படியிருந்தது?

**டோலு :** ஒருமுறை இயக்குனர் ஏ.ஆர்.கே ராஜராஜா அவர்கள் தனது முகநூல் பக்கத்தில் பெண் கவிஞர்களுக்குப் பாடலாசிரியர் வாய்ப்புக் கொடுப்பதாகப் பதிவொன்றைப் போட்டிருந்தார். கவிஞர் நிகரன் அவர்கள்தான் அந்தப் பதிவில் என்னை இணைத்தார். இயக்குனர் என்மீது நம்பிக்கை வைத்து அந்தப் பாடலை எழுத அனுப்பி வைத்தார். பல பல்லவிகளையும் சரணத்தையும் எழுதி மெயிலில்தான் அனுப்பினேன். அடிக்கடி திருப்பூருக்கும் சென்னைக்கும் பயணம் செய்ய இயலாத என் பொருளாதாரச் சூழலைப் புரிந்துகொண்ட அவரும் பாடல் வெளியீட்டின்போதுதான் என்னை நேரில் அழைத்தார். அந்தப் பாடல் வெளியீடு முடிந்து அந்தப் பாடலுக்காக எனக்கு ஆயிரத்து ஒரு ரூபாயைச் சம்பளமாகக் கொடுத்தார்.

**டாலு :** பெரும் பாடலாசிரியராக வர வாழ்த்துக்கள்..

**டோலு :** மறைநீர் நாயகிக்கும் என் வாழ்த்துக்கள்..

*(இருவரின் சிரிப்பிலும் இயற்கையின் மகிழ்ச்சி தெரிந்தது)* ■

**மகளிர் தினச் சிறப்பிதழ் என்பதனால் தொடர்கள் இவ்விதழில் இடம்பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து வழக்கம்போல் இடம்பெறும்.**

படைப்பு

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்



**ஆதரவளித்துவரும் அனைத்து வாசிப்பாளர் அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்**



ISSN : 2582-4015